# யோபு, சங்கீதம், நீதிமொழிகள் பிரசங்கி மற்றும் உன்னதப்பாட்டு

## தேவனுடைய மக்கள் ஏன் துன்பம் அனுபவிக்கின்றனர்?

வேத பாடசாலை
67, பராக்கா ரோடு
கீழ்ப்பாக்கம்
சென்னை - 600 010.

**Job through Song of Solomon**
Booklet - 5
Tamil

© IBL
2003

Cover Credit : Cynthia Kingston
Printed by :

For additional booklets write to :
**India Bible Literature**
67, Beracah Road, Kilpauk
Chennai - 600 010.

Ph : 26425166 Fax : 26428298
E-mail : ibl.maa@iblchennai.org

## கவிதைப் புத்தகங்கள்

*இந்த ஆய்வில், பழைய ஏற்பாட்டிலுள்ள ஐந்து கவிதைப் புத்தகங்களை மேற்பார்வையிடுவதோடு நாம் ஆரம்பிப்போம். அவைகள் : யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி மற்றும் சாலொமோனின் உன்னதப்பாட்டு. அவைகளை பழைய ஏற்பாட்டிலுள்ள பிரமாணப்புத்தகங்கள், வரலாறு மற்றும் தீர்க்கதரிசிகளின் புத்தகங்களிலிருந்து பிரித்துக் கூறுவதற்காக ''கவிதைப் புத்தகங்கள்,'' ''ஞானப் புத்தகங்கள்'' அல்லது ''எழுதப்பட்டவைகள்'' என பிரிக்கப்பட்டுள்ளன.*

*ஏவப்பட்ட வேத வசனங்களில் கவிதைப் புத்தகங்கள் அடங்கியிருக்கின்றன. ஏனென்றால் கவிதை இருதயத்தின் உணர்வுகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துகிறது. வேதத்தில் தேவன் தமது மக்களின் இருதயத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி அறிந்துள்ளார் என்பது தெரியும். வேதாகமத்தின் கவிதைப் பகுதியின் மூலம் மக்கள் துன்பம் அனுபவிக்கும் போது (யோபு), ஆராதிக்கும் போது (சங்கீதம்), திருமணம், குடும்பம், பொது இடங்களில் ஒவ்வொரு நாளிலும் ஏற்படும் மன அழுத்தங்களைச் சமாளிக்கும் போது (நீதிமொழிகள்), அவர்கள் சந்தேகப்படும் பொழுது (பிரசங்கி), ஒரு கணவனும் மனைவியும் தங்களுக்கிடையேயுள்ள சரீர ஒருமையையும் நெருக்கத்தையும் சந்தோஷமாகப் பகிர்ந்து கொள்ளும் போது (சாலொமோனின் உன்னதப்பாட்டு) எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்று தேவன் தம்முடைய மக்களுடைய இருதயங்களில் பேசுகிறார்.*

*ஏவுதலால் எழுதப்பட்ட இந்த ஐந்து புத்தகங்களையும் தேவன் எழுதியபொழுது, அவர் நம்முடைய இருதயங்களுக்காக அதிக அக்கறையுடையவராயிருக்கிறார் என்பதை செயல்முறையில் காட்டுகிறார். இந்த ஐந்து கவிதைப் புத்தகங்களையும் நாம் வாசிக்கும் போது, நம்முடைய உள்ளான மனிதனை தேவனுடைய விரல் அழுத்துவதை நாம் உணரவேண்டும். அது நம்முடைய விசுவாசத்தை உறுதிப்படுத்தி, நமக்கு தேவனோடுள்ள அனுபவத்தினால் நாம் முற்றிலுமாக மாற்றப்பட வேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இதற்காகவே தேவன் நமக்குக் கவிதைப் புத்தகங்களைக் கொடுத்திருக்கிறார்.*



அத்தியாயம் 1

## யோபுவின் புத்தகம்

கவிதைப் புத்தகங்களின் முதல் புத்தகத்தின்படி, வாழ்க்கை கடினமானது, அது வெற்றிபெற செய்வதும் கலக்கமடைய செய்வதுமான துன்பங்களினால் நிறைந்திருக்கக்கூடும் என்று காண்கின்றோம். தேவனுடைய மக்கள் எப்போதும் துன்பம் அனுபவித்தனர். சபை வரலாற்றின் பிற்பகுதியை விட இரண்டாம் உலகப்போர் முடிவடைந்த பின் தங்கள் விசுவாசத்துக்காகத் துன்புறுத்தப்பட்டு மரித்தவர்களின் எண்ணிக்கை அதிகமானது. வேதாகமத்திலேயே பழமையான புத்தகமாக எண்ணப்படும் புத்தகம் வேதனையும் துன்பமும் தவிர்க்க முடியாதவை; ஆனால், துக்கமும் நம்பிக்கையின்மையும் நாம் தெரிந்து கொள்பவைகளே என்று சொல்கிறது. யோபுவின் புத்தகம், தேவனுடைய மக்களின் இருதயங்கள் காயப்பட்டபோது, அவர்களுடைய இருதயங்களுக்கு தேவன் கொடுத்த செய்தியாகும்.

இந்தப் புத்தகம் முற்பிதாக்களின் காலங்களில் எழுதப்பட்டது என்று அநேகக் கல்விமான்கள் ஒத்துக்கொள்கின்றனர். யோபு, தான் துன்பப்பட்ட காலத்திற்குப்பின் நூற்று நாற்பது ஆண்டுகள் வாழ்ந்திருந்தான். ''நெடுநாளிருந்து, பூரண வயதுள்ளவனாய் மரித்தான்'' (யோபு 2:17) என்று வாசிக்கிறோம். அவனுடைய ஆயுட்காலம் ஆதியாகமத்தில் நாம் காண்பவர்களின் வயதுக்கு இணையானதாயிருக்கிறது.

### யோபுவினுடைய சரித்திர புத்தகத்தின் இலக்கிய வடிவம்

வேத வசனங்களின் புனித நூலகத்தில் இந்தப் புத்தகம் எங்கே இடம் பெற்றிருக்கிறது என்பதைக் கருத்தில் கொள்ளும் பொழுது, யோபுவின் புத்தகம் இலக்கிய வடிவம் கொண்டது என்பதை அறிகிறோம். எழுதப்பட்ட எல்லாக் கவிதைகளிலும் இந்தப் புத்தகம் மிகப்பெரிய கவிதையாகும். யோபு புத்தகம் ஒரு நாடகமாகவும் அளிக்கப்பட முடியும், அப்படியே அளிக்கப்பட்டுள்ளது. இந்த கருத்துமிக்க தேவனுடைய செய்தியை காயமடைந்த இருதயங்களுக்கு மூன்று காட்சிகள் உள்ள நாடகமாகக் கொடுப்பதைப்பற்றி சிந்தித்துப்பாருங்கள்.

முதல் காட்சி, வேதாகமத்தின் மிகப்பழமையான ஒரு கதையின் காட்சி அமைப்பைக் கொடுக்கிறது.

## காட்சி – ஒன்று

# பின்னணி

காட்சி ஒன்றில் முதலாவது தேவனும் சாத்தானும் யோபு என்ற ஒருவனைப்பற்றிப் பேசிக்கொள்கிறார்கள். முதல் காட்சி நன்மைக்கும் தீமைக்குமிடையே நடைபெறும் போராட்டத்தைப்பற்றிய ஆழ்ந்த அறிவைப் போதிக்கிறது. மிகவும் உயர்ந்தவனாயிருந்த நல்ல மனிதனாகிய யோபுவின் நோக்கங்களைச் சவால் விடுபவனாக சாத்தான் தீமையின் உருவமாகக் காட்டப்படுகிறான். இறையியல்வாதிகள் ''அனுமதிக்கக்கூடிய தேவ சித்தம்'' (the permissive will of God) என்றழைக்கும் கருத்தோடு தேவன் இந்தச் சவாலுக்குப் பதிலளிக்கிறார். தேவன் ஒரு எல்லைக்குள் தீமை செயல்படும்படி - யோபுவின் எல்லாவற்றையும், அவனுடைய பத்துப் பிள்ளைகள் உட்பட எடுத்துக்கொள்ள சாத்தானுக்கு உரிமையளிக்கிறார். திரண்ட செல்வத்தால் தேவன் அவனை ஆசீர்வதித்திருப்பதினால் தான் யோபு நீதிமானாயிருந்தான் என்று சாத்தான் குற்றஞ்சாட்டினான். தேவன் யோபுவின் ஆசீர்வாதங்களெல்லாவற்றையும் எடுத்துக்கொண்டால் யோபு தேவனை சபிப்பான் என்றும் சாத்தான் கூறினான்.

தேவனுடைய அனுமதிக்கும் சித்தத்தினாலும், சாத்தானுடைய தந்திர உபாயங்களாலும், யோபு தன்னுடைய ஏழு மகன்களையும், மூன்று மகள்களையும், ஏழாயிரம் ஆடுகளையும் மூவாயிரம் ஒட்டகங்களையும், ஆயிரம் காளைகளையும், ஐநூறு கழுதைகளையும், அநேக வேலைக்காரர்களையும் இழக்கிறான்.

அவன் சகித்துக் கொண்ட இழப்புகள் அவனை மேற்கொண்டாலும், யோபு தன் துன்பங்களில் தேவனை சபிக்கவோ, நிந்திக்கவோயில்லை. யோபு, *''நிர்வாணியாய் என் தாயின் கர்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் அவ்விடத்துத் திரும்புவேன்; கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்''* (யோபு 1:21). கன்பூசியஸ் என்ற சீன ஞானி, ''இவ்வுலகத்தினுள் வரும்போது நாம் கைகளை மூடிக்கொண்டு எல்லாம் வேண்டியவர்களாய் வருகிறோம். இந்த உலகை விட்டுப்போகும் போது திறந்த கைகளையுடையவர்களாய் எதையும் எடுத்துப் போவதில்லை'' என்று கூறினார்.

யோபு தான் பிறக்கும் போது தன் கைகள் திறந்திருந்தன என்றும் தன் உடைமைகள் எல்லாம் தேவனால் கைகளில் வைக்கப்பட்டன அவர் ஒருபொழுதும் கைகளை மூடியதில்லை. இந்த உடைமைகளெல்லாம் தேவனுடையதாயிருந்தன, தேவன் எப்பொழுது எடுத்துக் கொள்ள



வேண்டுமோ அப்பொழுது எடுத்துக் கொள்ளும்போதும் அவைகள் தேவனுடையவைகளாயிருந்தன, என்றான்.

யோபு தன்னுடைய முதலாவது சோதனையில் அபாரமாக வெற்றியடைந்தான்! கர்த்தர் அவனுடைய பிள்ளைகளையும், அவனுடைய எல்லா உடைமைகளையும் எடுத்துக்கொண்டார் என்று சொல்லியதில் ஓரளவு தவறு இருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். நாம் இந்தக் காட்சிக்குப் பின்னால் பார்க்க முடிவதால், அவனுடைய எல்லா உடைமைகளையும் எடுத்தவன் சாத்தான் என்று நமக்குத் தெரியும்.

தன்னுடைய எல்லா உடைமைகளையும் யோபு எப்படி இழந்தான் என்று கவனியுங்கள். அவனுடைய மூத்த மகன் வீட்டில் வனாந்தர வழியாய்ப் பெருங்காற்று மோதியதால் வீடு இடிந்து அவர்கள் மேல் விழுந்து அவனுடைய பத்து பிள்ளைகளையும் அவன் இழந்தான். ''வானத்திலிருந்து அக்கினி'' இறங்கியதின் விளைவாக அவன் ஆடுகளையும் வேலையாட்களையும் இழந்தான். இந்த அக்கினி மின்னலாயிருந்திருக்கலாம். இத்தகைய செயல்களை இன்ஷூரன்ஸ் ஸ்தாபனங்கள் ''தேவனுடைய செயல்கள்'' என்றழைக்கின்றன. எனினும் இவை தேவனுடைய அனுமதியோடு செய்யப்படும் சாத்தானின் செயல்கள் என்று நமக்குத் தெரியும், ஆனால் யோபுவுக்குத் தெரியாது.

தேவனும் சாத்தானும் யோபுவைப்பற்றி இன்னொரு முறை பேசினார்கள். இரண்டாவது முறையும் தேவன் யோபுவை நல்ல முன்மாதிரியான நீதிமான் என அவனை ஆதரித்தார். மீண்டும் சாத்தான் யோபு நீதிமானாயிருப்பதன் நோக்கங்களுக்குச் சவாலிட்டான். யோபுவைத் துன்புறுத்தும்படி **தேவன் உத்தரவு** கொடுத்தால் யோபு தேவனை சபிப்பான் என்று சாத்தான் வெளிப்படையாகக் கூறினான். ஒரே ஒரு வரம்புக்குள், யோபுவைத் துன்புறுத்த தேவன் சாத்தானை அனுமதித்தார். அவன் யோபுவின் உயிரை மட்டும் எடுக்கக் கூடாது என்பதே அது. தேவன் யோபுவை துன்பப்படுத்த அனுமதியளிக்கிறார் ஏனென்றால் துன்பப்படுத்துவது என்பதின் வரையறையே அதுதான் - உங்கள் துன்பங்களுக்கு இலக்கானவரின் உயிரை எடுக்காமல் எவ்வளவு துன்பங்களைக் கொடுக்க முடியுமோ அவ்வளவு துன்பங்களைக் கொடுப்பது என்று நீங்கள் சொல்லலாம். யோபு ஒரு பயங்கர வியாதியால் துன்பப்பட்டார். அது யானைக்கால் போன்ற, உங்கள் சதையை யானைத்தோலின் நிறமாக்கி, தொழுநோயாளியைப்போல பருக்களிலிருந்து நீர் வடியச்செய்யும் ஒரு வகைப் புற்றுநோய் என்று கல்விமான்கள் எண்ணுகின்றனர்.

யோபு இந்த இரண்டாவது சுற்றைச் சரியாகக் கையாளவில்லை. அவன் மனைவி, தேவனை அவன் நிந்தித்து உயிரைவிடும்படி யோசனையளிக்கிறாள். அவன், ''தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ,'' (யோபு 2:10) என்று பதிலளித்தான்.

யோபு புத்தகத்தின் பெரும்பகுதி யோபுவின் மனைவி அவனிடம் கேட்கும் கேள்வியால் அறிமுகப்படுத்தப்படுகிறது. முதல் காட்சியின் முடிவில் திரை விழுவதற்குக் கொஞ்சம் முன்பு, யோபுவைப் பார்க்க அவனுடைய ஞானாவான்களான நண்பர்கள் மூன்று பேர் வந்தார்கள் (2:11). அவர்கள் அவனுக்கு ஆறுதல் சொல்லும்படி ஒன்றாக வந்தார்கள். யோபுவைப்போல இந்த மனிதர்களும் முதிர்வயதடைந்தவர்கள். அவர்கள் ஞானாவான்கள் என்றும், தெய்வ பக்தியுள்ளவர்கள் என்றும் கருதப்பட்டவர்கள். இன்று நாம் அவர்களை தத்துவ ஞானிகள் அல்லது இறையியல் வல்லுநர்கள் என்றழைப்போம். யோபுவின் சரீரத் தோற்றத்தைப்பார்த்து அதிர்ச்சியடைந்த அவர்கள் ஏழு நாட்கள் அவனோடு எதுவும் பேசாமல் மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள். (பின்னர் யோபு இந்த அவர்களது ஒரு வார மௌனம் தனது துக்கத்தைக் குணப்படுத்தும் சிறந்த முறையாயிருந்தது என்று கூறினான்.) யோபு தன்னுடைய மூன்று நண்பர்களுடன் வட்டமாக உட்கார்ந்திருப்ப தோடு காட்சி ஒன்று முடிவடைந்து திரை கீழே வருகிறது.

**காட்சி இரண்டு**

## பகிர்ந்து கொள்ளுதல்

காட்சி இரண்டு துவங்கும் போது, யோபுவின் மூன்று நண்பர்களான எலிப்பாஸ், பில்தாத், சோப்பா, ஆகியோரை நாம் சந்திக்கிறோம். அவர்கள் யோபுவுடன் தங்கள் வருகையின் முதல் ஏழு நாட்களில் அமைதியான துக்கத்துடன் உட்கார்ந்திருந்தது, ஆறுதல் அளிப்பவர்களுக்கு ஒரு முன் மாதிரியாய் இருந்தது. ஏனெனில் அவர்கள் அவனோடு உட்கார்ந்திருந்ததே ஒரு ஆறுதலாக இருந்தது. மக்கள் துன்பப்படும்போது, ஒரு நண்பன் கூட இருப்பது, வார்த்தைகளை விட அவசியமானது.

எனினும், யோபுவினுடைய நண்பர்கள் அவனுடைய துன்பங்களைப்பற்றி விவாதிக்கத் துவங்கியதும் அவர்கள் ஆறுதலைத் தரவில்லை. யோபு இந்தக் காட்சியைத் துவங்குகிறான். இதை நான் பகிர்ந்து கொள்வது என்றழைக்கிறேன். இதில் யோபு தான் பிறந்த நாளையும், கர்ப்பத்தில் உருவான இரவையும் சபிக்கிறான். சாத்தான்



சொல்லியபடி அவன் தேவனை சபிக்கவில்லை. இந்த புத்தகத்தின் பெரும் பகுதியானது ஒரு வடிவமைப்பைப் பின்பற்றுகிறது. முதல் சம்பாஷணையை யோபு துவக்கிவைக்கிறான். அதனைத் தொடர்ந்து நண்பர்களில் ஒருவன் பேசுகிறான். அதை யோபு மறுத்துப் பேசுவான். இந்தப்படியான சுற்றில் அவர்கள் மூன்றுமுறை சம்பாஷித்தனர்.

எலிப்பாஸ் தான் தேவனிடமிருந்து நேரடியாக, பொருட்செறிந்த ஒரு ஆவிக்குரிய அனுபவத்தைப் பெற்றுக் கொண்டதாகவும் அதன்படி மனிதன் தேவனுடைய, நீதியின் இரக்கத்திற்குட்பட்டவன் என்றும் கூறுகிறான். தேவனிடமிருந்து இந்த வெளிப்படுத்தலை அவன் நேரடியாகப் பெற்றுக்கொண்டதால், அவன் யோபுவிடம், அவனுக்கேற்பட்ட துன்பம் அவன் செய்த பாவத்தால் ஏற்பட்டது என மிகவும் அதிகாரத்தோடு சொல்ல முடிந்தது (யோபு 4 :12-21).

பில்தாத் யோபு வேதனைப்படுவதற்குக் காரணம், அவனுடைய பிள்ளைகள் செய்த பாவமே என்ற முடிவுக்கு வந்தான் (யோபு 8:1-7). அதுமட்டுமல்ல, யோபுவும் பாவம் செய்தவன் என்று கூறினான்.

சோப்பார் கடவுள் நம்பிக்கையற்றவன். மனிதன் எதற்காகத் துன்பப்படுகிறான் என்பதை அவனால் தெரிந்துகொள்ள முடியாது, ஆனாலும் அதைப்பற்றி ஆழ்ந்து சிந்திப்பது புத்திசாலித்தனம் என்ற கருத்தைக் கூறினான் (யோபு 11:7-12). சோப்பார் தனது சிநேகிதர்களோடு சேர்ந்து யோபுவினுடைய நிலைக்குக் காரணம் அவனுடைய வாழ்க்கையின் பாவமாயிருக்க வேண்டும் என்று ஒத்துக்கொண்டான். இப்படி ''ஆறுதல் அளிப்பவர்கள்'' மூவரும் யோபுவைப் பாவ அறிக்கையிட்டு மனந்திரும்பும்படிப் புத்தி கூறினார்கள்.

யோபுவின் நண்பர்கள் தேவன் நல்ல காரியங்களை நல்ல மனிதர்கள் கையிலும், இதற்கு எதிரானதை தீயவர் கைகளிலும் கொடுப்பார் என்று ஒத்துக்கொண்டனர். அவர்களுடைய தடுமாற்றம், யோபு ஒரு நீதிமானாகக் காணப்பட்டாலும் தீமையான காரியங்களைத் தேவன் அவன் கைகளில் வைப்பது ஏன் என்பதே. இந்தத் தடுமாற்றத்துக்குத் தீர்வுகாண முயற்சி செய்தபோது அவர்கள் ஒருவருக்கொருவர் ஒத்துப்போகாமலிருந்தது மிகவும் குத்துவதாகவும் சில நேரங்களில் கோபமூட்டுவதாகவுமிருந்தது.

தங்கள் சம்பாஷணை முழுவதிலும் யோபுவின் நண்பர்கள் அவன் ஒரு அநீதியுள்ளவனாகத்தான் இருக்க வேண்டும் என்று ஒத்துக்கொண்டனர். அவன் ஒரு நீதிமானாகத் தெரிவதால், அவனுடைய வாழ்க்கையில் ஏதோ ஒரு இரகசிய பாவம் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு

வந்தனர். அவர்களில் ஒருவன் யோபு ஒரு சித்தப் பிரமை பிடித்தவன் என்றழைத்து, அவன் பெறத்தகுதியுள்ளவைகளைவிடக் குறைவாகவே தேவன் அவனைத் தண்டிக்கிறார் என்று அவனிடம் சொன்னான். மற்றொருவன் யோபுவின் பிள்ளைகளின் வாழ்க்கைகளின் பாவமே அவர்கள் உயிரை எடுத்தது, இந்தப் பயங்கரமான பாடுகளால் தேவன் நடவடிக்கை எடுக்க வேண்டியதாயிற்று என்றான். அவர்களெல்லாரும் யோபு தன்னுடைய பாவங்களை அறிக்கையிட்டு மனந்திரும்ப வேண்டும் என்று ஊக்கப்படுத்தினர். அவர்களுடைய சம்பாஷணை ஏன் யோபுவை ஆறுதல்படுத்தவில்லை என்று எளிதில் நீங்கள் கண்டு கொள்ளலாம்.

அவனுடைய சம்பாஷணையில், யோபு தான் நீதிமான் என்று உறுதியாய்க் கூறினான். தான் நீதிமான் என்ற திட நம்பிக்கையோடிருந்ததால், இந்தப் பாடுகளைத் தேவன் தன் மீது சுமத்தியது நியாயம்தானா என்று கேள்வி எழுப்பினான். யோபுவை ஒரு பாவி என்று தாங்கள் ஒருக்காலும் நம்ப வைக்க முடியாது என்று கூறுவதோடு இந்த சம்பாஷணை முடிவடைகிறது.

யோபுவின் நண்பர்கள் ஆவிக்குரியவர்களும் கல்விமான்களுமாயிருந்ததால், பின்னர் தேவன் சுருக்கமாக அவர்களிடம், ''என் தாசனாகிய யோபு பேசினது போல், நீங்கள் என்னைக்குறித்து நிதானமாய்ப் பேசவில்லை'' (யோபு 42:7-9) என்று சொன்னார்.

தேவன் ஒரு பெருங்காற்றில் யோபுவோடு பேசியபின், தன் நண்பர்களோடு பேசிய இந்த சம்பாஷணை முழுவதிலும் தான் நீதிமான் என்று நம்பிக்கை தெரிவித்த யோபு, பின்னர் தான் நீசன் என்று சொல்லுகிறான் (யோபு 40:4). யோபுவினுடைய நண்பர்களின் சம்பாஷணைகளை நீங்கள் வாசிக்கும் பொழுது, புத்தகத்தின் கடைசியில் அவர்கள் யோபுவைப் பற்றியும் தேவனைப்பற்றியும் சொன்னதெல்லாம் தவறு என்று அவர்களுக்கு அவர் சொல்லுகிறார். யோபுவின் சம்பாஷணைகளை வாசிக்கும் போது, முதலில் தான் நீதிமான் என்று கூறினாலும் இறுதியில் யோபு தேவனைக் கண்டு தன்னையே அருவருத்து தூளிலும் சாம்பலிலுமிருந்து மனஸ்தாபப்பட்டான். இந்தக் கேள்வியை உங்களிடமே கேட்டுக்கொள்ளுங்கள், ''யோபு ஏன் தன்னை அருவருத்தான், எதற்காக மனம் வருந்தினான்?''

யோபுவின் துன்பங்களுக்கு அவனுடைய பாவம் தான் காரணம் என்று இனி வலியுறுத்தப் போவதில்லை என்று அவன் நண்பர்கள் தீர்மானிக்கின்றனர். யோபு பேசியபின் இரண்டாம் காட்சி முடிவடைகிறது.



அத்தியாயம் 2

## காட்சி மூன்று

## தீர்வு

காட்சி மூன்றுக்காக திரை உயரும்போது, யோபுவும் அவன் நண்பர்களும் சுற்றி உட்கார்ந்திருக்கின்றனர். ஆனால் அவர்களோடு இன்னொரு மனிதனும் இருக்கிறான். அவன் பெயர் எலிகூ. அவன் யோபுவையும் அவன் நண்பர்களையும் விட வயதில் மிக்குறைந்தவன். அந்த இளைஞன், தான் வயதில் சிறியவனாகவும் அவர்கள் வயது அதிகமுடையவர்களாகவுமிருந்ததால், தான் விலகி இருந்ததாக விளக்குகிறான். எனினும் இரண்டு காரணங்களுக்காக அவன் பேசத் தீர்மானித்தான். முதலாவதாக, ஒருவனது ஞானம் என்பது பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வருகிறது. அதற்கு வயது வரம்பு கிடையாது. இரண்டாவது காரணம், அவர்கள் கேள்விக்குப் பதிலே கிடையாது. ஏனெனில் அவர்கள் தவறான கேள்விகளைக் கேட்கின்றனர்.

யோபுவின் பாடுகளைப்பற்றிய தடுமாற்றத்திற்கானத் தீர்வு எலிகூவினுடைய சம்பாஷணையிலும் அதற்கு யோபு கொடுத்த மறுமொழியிலும் காணப்படுகிறது. இந்த உரையாடலின் முக்கிய பகுதி, எலிகூ யோபுவை மேலே அண்ணாந்து பார்த்து தேவனுடைய பரிமாணத்தில் அவன் துன்பங்களுக்கெல்லாம் என்ன பொருள் என்று கண்டுகொள்ளச் சொன்னது. ஏவப்பட்ட இந்த வாலிபனின் கருத்துப்படி, யோபு தன் மனைவியிடம் கேட்ட அந்தக் கேள்வி தவறானது. ஏனெனில் யோபினுடைய திறந்த கைகளை அவன் பாடுகளின் மத்தியில் வைத்தது. எலிகூ அந்தத் தவறான கேள்வியை சரியான கேள்வியினால் மாற்றியமைத்தான் :

> *''என் நீதி தேவனுடைய நீதியைப்பார்கிலும் பெரியதென்று நீர் சொன்னது நியாயம் என்று எண்ணுகிறீரோ? நான் பாவியாயிராததினால் எனக்கு பிரயோஜனமென்ன? பலன் என்ன? என்று சொன்னீர். உமக்கும் உம்மோடே இருக்கிற சிநேகிதருக்கும் நான் பிரதியுத்தரம் சொல்லுகிறேன். நீர் வானத்தை அண்ணாந்து பார்த்து, உம்மைப் பார்க்கிலும் உயரமாயிருக்கிற ஆகாய மண்டலங்களைக் கண்ணோக்கும். நீர் பாவஞ்செய்தால் அதனாலே அவருக்கு என்ன நஷ்டம்? உம்முடைய மீறுதல்கள் மிகுதியானாலும், அதனாலே அவருக்கு என்ன சேதம்? நீர் நீதிமானாயிருந்தால், அதனாலே அவருக்கு என்ன கிடைக்கும்? அல்லது அவர் உம்முடைய கையில் என்ன லாபத்தைப்பெறுவார்?'' (யோபு 35:2-7).*

உன்னுடைய திறந்த கையை பாடுகளின் மையத்தில் வைத்து, ‘‘என்னுடைய கையில் தேவன் எதை வைக்கப்போகிறார்?’’ என்று கேட்பது தேவனோடு உள்ள நம் உறவில் தவறான கேள்வியும், மனநிலையு மாயிருக்கிறது. மனிதனுடைய முக்கிய நோக்கம் தேவனை மகிமை படுத்துவதேயாகும். இதன் அர்த்தம், தேவனுடைய திறந்த கையை நம் பாடுகளின் மையத்தில் வைத்து, எப்பொழுதும் ‘‘தேவனுடைய கையில் நான் எதை வைக்கிறேன்?’’ என்ற கேள்வியைக் கேட்பவராயிருக்க வேண்டும்.

யோபு, இன்று நாம் கேள்விப்படும் இலாபகரமான ஒரு விசு வாசியைப் போல் இருந்தான் என்று சாத்தான் குற்றஞ்சாட்டினான். அப் பங்களுக்காவும் மீன்களுக்குக்காவும் இயேசுவைப் பின்பற்றியவர் களைப் போல, யோபு நீதிமானாக வாழ்ந்த போது, திறந்த கையோடி ருந்தான். இதற்குமுன் நான் இந்தக் கேள்விகளைக் கேட்டிருக்கிறேன், ‘‘தேவனைக் கண்டபோது யோபு ஏன் தன்னை அருவருத்தான்?’’ மேலும், ‘‘தேவனைக் கண்டபோது எதிலிருந்து அவன் மனந்திரும் பினான்?’’ தேவனோடு உள்ள அவன் உறவானாலும், எலிகூவின் சம் பாஷணையிலிருந்தும் யோபு தேவனோடுள்ள உறவின் மையத்தில் அவன் தன் கையை வைக்கிறான் என்று நான் நம்புகிறேன். தேவன் அவனுக்குத் துன்பங்களை பயன்படுத்தி அதை வெளிப்படுத்தும் வரையில் அவன் அதைத் தெரிந்துகொள்ளாமலிருந்தான். தான் தேவ னைத் தன் சுயலாபத்துக்காக பயன்படுத்தியதை உணர்ந்து கொண்ட பொழுதே தன்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் உட்கார்ந்து மனஸ்தாபப்பட்டான்.

யோபு தனக்கு ஆறுதல் கூறிய யாவற்றையும் சரியென்று ஏற்றுக் கொள்ளாமலிருந்தாலும், அவன் இந்த வாலிபன் சொன்னதை ஒத்துக்கொண்டான். அந்த வாலிபன் கூறிய காரியத்தைச் செய்தான். அவன் மேலே அண்ணாந்து பார்த்தான். அப்படிச் செய்தபொழுது பெருங்காற்றில் தேவனைக் காண்கிறான்.

அவனும் தேவனும் சிறிது நேரம் உரையாடுகின்றனர். அதன்பின் அவன், ‘‘இதோ, நான் நீசன்.... என் கையினால் வாயைப் பொத்திக் கொள்ளுகிறேன்.... இனி நான் பிரதியுத்தரம் கொடாமலும் பேசாமலும் இருப்பேன்’’ என்று கூறினான். இன்னும் தேவனோடு அவன் செய்த பல உரையாடலுக்குப்பின் யோபு, *‘‘என் காதினால் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்டேன்; இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது. ஆகையால், நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன் என்றான்’’ (யோபு 42:5-6).*



அப்படி, யோபு மனஸ்தாபப்பட்டதற்குப்பின், தேவன் அவன் நண்பர்களைக் கடிந்துகொள்ளுகிறார். யோபு தன்னுடைய நண்பர் களுக்காக ஜெபித்தான். யோபு அவர்களுக்காக ஜெபித்தபொழுது, தேவன் யோபுவுக்கு இருந்த எல்லாவகைகளையும் இரண்டத்தனை யாகத் தந்தருளினார்.

யோபுவின் எல்லா செல்வத்தையும் இரண்டத்தனையாய் திரும்பக் கொடுத்தார்; அவனுக்கு இன்னும் ஏழு குமாரர்களையும் மூன்று குமாரத்திகளையும் கொடுத்ததோடு காட்சி மூன்று முடிவடைந்து திரை கீழே விழுகிறது.

## தனிப்பட்ட வாழ்க்கையில் செயல்படுத்துதல்

தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்ட முதல் ஐந்து கவிதைப் புத்தகங்களும் காயப்பட்ட இருதயங்களுக்கு ஆறுதல் கொடுப்பதற்காக எழுதப்பட்டவை. ஒரு வகையில் பழங்கால பாடனுபவித்த இந்தக் கதை இயேசு மலைப்பிரசங்கத்தில் போதித்த ஒரு தெளிவான எடுத்துக் காட்டை ஒத்திருக்கிறது. *‘‘துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்’’ (மத்தேயு 5:4).*

பெரும்பாலும் ஒரு புதிய ஏற்பாட்டுப் போதனை பழைய ஏற்பாட்டில் தெளிவாக காட்டப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் இந்தப் பெரிய போதனையை ஒரே வாக்கியத்தில் இயேசு அளிக்கிறார். ஆனால் யோபு புத்தகம் இந்த அத்தியாயத்தை ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையோடு இணைத்து, துயரப்படுகிறவர்களுக்கு ஆறுதலளிக்கும் மூன்று படிகளைக் கூறுகிறது.

**முதல்படி :** ஒரு வேளை உங்கள் வாழ்க்கையில் முதல் முறையாக, சரியான கேள்வியைக் கேட்க உங்கள் துன்பங்கள் உங்களை வழிநடத்தட்டும். யோபு எப்படி நமக்கு ஒரு மாதிரியாக இருந்தான் என்பதைக் கவனியுங்கள். அவனுடைய துன்பங்களினால் எப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கத் தள்ளப்பட்டான் என்பதைக் கவனியுங்கள். *‘‘மனுஷனோவென்றால் செத்தபின் ஒழிந்துபோகிறான், மனுபுத்திரன் ஜீவித்துப்போனபின் அவன் எங்கே? மனுஷன் செத்தபின் பிழைப்பானோ? எனக்கு மாறுதல் வருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன்’’ (14:10,14). நம் பாடுகளின் போது இப்படிப்பட்டக் கேள்விகளை நாம் கேட்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.*

**இரண்டாம் படி** : உங்களது கேள்விகளுக்குத் தேவனுடைய பதில்களைக் கேட்கக்கூடிய ஒரு இடத்திற்கு உங்கள் புலம்பல் உங்களைக் கொண்டு வரட்டும். யோபு இந்த கேள்வியைக் கேட்டான்: *''மனுஷன் செத்தபின் பிழைப்பானோ?''* யோபுவினுடைய உடைமை களை தேவன் இரண்டு மடங்காக அவனுக்குத் திரும்பக் கொடுத்த போது அவர் இந்தக் கேள்விக்குப் பதிலளித்தார். தேவன் அவனது ஆடுமாடுகளை சரியாக இரண்டுமடங்காக்கினார். ஆனால் யோபுவினு டைய மற்ற உடைமைகளை இரண்டு மடங்காக்கியபொழுது, அவர் ஏழு குமாரர்களையும் மூன்று குமாரத்திகளையும் கூடுதலாக மட்டுமே கொடுத்தார். இரண்டு மடங்காக்கவில்லை என்பதை கவனியுங்கள்.

மிருகங்கள் மாண்டபொழுது அவைகள் உலகோடு மாண்டு போயின. ஆனால் அவனுடைய குமாரர்களும் குமாரத்திகளும் மரண மடைந்த பொழுது, இன்னும் அவர்கள் நித்தியத்தில் இருக்கின்றனர் என்பதே இதன் விளக்கம். யோபுவின் பிள்ளைகளை இரண்டு மடங்காக்க, தேவன் அவனுக்கு இன்னும் ஏழு குமாரர்களையும் மூன்று குமாரத்திகளையும் மட்டுமே கொடுக்க வேண்டியிருந்தது. நித்தியத்தில் யோபுவுக்கு பதினான்கு குமாரர்களும் ஆறு குமாரத்திகளும் இருக்கின் றனர். *''மனுஷன் செத்தபின் பிழைப்பானோ? ''* என்ற யோபுவின் கேள்விக்கு தேவன் பதிலளித்த விதங்களில் இது ஒன்று.

வேதவசனங்களில் இந்தக் கேள்விக்கு, அநேக பதில்களைக் காண் பீர்கள். இருபத்துமூன்றாம் சங்கீதத்திலும் புதிய ஏற்பாட்டிலும் இயேசு தாமே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறாரென்றும், அவரை விசு வாசிப்பவன் மரித்தாலும் பிழைப்பான் என்று கூறியுள்ளதிலும் (யோவான் 11:25,26) இந்தக் கேள்விகளுக்குப் பதிலை காண்கிறோம். சரியான கேள்விகளுக்கு அநேக அழகிய பதில்களைக் காண்பீர்கள். ஜெபத்தோடு அவைகளைத் தேடுங்கள். பின் தேவன் உங்கள் சரியான கேள்விகளுக்குக் கூறும் பதிலை மிகவும் கவனமாகக் கேளுங்கள்.

**மூன்றாம் படி** : சரியான கேள்விகளுக்கு தேவனுடைய சரியான பதில்கள் என்று நீங்கள் நம்புமிடத்துக்கு உங்கள் துன்பம் உங்களைக் கொண்டு வரட்டும். சரியான கேள்விகளுக்கான தேவனுடைய பதில் களை விசுவாசிக்கும் போது, அழுபவர்களுக்காக இயேசு வாக்குத் தத்தம் பண்ணிய ஆசீர்வாதத்தையும் ஆறுதலையும் நீங்கள் காண்பீர் கள். அந்த ஆசீர்வாதத்தையும் ஆறுதலையும் வேதாகமம் ''இரட்சிப்பு'' என்றழைக்கிறது.



அத்தியாயம் 3

# தேவனுடைய மக்கள் பாடுகளை அனுபவிப்பதற்கு வேதாகம அடிப்படையில் முப்பது காரணங்கள்

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தேவனுடைய மக்கள், ''நீதிமான் கள் ஏன் பாடனுபவிக்கின்றனர்?'' என்ற கேள்வியை கேட்டுக் கொண்டிருக்கின்றனர். அந்தக் கேள்விக்கு மிகச் சரியானதும் விரிவான துமான பதில் யோபுவின் புத்தகமாகும். வேதாகமத்தில் நீங்கள் காண்கிற அந்தக் கேள்விக்கு யோபுவின் புத்தகம் மட்டுமே ஒரே பதில் அல்ல. ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரை தேவனுடைய மக்களின் பாடுகள் தேவனுடைய வசனங்களில் சொல்லப்பட்டிருக் கின்றன என்று காண்பீர்கள். இந்த அத்தியாயத்தில், பாடுகளுக்கு வேதா கமரீதியிலான விளக்கங்களில் முப்பதை சுருக்கமாகக் காண்போம்.

1. தேவனே எல்லா ஆறுதலுக்கும் மூலாதாரம் என்பதை பாடுகள் நமக்குப்போதிக்கின்றன. ஆசியாவில் மிகப்பெரிய சோதனையை சகித்தபோது, ஒரு எண்ணம் பவுலுக்கு ஆறுதலளித்தது: *''நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவும், சகலவிதமான ஆறு தலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம்''* (2 கொரிந்தியர் 1:3). துன்பங்கள் பவுலுக்கு தேவன் தன்னோடிருக்கிறார் என்றும் அவரால் அவனுக்கு ஆறுதலளிக்க முடியும் என்பதையும் காட்டி யது. நாமும் துன்ப நேரங்களில் இந்த உண்மையைக் கண்டு பிடிக்க அவர் நமக்கு சவாலிடுகிறார்.

2. நம்முடைய துன்பங்கள் நம்மை மற்றவர்களுக்கு ஆறுதலளிக்கப் பயிற்சியளிக்கிறது; நம்மை ஆயத்தப்படுத்துகிறது. பவுல் அதைப் பற்றி இப்படி எழுதுகிறார் : *''தேவனால் எங்களுக்கு அருளப் படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிற வர்களுக்கு தாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும் படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலும் எங்களுக்கு ஆறுதலின் தேவனாயிருப்பவருக்கு....''* (2 கொரிந்தியர் 1:4). நற் செய்தி பணியாளர் என்பவர், ஒரு பிச்சைக்காரன் மற்றொரு பிச்சைக்காரனைப் பார்த்து உணவு எங்கே இருக்கிறது என்று சொல் லுகிறார். துன்பத்திலுள்ள ஒருவர், துன்பத்தில் இருக்கும் மற்றொரு வரை ஆறுதல் படுத்துவதே அவர் ஆறுதல் கொடுக்கத் தகுதியுள்ள வர் என்பதைக் குறிக்கிறது. தேவனில் நாம் ஆறுதலைக் கண்டு கொள்ள முடியும் என்பதை கண்டுபிடிக்கும் போது, ஆறுதலளிக்கத் தகுதிபெற்ற ஊழியர்களாகிறோம். உபத்திரவம் தங்களை தேவனிடம் கொண்டு சென்றது என்ற அனுபவத்தைப் பெற்றவர்

கள் மட்டுமே காயமடைந்த மற்றொருவருக்கு அந்த செய்தியை கூற முடியும்.

3. துன்பப்படுதல் தேவனுடைய ஞானத்தை நாம் தேடும்படிச் செய்கிறது. யாக்கோபு கூறியபோல நம்முடைய துன்பங்கள் நாம் என்ன செய்யவேண்டும் என்று தெரியாத இடத்திற்கு நம்மைக் கொண்டுவரும்பொழுது நமக்கு இல்லாத ஞானத்தைப் பெற்றுக் கொள்ள நாம் தேவனிடம் கேட்க வேண்டும். *''உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால்.... தேவனிடத்தில் கேட்கக் கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்''* (யாக்கோபு 1:5). நமக்குத் தேவைப்படும் ஞானத்தைத் தேவன் பொழியப் பண்ணுவார் என்று யாக்கோபு நமக்கு உத்தரவாதமளிக்கிறார்.

4. துன்பப்படுதல் ஆவிக்குரிய முதிர்ச்சிக்கு நம்மை வழிநடத்துகிறது. துன்புறுத்தப்படுவது நம்மை, *''ஒன்றிலும் குறைவுள்ளவர்களா யிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாகவும்"* (யாக்கோபு 1:4) ஆக்குகிறது என்று யாக்கோபு போதித்தார். விசுவாசத்தின் சோதனை, விசுவாசத்தை நம்புவதற்கு வழிநடத்துகிறது. விசு வாசத்தின் மேல் நம்பிக்கை, விசுவாச வெற்றிக்கு அல்லது ''ஜீவ கிரீடத்துக்கு'' (12) வழி நடத்துகிறது.

5. துன்பப்படுவது தேவனுடைய கிருபைக்குச் செல்லும் வழியைக் காட்டுகிறது. நமக்கு என்ன செய்வதென்று தெரியாமலிருக்கும் போது அவரை நாடினால் தேவன் நமக்கு ஞானத்தைக் கொடுக் கிறார். தேவன் நமக்குக் கொடுத்த ஞானத்தை செயல்படுத்த அவரு டைய கிருபையும் நமக்கு அவசியம். பவுல், *''நீங்கள் எல்லா வற்றிலும் எப்பொழுதும் சம்பூர்ணமுடையவர்களாகவும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையும் பெருகச் செய்ய வல்ல வராயிருக்கிறார்''* (2 கொரிந்தியர் 9:8) என்று எழுதினார்-சகல வித கிருபையும், சகலவித நற்கிரியைகளும், எப்பொழுதும் சம்பூர் ணமாயும் எல்லாவற்றிலும், பெருகச் செய்வது. இந்த ஞானமும் கிருபையும் நிறைந்த பொக்கிஷ வீட்டை நாம் கண்டுபிடிப்பதற்கு நம்மை வழிநடத்தும் துன்பத்துக்காக நாம் சந்தோஷப்பட வேண்டும் என்று பவுல் சொல்லுவதில் வியப் பொன்றுமில்லை.

6. துன்பப்படுதல் ஆவிக்குரிய குணநலனை உண்டுபண்ணுகிறது. காரியங்கள் கடினமாகும்போது ஓடிவிடாத குணத்தை துன்பம் ஏற் படுத்துகிறது.: *''உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட் சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று*



*நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டு கிறோம்.... தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப் பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத் தாது''* (ரோமர் 5:3-5). துன்பப்படுதல் ஆவிக்குரிய குணத்தின் ஒரு மிகவும் முக்கிய பரிணாமத்தை வளர்ச்சி பெறச் செய்ய முடியும்.

7. நம்முடைய இளம்பிராயத்தில் நாம் துன்பப்பட்டபோது, வளர்ச்சிக் கான பெலனைப் பெற்றுக்கொள்ளுகிறோம். புலம்பல் 3:27, *''தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது''* என்று போதிக்கிறது. வாலிப ஆண்களும் பெண்களும் சோதனைக் குட்படுத்தப்பட்டு சோதிக்கப்படும்போது, அவர்கள் வளர்ச்சி யடைந்தபின் சோதனைகளைச் சகிப்பதற்கான பெலனையும் நிதா னத்தையும் பெற்றுக்கொள்கின்றனர்.

8. துன்பப்படுதல் சுவிசேஷ ஊழியர்களைப் பயிற்றுவிக்கிறது. தேவ னுடைய ஊழியக்காரர்கள் என்று நம்மை நாம் நிரூபிப்பதற்கு துன்பப்படுதலே வழி என்று பவுல் எழுதினார்: *''மிகுந்த பொறுமை யிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்களி லும்... எங்களை தேவஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம்''* (2 கொரிந்தியர் 6:4,3). அப்பொழுது நாம் ''கற்பிலும், அறி விலும், நீடிய சாந்தத்திலும், தயவிலும்'' பதிலளிக்க வேண்டு மென்று தேவன் விரும்புகிறார். அதற்கு வேண்டிய மூலாதாரத்தை நாம், ''பரிசுத்த ஆவியிலும், மாயமற்ற அன்பிலும், சத்திய வசனத்திலும், திவ்விய பலத்திலும்'' (6,7) காணமுடியும் சுவிசேஷ உழியர்களுக்குப் தேவன் பயிற்சியளிக்கும் இந்தக் ''கல்லூரியில்'' அவர்களைத் துன்பங்கள் மூலம் சிறக்க வைக்கிறார்.

9. நம்முடைய விசுவாசப் பிராயணத்தில் துன்பப்படுதல் ''அற்புத மைல்கற்களை'' உண்டுபண்ணுகிறது. மிகப்பெரிய ஆபத்து காலத் தில் விடுதலைக்காக தாவீது ஜெபித்தபோது (சங்கீதம் 3:1-6), அவன் விசுவாசத்தோடும் தன்னம்பிக்கையோடும் ஜெபித்தான் ஏனெனில் அவனுடைய வாழ்க்கையில் முன்னதாகவே ஆபத் தான நேரங்களில் அவன் ஜெபித்து தேவனுடைய உதவியைப் பெற்றுக் கொண்டான். ஒவ்வொரு ஆபத்தான நேரத்திலும் நமக்குத் தேவன் இருக்கிறார் என்று நாம் நம்பும் ஒவ்வொரு தடவையும் நம் விசுவாசத்தை உறுதிபடுத்தி, ஏவக் கூடிய ஒரு ''அற்புத மைல் கல்லை'' நாம் பெறுகிறோம்.

10. துன்பப்படுவது தேவனுடைய இரட்சிப்பிற்கு உண்டான தடைகளை நீக்குகிறது. மேசியாவின் வாழ்க்கை இந்த உலகத்தினுள் இரட்சிப் பைக் கொண்டுவரும் ஒரு நெடுஞ்சாலையாயிருக்கும் என்று

ஏசாயா பிரசங்கித்தார் : *''பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகல மலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடுமுரடானவை சமமாக்கப்படும் என்றும், கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும்''* (ஏசாயா 40:4-5). இயேசுவானவருடைய வாழ்க்கை, இந்த உலகத்தினுள் தேவனும், இரட்சிப்பும் பிரயாணம் செய்த நெடுஞ்சாலையாகும். கிறிஸ்துவைப் போலிருப்பது என்றால், நம் மூலமாக இந்த உலகத்தினுள் தேவன் இரட்சிப்பைக் கொண்டுவரும் நெடுஞ்சாலையாக நாம் இருக்க வேண்டும் என்பதே. நம்முடைய பெருமை என்ற மலைகள் தாழ்த்தப்பட்டு, அவாந்தர வெளிகள் நிரப்பப்பட்டு, நம்முடைய கோணலான பாவங்கள் செவ்வைப் படுத்தப்பட்டு, துன்பப்படுதலின் கரடுமுரடான பாதைகள் சமமாக்கப்படும்போது நம்முடைய வாழ்க்கையின் மூலமாக மற்றவர்களுக்கு இரட்சிப்பைக் கொண்டுவர தேவனால் கூடும்.

11. துன்பப்படுதல் தேவனுடைய வல்லமையை எடுத்துக் காட்டுகிறது. பவுல் தன்னுடைய சரீரத்திலிருந்த முள்ளை எடுத்துப்போடும்படி தேவனிடம் கேட்டபோது, *''என் கிருபை உனக்கு போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்''* (2 கொரிந்தியர் 12:9) என்று சொன்னார். நம்முடைய பலவீனங்கள், தேவன் நம்முடைய பெலனையும் வல்லமையையும் வெளிக்காட்டும் ஒரு கண்ணாடி அலமாரியாயிருக்க முடியும். நம் பலவீனங்களில், அவரது பலன் விளங்குவதைக் காண்கின்றோம்.

12. நாம் போதுமானதல்லாமலிருப்பது தேவனுடைய போதுமான தன்மையை பெரும்பாலும் தெளிவாகக் காட்டுகிறது. துன்பம் நமக்கு நம்மை போதுமானதல்லாதவர்களாக்குகிறது. தம்முடைய மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்ததால் பவுல் மிகவும் பலவீனராக்கப்பட்டார் (2 கொரிந்தியர் 12:7-10). நாம் பெலவீனமாயிருக்கும் போது தேவன் பெலமுள்ளவராயிருக்கிறார். நமக்கு செய்ய முடியாமலிருக்கும்போது, அவரால் செய்ய முடிகிறது. நம்முடைய வல்லமை எங்கே முடிகிறதென்றும், அவருடைய வல்லமை எங்கே துவங்குகிறதென்றும் நமக்குப் போதிக்க நாம் துன்பப்படுவதை தேவன் பயன்படுத்த முடியும்.

13. துன்பப்படுதல் தாழ்மையைக் கற்றுக்கொள்ளுவதற்கு ஒரு சந்தர்ப்பமாக இருக்கமுடியும். மாம்சத்தில் இருந்த முள் ''என்னை (பவுலை) நான் (பவுல்) உயர்த்தாதபடிக்கு,'' பயன்படுத்தப்பட்டது என்று பவுல் எழுதினார். ஏனெனில் அவருக்கு ஏற்பட்ட ஆச்சரியமான அனுபவங்கள் அவனுடைய பெருமையைத் தாழ்த்த சாத்தானுடைய தூதனாயிருக்கிறது (2 கொரிந்தியர்12:7) என்றார். தேவன் நம்மைப் பயன்படுத்தும் போது மற்றவர்கள் நம்மை வாழ்த்தும் போது அதைக் கேட்கும்படி சோதிக்கப்பட்டு நாம் தேவனுடைய மகிமையைக் களவாடுவதால் சில நேரங் களில் தாழ்மையாக இருக்கும்படி நாம் துன்பங்களை அனுபவிப் பதை அனுமதிக்கிறார்.



14. துன்பமான அனுபவங்கள் அடிக்கடி மகிழ்ச்சியான அனுபவங்களுக்கு வழிநடத்துகிறது. சங்கீதம் 126-இல் ''கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்'' (5) என்று நாம் வாசிக்கிறோம். துன்பப்படும் போது நாம் விடும் கண்ணீர், ஒருநாள் மகிழ்ச்சியின் கனியைக் கொடுப்பதற்கான ''விதைகளாக'' காணப்படுகிறது. துன்பப்படுதல் ஒரு குறிப்பிட்ட காலம் வரை நீடித்தாலும், அறுவடையின் போது மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. சிலவேளைகளில், நித்திய மகிழ்ச்சியான அனுபவத்தைப் பெற்றுக்கொள்ள காத்திருக்க வேண்டியது அவசியம்.

15. துன்பப்படுதல் சிலவேளைகளில் ஒரு பின்னடைவு (set back) போலக் காணப்படும். இயேசு தாம் திராட்சச் செடி என்றும், நாம் கொடிகளாயிருக்கிறோம் என்றும் போதித்தார். கனி கொடுக்க, நம்முடைய திராட்சச் செடியாயிருக்கிற கிறிஸ்துவோடு தொடர்ந்து சேர்ந்திருக்க வேண்டும். கனி கொடுப்பவர்களாயிருக்க நாமும் வெட்டிச்சுத்தம் பண்ணப்படுவதை (pruning) சகித்துக் கொள்ளுபவர்களாகவும் இருக்க வேண்டும், ஆனால் வெட்டிப் போடப்படும் போது கனிகள் அதிகமாகக் காணப்படும். நாம் கிறிஸ்துவுக்குள் மகிழ்ச்சியாக வாழ்வோம் (யோவான் 15:2,11).

16. துன்பப்படுதல் கிறிஸ்துவை உலகத்துக்கு வெளிப்படுத்துகிறது. நாம் துன்பப்படும்போது, மண் பாண்டங்களில் உள்ள இந்த சிறுகீறல்களைப் போலிருக்கிறோம். அவருடைய பிரகாசமான பேரொளி நம்முடைய சிறிய பாண்டங்களிலுள்ள கீறல்கள் மூலம் இவ்வுலகுக்கு வெளிப்படுத்தப்படுகிறது. (2 கொரிந்தியர் 4:7-10). நாம் துன்பப்படும்போது, நம்முடைய மாம்சத்தில் தேவனுடைய வல்லமையின் மகிமையை வெளிப்படுத்துகிறோம். நாம் ''எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப் போகிறதில்லை.''

17. துன்பப்படுதல் நம்முடைய உள்ளான மனிதனின் வளர்ச்சியைத் தூண்ட முடியும். வெளியான மனிதன் இம்மைக்குரியவன். ஆனால் உள்ளான மனிதன் நித்தியத்துக்குமானவன். *''எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிப்பிக்கப்படுகிறது''* (2கொரிந்தியர் 4:16). நம் துன்பம் தற்காலிகமானது. ஆனால் அதன் விளைவுகள் எல்லாக் காலத்துக்குமானது.

தவிர்க்க முடியாத நோயினால் அவதிப்படுவர்களுக்கு நாம் எடுத்துக் கூற வேண்டிய அற்புதமான கருத்து இது.

18. துன்பப்படுதல் நித்திய மதிப்புகளை நமக்குப் போதிக்கின்றன. கடைசி நாட்களில், நித்தியத்திற்குரியவர்கள் மட்டும் அசைக்கப் படாமல் நிலைத்திருக்கும் (எபிரெயர் 12:25-29). நம்முடைய வாழ்க்கை இம்மைக்குரியது. நம்முடைய மதிப்புகளும் இம்மை யான காரியங்களில் ஈடுபட்டிருக்கிறது என்பதால் தேவன் சில சமயங்களில் நம்முடைய கண்களை அநித்தியமான காரியங் களிலிருந்து மேல்நோக்கி நித்தியமான காரியங்களில் கண்களை நிலைபெறச் செய்யும்படி, துன்பத்தைப் பயன்படுத்து கிறார்.

19. துன்பப்படுதல் நம்மைப் புடமிடமுடியும். நம்முடைய தேவன் *''பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே''* (எபிரெயர் 12:29). சில நேரங்களில் அவர் அவருடைய பரிசுத்தத்துக்கு முரண்பாடாக வாழ்க்கையில் நடைபெறும் சம்பவங்களை எரித்துப்போட துன்பப் படுவதைப் பயன்படுத்துகிறார். நம்மை நித்தியத்துக்கு ஆயத்தப் படுத்தும் இந்த சுத்திகரிப்பு முறை துன்பத்தின் வடிவில் வரக்கூடும்.

20. துன்பப்படுதல் சிலவேளைகளில் தவறான தேர்வுகளின் விளைவா யிருக்கிறது. நாம் விதைப்பதையே நாம் அறுக்கிறோம். நாம் சீர் கேட்டை விதைத்தால், சீர்கேட்டை அறுவடை செய்வோம். தவ றான வழியில் செல்லுதலும் நெறி தவறி நடப்பதும், துன்ப வாழ்க் கைக்கு வழிநடத்துகிறது. நம்முடைய வாழ்க்கைத் தோட்டத்தில் தவறான விதைகளை விதைத்தால் அவற்றையே அறுக்க வேண்டி யிருக்கும் என்று காண்கின்றோம் (கலாத்தியர் 6:7-8).

21. துன்பப்படுதல் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்று அடையா ளம் காட்டுகிறது. தம்முடைய பிள்ளைகளாக எண்ணுபவர்களை தேவன் நம்பிக்கையோடு சிட்சிக்கிறார் (எபிரெயர் 12:4-11; யோவான் 1:12-13). அவரைப் பிதாவென்றும் ஆண்டவர் என் றும் அழைக்காதவர்களுக்கு அதைக் கொடாமல் தம்முடைய பிள் ளைகளுக்கு அவர் பொறுப்பேற்கிறார். ஏனென்றால் அவர் நம்மு டைய தகப்பன், நாம் அவருடைய பிள்ளைகள், நாம் பாவம் செய்யும்போது அவர் நம்மை சிட்சிக்கிறார்.

22. சில சமயங்களில் கிறிஸ்து நம்மோடு ஐக்கியமாயிருக்க விரும்பும் போது நமக்குத் துன்பத்தை அனுமதிக்கிறார். உயிர்த்தெழுந்து ஜீவ னோடிருக்கும் கிறிஸ்து, அவருக்குத் தங்களை அர்ப்பணித்த



அனலுமில்லாத குளிருமில்லாதவர்களின் இருதயங்களைத் தட்டிக் கொண்டிருக்கிறார். தட்டிக்கொண்டிருப்பது, அவர் கடிந்து கொண்டு தண்டிப்பதைக் குறிப்பிடுகிறது. ஏனென்றால் நாம் அவரை இரட்சகர் என்று அழைக்கிறோம். (வெளி. 3:19-20). நம் முடைய வாழ்க்கையின் அர்த்தமுள்ள ஒவ்வொரு பகுதியையும் சென்றடைந்து அங்கே நம்மோடு ஐக்கியமாயிருக்க அவர் சித்த முடைவராய் இருக்கிறார். கிறிஸ்து இவ்விதமாகக் கதவைத் தட்டு வது துன்பத்தின் வடிவத்தில் வரலாம்.

23. துன்பப்படுதலின் கடின நேரங்கள் பெரும்பாலும் கெட்ட குமாரர் களைத் திரும்பிவரத் தூண்டுவதாயிருக்கிறது. கெட்ட குமாரனுக்கு ''புத்தி தெளிந்தபொழுது'' அவன் பன்றியின் கிடையில் துன்பப் பட்டான் (லூக்கா 15:17). எனவே, நாம் பன்றியின் கிடைகளில் கிடக்கும் போது இந்த உலகத்தில் துன்பப்படும்போது நம்முடைய புத்திக்குத் தெளிவைக் கொடுத்து, மனந்திரும்புதலுக்கு வழிநடத்தி, பிதாவினுடைய ஐக்கியத்துக்குள்ளும் கண்ணியத்துக்குள்ளும் நாம் திரும்பவரும் தீர்மானத்தோடு நம்மைத் திரும்பச் செய்கிறது.

24. துன்பப்படுதல், தண்டிக்கப்படுதல், கடிந்து கொள்ளப்படுதல் ஆகியவை தேவனுடைய பரிசுத்தத்தில் நமக்கு ஒரு பங்களிக் கிறது. நம்முடைய பரலோகப் பிதா அன்போடு நம்மைத் தண்டிக் கும்போது, *''தம்முடைய பரிசுத்தத்திற்கு நாம் பங்குள்ள வர்களா கும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மை சிட் சிக்கிறார்''* என்று நாம் வாசிக்கிறோம். தேவன் பரிசுத்தர், நாமும் பரிசுத்தராயிருக்க வேண்டும் என்பது அவருடைய சித்தம். அவரு டைய குணாதிசயத்திலும், நம்முடைய குணாதிசயத்திலும் பரிசுத் தத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள உதவி செய்யும்படி சில நேரங்களில் அவர் துன்பப்படுதலை பயன்படுத்துகிறார் (எபிரெயர் 12:10).

25. உலகம் கிறிஸ்துவையும் அவரைப் பின்பற்றுபவர்களையும் வெறுப் பதால் நாம் துன்பப்படுகிறோம். அப்போஸ்தலர் பவுல், *''கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்''* (2 தீமோத்தேயு 3:12) என்று எழுதினார்.

26. துன்பப்படுதல் விசுவாசத்தைச் சோதிக்கிறது. பேதுரு, *''... துன்பப் படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம், பலவிதமான சோதனைகளினாலே துக்கப் படுகிறீர்கள். அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்*

*பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்''* (1 பேதுரு 1:6-7) என்று எழுதினார்.

27. நாம் துன்பப்படும்போது, நம்முடைய இரட்சகரின் எடுத்துக் காட்டைப் பின்பற்றுகிறோம். *''தம்முடைய அடிச்சுவடுகளைப்''* பின்பற்றி வரும்படி நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று பேதுரு எழுதுகிறார் (1 பேதுரு 2:21). நம்முடைய இரட்சிப்புக்காக அவர் சிலுவையின் வேதனையை சுமந்து, அவருடைய மாதிரியைப்பின்பற்ற வேண்டும் என்று அழுத்தமாக அவர் நமக்குச் சொன்னார் (லூக்கா 9:23-25; 14:25-35). அவருக்காக நாம் துன்பங்களைச் சகிக்கும்போது, அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றுகிறோம்.

28. துன்பப்படுதல் சில வேளைகளில் தேவனுடய இராஜ்யத்தின் கதவைத் திறக்கிறது. பவுலும் பர்னபாவும் அவர்களுடைய சுவிசேஷப் பயணங்களில் துன்புறுத்தப்பட்ட போது, அவர்கள் *''நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்று''* சொல்லி விசுவாசிகளை உற்சாகப்படுத்தினார்கள் (அப்போஸ்தலர் 14:22). தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு நாம் துன்பப்படவேண்டியது அவசியமில்லை என்றாலும் உபத்திரவங்களின் வழியாக அநேகர் விசுவாசத்துக்குள் கொண்டுவரப்பட்டனர்.

29. நம்முடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் மூலமாக நாம் எல்லாரும் நித்தியத்துக்குள் பிரவேசிக்க வேண்டும். ஒரு மரணத்தின் போது இயேசு ஒரு பெண்ணிடம், நம்மால் தீர்க்கமுடியாத பிரச்சினையான சுகவீனம், மரணம் ஆகியவை நாம் நித்தியமாக வாழ்வதற்கு வழிகாட்டும் வாசலாக இருக்க முடியும் என்று கூறினார் (யோவான் 11:20-32). இந்த இரண்டு பிரச்சினைகளுக்கும் இயேசுவே ஒரே தீர்வு என்று விசுவாசிப்பதின் மூலம் இந்த பிரச்சினைகளை பரலோக வீட்டுக்குச் சென்றடையும் பிராணச் சீட்டுகளாக நாம் மாற்ற முடியும். சுகவீனத்தையும் மரணத்தையும் தேவனால் இல்லாமலாக்க முடியாது. ஏனெனில் அவை இந்த உலகத்தை விட்டு நாம் வெளியேறும் ஒரே வழியை நம்மிடமிருந்து எடுத்துவிடும். நாம் ஏன் துன்பப்பட வேண்டும் என்பதற்கு இது மற்றொரு வேதாகம விளக்கம்.



30. தன்னுடைய தலைமைத்துவ அதிகாரத்தை நிலைநாட்ட, ஒரு ஆட்டு மேய்ப்பன் ஆடுகள் கீழே படுப்பதற்காக தன்னுடைய கோலால் அவ்வப்போது அவற்றின் தலையில் அடிப்பான். தாவீது சொன்னவைகளின்படி, நம்மை அமரச்செய்து தேவன் நம்முடைய மேய்ப்பராகிறார் (சங்கீதம் 23:2). அந்த உறவு இடம்பெற்றதும், தேவன் நம்மை அமர்ந்த தண்ணீர்களிடத்திலும், பசுமையான புல்வெளிகளிலும், நிரம்பி வழியும் ஒரு பாத்திரத்துக்கும் வழி நடத்துகிறார். நாம் மறுபடியும் எழும்பிப் பார்க்கும் போது அந்த புல்வெளி காப்பி நிறமாக மாறுகிறது. தண்ணீர் கலங்கலாகி பாத்திரம் காலியாகிறது.

நமக்கு காப்பி நிறமாக மாறாத பசுமையான புல்வெளிகளையும், கலங்கலடையாத அமர்ந்த தண்ணீரையும், ஒரு பொழுதும் காலியாகாத பாத்திரத்தையும் அவர் நமக்குக் கொடுப்பதற்காக மரணத்தில் நம்மைப் படுக்க வைக்கும் நல்ல மேய்ப்பனே மரணம் என்பது. இந்த நித்திய மதிப்புகளை நமக்குக் கொடுக்க, நாம் சுகவீனம், மரணம் ஆகிய தீர்வு காண முடியாதப் பிரச்சினைகளை அனுபவிக்க வேண்டும். தேவனுடைய மக்கள் ஏன் துன்பப் பட வேண்டும் என்பதற்கான இறுதியான வேதாகம ரீதியிலான விளக்கம் இதுதான்.

தேவ வசனங்கள் துன்படுதலைப் பற்றி நமக்குக் கூறும் காரியங்கள் அநேகம் உள்ளன. எனினும் நாம் புரிந்து கொள்ளாத அதிகத் துன்பங்கள் இன்னும் இருக்கின்றன. இந்த ஜீவியத்தில் நாம் மிகவும் அதிகமாகப் பயன்படுத்தும் வார்த்தை ''ஏன்?'' என்பதாகும் பரலோகத்தில் நாம் அதிகமாகப் பயன்படுத்தும் வார்த்தை ''ஆ!'' என்பதாகும். ''ஆ'' என்ற வார்த்தையை பத்தாயிரம் ஆண்டுகள் நாம் சொன்னபின் ''அல்லேலுயா!'' என்ற வார்த்தையை சொல்லத் துவங்குவோம்.

அத்தியாயம் 4

# சங்கீத புத்தகம்

சங்கீத புத்தகம் தேவனுடைய மக்கள் ஆராதிக்கும் போது அவர்களுடைய இருதயங்களைத் தொடுமாறு எழுதப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டு மக்கள் பாடிய நூற்றைம்பது ஆத்தும உணர்ச்சி ஞானப் பாட்டுகளே சங்கீத புத்தகம். தங்கள் அன்பு, துதி, ஜெபங்கள் ஆகியவைகளை, அவர்கள் ஆராதிக்கும்போது உதவும்படி தேவன் தம்முடைய மக்களுக்கு சங்கீதங்களைக் கொடுத்தார். இந்த ஆத்ம உணர்ச்சியோடு கூடிய ஞானப்பாட்டுகள் உங்களைத் தேவனுடைய தெய்வீகப் பிரசனத்துக்குள் கொண்டு வந்து, இன்று நீங்கள் தேவனை ஆராதிக்கும் போது, உங்கள் அனபையும், துதியையும், ஜெபத்தையும் வெளிப்படுத்த உங்களுக்கு உதவி செய்யும்.

## சங்கீதங்களைப் பற்றிய ஒரு சுருக்கமான பார்வை

பழைய ஏற்பாட்டை கிரேக்க மொழியில் மொழி பெயர்க்குமுன் சங்கீத புத்தகம் தனித்தனியான ஐந்து புத்தகங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது: சங்கீதம் 1-41, 42-72, 73-90, 91-107 மற்றும் 108-150 இவற்றில் எழுபத்து மூன்று சங்கீதங்கள் தாவீதினால் எழுதப் பட்டவை என்றும், ஆசாப் பன்னிரெண்டு சங்கீதங்களையும் கோராவின் மகன்கள் பதினொன்று சங்கீதங்களையும் எழுதினார்கள் என்றும் சொல்லப்படுகிறது. எசேக்கியா பத்து சங்கீதங்களையும், மோசே, எஸ்தர், சாலொமோன் ஆகியோர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சங்கீதத்தையும் எழுதினர் என்று கல்விமான்கள் நம்புகின்றனர். அநேக சங்கீதங்கள் யாரால் எழுதப்பட்டவை என்று தெரியவில்லை. தாவீதினால் நியமிக்கப்பட்ட இசை ஊழியர்களாகிய லேவியர்களால் எழுதப்பட்டவைகளாக இருக்கலாம் அல்லது நம்மால் யாரென்று நிர்ணயிக்க முடியாத சங்கீதங்கள் சிலவற்றையும் தாவீதே எழுதி இருக்கலாம்.

## இசைக்கருவிகள்

சங்கீதங்களுக்கு முன்பாக இசை பற்றிய கட்டளைகள் அநேக இடங்களில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவை ‘‘நெகிலோத்’’ என்ற காற்று இசைக்கருவியையும், ‘‘நெகினோத்’’ என்ற நரம்பு இசைக்கருவியையும் குறிப்பிடுபவைகளாக இருக்கின்றன. ‘‘சேலா’’ என்ற வார்த்தை சங்கீதங்கள் முழுவதிலும் சிதறிக் காணப்படுகிறது. இதன் பொருள், ‘‘நிறுத்தி அதைப்பற்றி பயபக்தியுடன் சிந்தனை செய்’’, என்பதாகும். அது இன்றைய இசையின் இடைவெளி போன்ற ஒன்றாக இருந்திருக்கக் கூடும்.



## யாருக்கு, யாரைப்பற்றி

பழங்காலத்து ஏவப்பட்ட ஞானப்பாட்டை எழுதியவர்கள் அல்லது நவீன ஞானப்பாட்டை எழுதுபவர்கள் சிலநேரங்களில் தேவனைப் பற்றியே அவரோடு பேசுகிறார்கள், இதுவே துதி செய்வது; சில நேரங்களில் மனிதனைப் பற்றி தேவனிடம் பேசுகின்றனர், இது ஜெபித்தலாகும்; அல்லது சில வேளைகளில் அவர்கள் தேவனோடு பேசுவதேயில்லை. அவர்கள் தேவனைப் பற்றி மனிதனிடம் பேசுகிறார்கள். அதுவே பிரசங்கிப்பதைக் குறிக்கிறது. ஒவ்வொரு சங்கீதத்தின் வார்த்தைகளையும் நீங்கள் வாசிக்கும்போது, ‘‘யாரிடம் இதை எழுதியவர் பேசுகிறார், யாரைப்பற்றி அவர் பேசுகிறார்’’? என்று உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள். இந்தக் கேள்வியைக் கேட்டு அதற்குப் பதிலளிப்பது, நீங்கள் வாசிக்கும் சங்கீதத்தின் தியானச் செய்திக்கும் செயல்படுத்துவதற்குமான ஒரு ஆழ்ந்த உள்ளான அறிவை உங்களுக்குக் கொடுக்கும்.

## சங்கீதப் புத்தகத்தின் கருத்துக்கள்

சங்கீதங்களில் நான்கு கருத்துக்கள் அழுத்தமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன் என்ற கருத்து சங்கீதங்கள் முழுவதிலும் காணப்படுகிறது. ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு மனிதனுக்குக் கிடைத்த ஆசீர்வாதங்கள் எதிர்பாராமலோ, தற்செயலாகவோ கிடைத்தவையல்ல, அவை சங்கீதக்காரன், விசுவாசம் மற்றும் ஆவிக்குரிய காரியங்களுக்கும் முன்னுரிமை கொடுத்ததின் பயனே என்று விளக்குகிறது. இந்தக் கருத்தை சங்கீதம் 1, 23, 32, 128 ஆகிய சங்கீதங்களிலும் இன்னும் பல சங்கீதங்களிலும் காண்பீர்கள்.

உணர்வுகளைக் குறித்தக் கருத்தும் சங்கீதங்களில் தெளிவாகத் தெரிகின்றன. இந்த சங்கீதங்கள் குறிப்பிட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவதோடு, அவற்றை நாம் எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்றும் பெரும்பாலும் நமக்குக் காட்டுகின்றன. நீங்கள் சங்கீதங்களை வாசிக்கும்போது எப்படிப்பட்ட உணர்வை அனுபவித்தாலும், அந்த உணர்வை சங்கீதங்களில் காணலாம். நீங்கள் மனச்சோர்வுடனோ, மிகுந்த மனக்கவலையுடனோ, குற்ற உணர்வினால் நொருங்குண்ட இருதயத்துடனோ இருப்பீர்களானால், உங்கள் இருதயத்துக்கு ஆறுதலளிக்கும் சங்கீதத்தைக் காணலாம். அதுபோலவே, நீங்கள் பெற்ற அநேக ஆசீர்வாதங்களுக்கு மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவிக்க விரும்பினால், அதற்கேற்ற சங்கீதமும் உண்டு. எந்த விதமான உணர்வுகளால் நீங்கள் ஆட்கொள்ளப் பட்டிருந்தாலும், நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தும் சங்கீதங்களைக் காண்பீர்கள்.

இவற்றை எழுதியவர் அந்த உணர்வு பெற்றிருந்தபோது என்ன செய்தார் என்று எப்பொழுதும் கவனித்து, நீங்களும் அவ்வாறே செய்யுங்கள். உணர்வுகளை வெளிப்படுத்தும் சில சங்கீதங்கள் 3,4, 32, 34, 51 மற்றும் 55.

ஆராதனை செய்வது சங்கீதங்களின் மற்றொரு உறுதியான கருத்து. தேவனை ஆராதிக்கும் சங்கீதங்களில் சங்கீதக்காரன் தான் தேவனைப்பற்றி பேசுவது மட்டுமல்ல, மற்றவர்களையும் ஆராதனை செய்யும்படி உற்சாகப்படுத்துகிறான். ஆராதனை சங்கீதங்களில் சில 8, 63, 100, 103, மற்றும் 107.

சில சந்தர்ப்பங்களில் சங்கீதக்காரர்கள் தீர்க்கதரிசிகளைப்போல எழுதினார்கள். அவை மேசியாவின் சங்கீதங்கள் என அழைக்கப் படு கின்றன. இந்த சங்கீதங்கள் மேசியா திரும்ப வருவதைப் பற்றி தீர்க்க தரிசனமாய்ப் பேசுகின்றன. இயேசு கிறிஸ்துவின் முதல் தோற்றம், அவருடைய உயிர்த்தெழுதல் ஆகியவைகளைப்பற்றி 16-ஆம் சங்கீதத் தில் தாவீது தீர்க்கதரிசனமாகப் பேசியிருக்கிறார். பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு இந்த சங்கீதத்திலிருந்து பிரசங்கித்தார். மேசியாவின் சங்கீதங்களுக்கான வேறு எடுத்துக் காட்டுகள் சங்கீதம் 2, 8, 46, 22 மற்றும் 100.

### சங்கீதங்களின் வரலாற்றுப் பின்னணி

அநேக சங்கீதங்களின் வரலாற்றுப் பின்னணி பெரும்பாலும் ஒன்றாம் இரண்டாம் சாமுவேலின் புத்தகங்களிலும், நாளாகமப் புத்தகத்திலும் காணப்படுகிறது. தாவீது சங்கீதப்புத்தகத்தின் பாதியை எழுதியிருக்கிறார். இந்த வரலாற்றுப் புத்தகங்களில் அவருடைய சுய சரிதம் காணப்படுகிறது. இந்த செய்தியைக் கொண்டு, வரலாற்றுப் புத்த கங்களின் பின்னணி செய்தியைப் பெறலாம். ஒரு குறிப்பிட்ட சங்கீதத் தின் வரலாற்றுப் பின்னணியையும் பொருளையும் நீங்கள் தெரிந்து கொள்ளுவது அவற்றை உங்கள் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த உதவி செய்யும்.

அழகிய தியானப் பொருளின்மத்தியில் சில சங்கீதக்காரர்கள் தங்கள் பகைவர்களைப்பற்றி ஜெபிக்கின்றனர். இந்த ஜெபங்களில் சங்கீதக்காரர்கள் பெரும்பாலும் தங்கள் பகைவர்களின் பற்களைத் தங்கள் பட்டயத்தால் உடைத்தெரிய அல்லது எதிரிகளைத் தங்கள் ஆயு தங்களால் அடித்து நொறுக்க உதவி செய்யும்படி தேவனிடம் கேட் கின்றனர். இது ''உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்.... உங்களைத் துன்பப்படுத்துபவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்'' (மத்தேயு 5:44) என்ற இயேசுவின் போதனைக்கு முரண்பாடாயிருக்கிறது.



இந்த சங்கீதங்களை வாசிக்கும்பொழுது வரலாற்றுக் கண்ணோட் டம் முக்கியமானது என்பதற்கு இது ஒரு காரணம். இந்தப் பழமையான, ஏவப்பட்டு எழுதப்பட்ட பாட்டுக்கள் பிரமாணத்தின் காலத்தில் எழுதப் பட்டவை. எதிரிகளை வெறுப்பது, குறிப்பாக அவர்கள் கர்த்தரை அவ மதிக்கும் போது அவர்களை வெறுப்பது பொருத்தமானது என்று அது போதித்தது (உபாகமம் 23:3-6). எனவே தாவீது இவ்வாறு ஜெபித்த போது, அது முரண்பாடாகத் தெரியவில்லை; ''உம்மை வெறுக்கிற வர்களை நான் வெறுக்கவில்லையா, உம்மை வெறுக்கிறவர்களை நான் முழுவதுமாக வெறுக்கிறேன். என்னுடைய வாளினால் அவர்களை வெட்டி, அவர்களை தூசியைப் போலாக்குவேன்.''

வரலாற்றுப் பூர்வமாகப் பார்க்கும் போது இந்த மாதிரி விண்ணப் பங்கள், அந்த சந்தர்ப்பத்திற்குத் தக்க எழுதப்பட்டது தான் என்று காண் கிறோம்.

**அத்தியாயம் 5**

## ''ஆடுகளின் பேச்சு'' இருபத்து மூன்றாம் சங்கீதம்

தாவீதின் மேய்ப்பர் சங்கீதம் பல லட்சக்கணக்கான யூதர்களுக்கும், கத்தோலிக்கர்களுக்கும், புரோட்டர்ஸ்டன்டுகளுக்கும் மிகப்பிரியமான சங்கீதமும் வேதாகமத்தின் அதிகாரமுமாயிருக்கிறது. இந்த சங்கீதத்தில், தாவீது தேவனைப்பற்றி மனிதரிடம் பேசுவதால் பிரசங்கிக்கிறார் என்று கூறலாம். இந்த சங்கீதத்தின் சொற்படியான வடிவம் ''ஆடுகளின் பேச்சு''. ஏனென்றால் அதனுடைய மேய்ப்பரின் மகிமையைப் பற்றி ஒரு ஆடு மற்றொரு ஆட்டுடன் பேசுவதைக் குறிக்கிறது.

கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார் ;

நான் தாழ்ச்சியடையேன்.

அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து,

அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் என்னைக் கொண்டு போய் விடுகிறார்.

அவர் என் ஆத்துமாவைகத் தேற்றி,

தம்முடைய நாமத்தினிமித்தம்

என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்.

நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாங் குக்குப் பயப்படேன்;

தேவரீர் என்னோடே கூட இருக்கிறீர்;

உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்.

என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி,

என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர்;

என் பாத்திரம் நிரம்பி வழிகிறது.

என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்;

நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத் திருப்பேன்.

இருபத்து மூன்றாம் சங்கீதம் பிரசங்கத்திற்குரிய ஒரு சங்கீதமாய் இருப்பதோடு, ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு மனிதனின் சங்கீதமாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட ஆசீர்வாத சங்கீதங்களிலும், ஆசீர்வதிக் கப்பட்ட மனிதனின் ஆசீர்வாதங்கள் பல நிபந்தனைகளுக்குட்பட்டவை என்று காண்கிறோம். இந்த சங்கீதத்தில், புல்லுள்ள இடங்கள், அமர்ந்த தண்ணீர்கள், நிரம்பி வழிகிற பாத்திரம் ஆகியவை தாவீதின் சில ஆசிர்வாதங்கள். இந்த ஆசீர்வாதங்கள் எந்த நிபந்தனையின் அடிப் படையிலானது என்பதை இந்த சங்கீதத்தின் துவக்க வசனத்தில் காண் கிறோம்: *''கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்''*. தாவீது கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார் என்று சொல்ல முடியுமானால், இந்த அழகான மேய்ப்பர் கவிதையில் அவர் குறிப்பிட்ட எல்லா ஆசீர்வாதங்களும் தேவைனப்பற்றிய அவருடைய அனுபவங்களிலிருந்து வந்தவை யாகும்.

உலப்பிரகாரமான ஆசீர்வாதங்களைச் சித்தரித்துக்காட்டும் ஒரு உருவகம் புல்லுள்ள இடங்கள் என்பது. தாவீது தம்முடைய பாத்திரம் ''நிரம்பி வழிகிறது'' (5), என்பதைக் குறிப்பிடும் போது மகிழ்ச்சியைக் குறிப்பிடும் ஒரு உருவக அணியைப் பயன்படுத்துகிறார். அவர் மகிழ்ச்சியான ஒரு மனிதர். அதற்கு முக்கிய காரணம் என்ன? ஏனெனில் கர்த்தர் அவருடைய மேய்ப்பராயிருக்கிறார். கர்த்தர் தாவீதி னுடைய மேய்ப்பராயிருக்கும் காலம் வரைக்கும், அவருக்குத் தேவை யான எல்லாமிருக்கிறது - புல்லுள்ள இடங்கள், அமர்ந்த தண்ணீர்கள், நிரம்பி வழியும் ஒரு பாத்திரம், ஆயத்தப்படுத்தப்பட்ட ஒரு பந்தி முதலியவை. எனினும் இந்த ஆசீர்வதாங்களெல்லாம் நிபந்தனைக்குட் பட்டவை. இவைகளெல்லாம் தாவீது தம்முடைய மேய்ப்பரோடு கொண்டுள்ள உறவின் அடிப்பைடயிலானது. மெய்யாகவே இந்த சங்கீதம் உலகத்திலுள்ள மிக முக்கியமான ஒன்றைப்பற்றியது - நமக்கு தேவனோடுள்ள உறவைப் பற்றியது.



### உறவின் இடம்

உறவு எவ்வளவு முக்கியமானது என்று நாம் தெரிந்து கொள்ளும் பொழுது, அடுத்து நாம் உறவை எப்படி நிலைநாட்டுவது என்ற கேள்வியைக் கேட்க வேண்டும். நம்முடைய கேள்விக்குப் பதில் அந்த சங்கீதத்தின் இரண்டாம் வசனத்தில் காணப்படுகிறது: ''என்னைக் கொண்டுபோய் விடுகிறார்.'' மேய்ப்பர் ஆடுகளின் மேல் தமக்கிருக்கும் தலைமைத்துவ அதிகாரத்தைத் தம்முடைய கோலினால் தலையில் இலேசாக அடித்து, அவைகளைத் தரையில் படுக்கும்படிச் சொல்லு கிறார். நமக்குத் தவிர்க்க முடியாத அல்லது தீர்வுகாண முடியாத பிரச்சினைகள் வரும்போது நம்முடைய தலையில் அடித்து தட்டி, கர்த்தர் நம்முடைய மேய்ப்பராக மாறுகிறார்.

### செயல்படுத்துவதில் உறவு

கர்த்தர் நம்முடைய மேய்ப்பரான பின்பு மட்டுமே அவருக்கு நம்மை வழிநடத்த முடிகிறது. ஒரு கண்ணாடியைப்போல அமைதியா யிருக்கும் தண்ணீரை மட்டுமே ஆடுகள் குடிக்க முடியும் என்பதால், நமக்குப் பொருத்தமான இடங்கள் சூழ்நிலைகள் ஆகியவைகளை அமர்ந்த தண்ணீர்கள் குறிப்பிடுகிறது. நாம் கீழே உட்கார்ந்து இரண்டு காரியங்களை அறிக்கையிடும் வரை நம் மேய்ப்பர் அந்த இடங்களுக்கு நம்மை வழிநடத்த முடியாது: அவை, கர்த்தர் நம்முடைய மேய்ப்பர், நாம் அவருடைய ஆடுகள் ஆகியவை. அடுத்து வரும் வசனங்கள் இந்த உறவை அதனிடத்தில் தக்க வைத்துக் கொள்வதை விவரிக்கின்றன. இதன் அர்த்தம் நாம் எழுந்து மறுபடியும் மேய்ப்பரைப் போலாக வேண்டும்; நம்முடைய உறவைத் திரும்ப பெற வேண்டும் என்பதே.

### உறவின் தோற்றம்

உறவின் தோற்றத்தைப்பற்றி தாவீது சொல்லும் பொழுது, ஒரு மனிதனுக்கும் தேவனுக்கும் இடையிலான உறவை மிகவும் அழகாகா விவரிக்கிறார். மேய்ப்பர் எங்கே அவரை அழைத்துச் சென்றாலும், அங்கு அவர் தாவீதோடு இருப்பார். அவருக்கு முன்பாகப் பேசுவார். எந்த நிபந்தனையுமற்ற அன்போடும் நற்குணத்தோடும் அவருக்குப் பின்னாக நடந்து செல்வார் வேண்டியவைகளைக் கொடுப்பார். அவருக் குள் பாத்திரம் நிரம்பி வழியும்வரை தம்முடைய ஆசீர்வாதத்தைப் பொழிவார் என்றும் தாவீது நமக்குச் சொல்லுகிறார். இந்த உறவு அவருடைய வாழ்நாள் முழுவதும் - நித்திய காலமும் தொடரும் என்ப தும் அவருக்குத் தெரியும்.

இருபத்து மூன்றாம் சங்கீதத்தின் செய்தியை உங்கள் சொந்த வாழ்க்கையில் செயல்படுத்துங்கள். எப்பொழுதாவது கர்த்தரை உங்கள்

வாழ்க்கையின் மேய்ப்பராக்கியிருக்கிறீர்களா? கர்த்தரை உங்கள் மேய்ப் பராக ஆக்கிய பொழுது நீங்கள் புல்லுள்ள இடங்களில் மேய்க்கப்பட்டு அமர்ந்த தண்ணீர்களண்டையில் கொண்டுவரப்பட்டு உங்கள் பாத்திரம் ஆசீர்வாதங்களால் நிரம்பி வழிந்தது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். அந்த வேளையிலிருந்து, புல் இல்லாமற்போய் அல்லது பாத்திரம் காலியாகிவிட்டதா? **உங்கள் சொந்த வாழ்க்கைக்கு நீங்களே மேய்ப்பனாயிருக்கும்படி அமர்ந்த தண்ணீர்களைவிட்டு விலகிப் போய் விட்டீர்களா?**

நீங்கள் மீட்கப்படவேண்டும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். தேவனோடு உங்களுக்குள்ள உறவை அதன் இடத்தில் இருக்கும்படிச் செய்ய அவரை அனுமதியுங்கள். இதன் பின் உங்கள் மேய்ப்பர் உங்க ளோடிருக்கிறார் என்றும், அவருடைய நற்குணத்தோடும் இரக்கத்துட னும் உங்களுக்குப் பின்னாக நடக்கிறார் என்றும், உங்களுக்காக ஒரு பந்தியை ஆயத்தப்படுத்துகிறாரென்றும், தம்முடைய எண்ணெயால் உங்கள் வாழ்க்கையை ஆசீர்வதிக்கிறாரென்றும், உங்களுக்குள்ளாக மகிழ்ச்சியின் பாத்திரம் நிரம்பி வழிகிறதென்றும் தெரிந்து கொண்டு வாழுங்கள். நித்தியத்தை எதிர்கொண்டு உங்கள் வாழ்நாள் முழுவதும் இவைகளை அவரால் உங்களுக்குச் செய்ய முடியுமென்ற திட நம்பிக்கையோடு வாழுங்கள்.

### அத்தியாயம் 6

## ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன் - சங்கீதம் ஒன்று

சங்கீதம் ஒன்று நிச்சயமாக ஆசீர்வதிக்கப்பட்ட மனிதனைப் பற்றிய சங்கீதம். மற்ற எல்லா ஆசீர்வதிக்கப்பட்ட மனிதனைப் பற்றிய சங்கீதங் களும், முதலாம் சங்கீதத்தின் பொதுவான மாதிரியைப் பின்பற்றி, ஒரு மனிதனுக்கு வரும் ஆசீர்வாதங்கள் தற்செயலாகவோ யதேச்சையா கவோ கிடைத்ததல்ல; அவை ஒருவரின் நம்பிக்கையையும், தேர்வை யும் பொறுத்தே அமைகிறது என்று கூறுகிறது. முதலாவது சங்கீதம்:

> *''துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவி களின் வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காரமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.*
>
> *அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப் பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். துன்மார்க்கரோ*



> *அப்படியிராமல், காற்றுப் பறக்கடிக்கும் பதரைப் போல் இருக் கிறார்கள். ஆகையால் துன்மார்க்கர் நியாயத்தீர்ப்பிலும், பாவி கள் நீதிமான்களின் சபையிலும் நிலைநிற்பதில்லை. கர்த்தர் நீதிமான்களின் வழியை அறிந்திருக்கிறார்; துன்மார்க்கரின் வழியோ அழியும்.''*

### ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன் யார்?

ஒன்றாம் சங்கீதம் இரண்டு வகையான மனிதர்களை அறிமுகப் படுத்துகிறது - ஆசீர்வதிக்கப்பட்ட மனிதர், துன்மார்க்கன். இந்த சங்கீதம் நேர்மறையான ஒரு சத்தியத்தை எதிர்மறையான ஒரு வாக்கியத்தினால் தெரியப் படுத்தும் எபிரெய கவிதையின் ஒரு முறையைப் பயன் படுத்துகிறது. ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு மனிதனின் சாயலைப் பற்றி ஆசீர்வதிக்கப் படாத ஒரு மனிதனின் சாயலை எடுத்துக் கூறுவதன் மூலம் தாவீது நமக்கு எடுத்துரைக்கிறார். எடுத்துக்காட்டாக *''துன்மார்க் கருடைய ஆலோசனையில் நடவமாலும்''* (1) என்பதன் அர்த்தம் தேவனுடைய ஆலோசனையின்படி நடக்க வேண்டும் என்பதாகும். அவன் தேவனுடைய ஆலோசனையை தேவனுடைய வசனங்களில் கண்டு கொண்டு, *''இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியான மாயிருக்கிறான்''* (2).

இன்னும், ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன் *''பரியாசக்காரர் உட்காரு மிடத்தில் உட்கார''* மாட்டான் (1). இந்த எதிர்மறை வாக்கியம் ஆசீர் வதிக்கப்பட்ட மனிதன் விசுவாசிகளின் இடத்தில் உட்காருவான். அவன் ஒரு விசுவாசி என்று சொல்கிறது. அவன் தேவனுடைய வசனங்களை விசுவாசித்து, *''கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிரு''*க்கிறான் (2). தேவனுடைய வார்த்தையை அவனுடைய வாழ்க்கையில் ஒரு முக்கிய சக்தியாக்க வேண்டுமானால் தேவனுடைய வசனங்களுக்குக் கீழ்ப்படி வது அவசியம் என்பது அவனுக்குத் தெரியும். அவன் தேவனுடைய வசனங்களில் காணப்படும் ஆலோசனைகளின்படி நடக்கிறான்.

இந்த சங்கீதம் இஸ்ரவேலரின் இரண்டாம் அரசனும், இஸ்ரவேலை ஆண்ட எல்லா அரசர்களிலும் மிகச் சிறந்த அரசனுமாகிய தாவீதினால் எழுதப்பட்டது. மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, நியாயப்பிர மாணத்தை பத்திரமாக பிரதியெடுத்து அதை அவனோடு எப்போதும் வைத்துக்கொள்வது அரசனின் கடமையாகும். *''இந்த நியாயப்பிர மாணத்தின் எல்லா வார்த்தைகளையும், இந்தக் கட்டளைகளையும் கைக்கொண்டு. இவைகளின்படி செய்வதற்காகத் தன் தேவனாகிய கர்த் தருக்குப் பயந்திருக்கும்படி கற்றுக்கொள்ளும் பொருட்டு''* (உபாகமம் 17:19) என்று கூறுகிறது. முதலாம் சங்கீதத்தின் அடிப்படையில், ஏவப்பட்ட இந்த பாடல்புத்தகத்தில் எழுதியபடி, இந்தப் பயிற்சியே

தேவனுடைய வசனங்களில் தாவீதை அன்புகொள்ள வைத்து அவனை ஒரு ஆசீர்வதிக்கப் பட்ட மனிதனாக்கியது என்று பார்க்கிறோம்.

ஆசீர்வதிக்கப்பட்ட மனிதனின் ஆசீர்வாதங்கள் எவை? ஆசீர்வதிக் கப்பட்ட மனிதனின் ஆசீர்வாதங்களுக்கு வழிகாட்டும் நிபந்தனைகளான திடநம்பிக்கைகளையும் தேர்வுகளையும் விவரித்த பின். தாவீது தம்முடைய ஆசீர்வாதங்களைப் பட்டியலிடுகிறார்:

### ஸ்திரத்தன்மை

ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன், *''நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு (ஸ்திரமான ஒரு)... மரத்தைப் போலிருப்பான்''* (3). இங்கே நிலம் ஈரமாயிருக்கிறது. வேர்கள் பரந்து ஆழமாய்ச் செல்லுகின்றன. நிலத்துக் கடியிலான அதன் வேர்த்தொகுதி, எல்லாத் திசைகளிலும் விரிவடைந்து செல்லுகிறது. பல டன் எடையுள்ள ஒரு லாரி பெரிய தேக்கு மரத்தின் மேல் மோதினால், அந்த வாகனம் அழிந்து போகும். மரமோ ஒரு அங் குலம் கூட நகராது. அதைப்போன்ற ஸ்திரத்தன்மை, நன்றாக நடப்பட்ட, நன்றாக உரம் பெற்ற மரத்தின் ஸ்திரத்தன்மையே ஆசீர்வதிக்கப்பட்ட மனிதனின் ஸ்திரத்தன்மையைக் குறிப்பிடுகிறது. தம்முடைய போதனை களைக் கேட்டு அதன்படிச் செய்கிற மனிதனைப் பற்றி விளக்கிக்கூறிய பொழுது இயேசுவானவர் இதே காரியத்தை சொன்னார் (மத்தேயு 7:24-25).

### வளம்/செழுமை

ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன் கனிகொடுப்பவனாயிருக்கிறான் - தன் காலத்தில் தன் கனியைக் கொடுக்கிற மரம் இங்கே சித்தரிக்கப்படுகிறது. அவனுடைய வாழ்க்கையின் எல்லாப் பருவகாலங்களிலும், அவன் வாழ்க்கையின் அந்தந்த பருவத்திற்கு ஏற்ற கனிகளைக் கொடுப்பவ னாக இருக்கிறான் என்பது இதன் அர்த்தமாகும். அவன் ஒரு விசுவாசி யாகவும், தேவனுடைய வசனங்கள் மீது அன்பு கொண்டவனுமாயிருப் பதால், தேவனைப்பற்றிய அவனது அறிவு பரிசுத்த வசனங்களுக்கும் அப்பால் சென்று ஜீவனுள்ள வசனங்களோடு ஒரு உறவை ஏற்படுத்து கிறது. இந்த உறவு அவன் கனிகொடுப்பதற்கு முக்கியமானதாயிருக் கிறது. நாம் கனி கொடுப்பவர்களாயிருக்க வேண்டுமானால், ஒரு திராட்சச்செடியானது அதன் கொடிகளோடு இணைந்திருப்பதைப் போல நாம் அவரில் நிலைத்திருக்க வேண்டுமென்று இயேசு போதித்தார்.

### நீண்ட ஆயுள்

ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன் முதியவனாகும்போது கசப்பான உதிர்ந்து போன ஒரு மனிதனாயிருக்க மாட்டான். *''இலையுதி*



*ராயிருக்கிற மரத்தைப் போலிருப்பான்''* என்று நாம் வாசிக்கிறோம். அவன் வாழ்கிற ஒவ்வொரு நாளும், அவன் வாழப்போகிற ஒவ் வொரு நாளுக்கும் அவனை ஆயத்தப்படுத்துகிறது. அவனுடைய வாழ்க்கையில் ஆண்டுகள் கூட்டப்படும் போது அதன் தரமும் உயர்ந்து கொண்டே போகிறது.

### செழிப்பு,

இன்னும் நாம், *''அவன் (ஆசீர்வதிக்கப்பட்டவன்)* செய்வதெல் லாம் வாய்க்கும்'' என்று வாசிக்கிறோம். தாவீது இங்கே உலகப் பிரகாச மான செயல்களைக் குறிப்பிடவில்லை. ஆவிக்குரிய காரியங்களையே வாய்க்கும் என்று குறிப்பிடுகிறார். ஆசீர்வதிக்கப்பட்ட மனிதனின் வளமை அவனது உள் மனிதனின் வளமை என்றும் அது அவனுடைய நித்தியத்தைப் பாதுகாக்கிறது என்றும் நாம் கருத முடியும். இந்த உலகத்தை விட்டுப் போகும்போது எவைகளை நாம் விட்டுப் போகி றோமோ, அவைகள் நித்தியத்திற்குரியதல்ல. அவைகளுக்காக நாம் இவ்வுலகில் வாழ்வதில் எந்தப் பயனுமில்லை.

### பாதுகாப்பு

ஆசீர்வதிக்கப்பட்ட மனிதனின் கடைசி ஆசீர்வாதங்களும் எதிர்மறையாகவே கொடுக்கப்பட்டிருக்கிறது: *''துன்மார்க்கர் நியாயத் தீர்ப்பிலும், பாவிகள் நீதிமான்களின் சபையிலும் நிலைநிற்பதில்லை''* (5). ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன் தேவனுடைய வசனங்களில் காணப் படும் அவருடைய ஆலோசனைப்படி நடப்பதால் இந்த வாழ்க்கை யிலும், அடுத்த வாழ்க்கையிலும் அவனுக்குப் பாதுகாப்பு இ ருக்கிறது. அவன் அப்படிச் செய்வதால், நியாயத்தீர்ப்பில் கிறிஸ்துவினால் செய்து முடிக்கப்பட்ட கிரியையின் அடிப்படையில் அவன் எல்லா காலங்களுக் குமாக நீதிமான்களின் கூட்டத்தில் இணைவான். மேய்ப்பனின் சங்கீதத் தில் குறிப்பிட்ட ஆசீர்வாதங்களைப் போல, முதலாம் சங்கீதத்தில் ஆசீர் வதிக்கப்பட்ட மனிதனின் ஆசீர்வாதங்கள் ''அவன் வாழ்நாள் முழுவதுக் கும் நித்தியத்துக்குமானது!''

### கோவிலில் முன் பெஞ்சில் இரு மனிதர்கள், நீ இவர்களில் யார்?

தாவீது தெய்வபக்தியற்ற மனிதர்களைப் பற்றி வெறுமனே, *''துன்மார்க்கரோ அப்படியிராமல்''* என்று எழுதுகிறார் (4). தெய்வ பக்தி யற்றவன் ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன் விசுவாசிப்பதைப் போலின்றி விசுவாசமற்றவனாயிருக்கிறான். தெய்வபக்தியற்றவன் தேவனுடைய வேதத்தில் பிரியமாயிருக்கமாட்டான். இரவும் பகலும் அதன்மீது தியான மாயிருக்கவும் மாட்டான். இதனால் அவர்களுக்கு ஸதிரத்தன்மை, வளமை, நீண்ட ஆயுள், செழிப்பு, பாதுகாப்பு ஆகியவை இராது. ஆசீர்

வதிக்கப்பட்ட மனிதனைப் போல அவன் நித்தியத்தையும் அனுபவிப் பதில்லை.

ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன் ஏன் ஆசீர்வதிக்கப்படுகிறான்? ஏனெனில் அவனுடைய சரியான தேர்வுகளால், அவன் தேவனுடைய வேதத்தை விசுவாசித்து, அதை தியானிப்பதைத் தெரிந்துகொண்டான். துன்மார்க்கரிடமும் அவர்களுடைய கேடான வழிகளிலுமிருந்து தன்னை விலக்கிக்கொள்ளுவதைத் தெரிந்து கொண்டான். அவனுடைய ஆசீர்வாதங்களெல்லாம், அவன் செய்த தேர்வுகளின் விளைவு களேயாகும்.

ஆசீர்வதிக்கப்பட்ட மனிதனின் சங்கீதம் ஒவ்வொன்றும் இந்தக் கேள்வியைக் கேட்கிறது. ''கோவிலில் முன் பெஞ்சில் இரண்டு மனிதர் கள், நீ இவர்களில் யார்?'' தேவனுடைய கிருபையால், நீ ஆசீர்வதிக்கப் பட்ட மனிதனா? விசுவாசிகளின் இடத்தில் நீ உட்கார்ந்திருக்கிறாயா? தேவனுடைய வேதத்தை நீ விசுவாசிக்கிறாயா? இரவும் பகலும் அதன் மேல் தியானமாயிருக்கிறாயா? அது கொடுக்கும் ஆலோசனையின்படி நீ நடக்கிறயா? முதலாம் சங்கீதத்தின்படி ஆசீர்வதிக்கப்பட்ட மனிதனின் ஆசீர்வாதங்களுக்கு இது தான் விளக்கம்.

அத்தியாயம் 7

## ஒவ்வொருவரும் ஆசீர்வதிக்கப்பட்டவரா?

## *சங்கீதம் 128*

கர்த்தருக்குப் பயந்து,
அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ,
அவன் பாக்கியவான்.
உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்;
உனக்கு பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்.
உன் மனைவி உன் வீட்டோரங்களில்
கனிதரும் திராட்சக்கொடியைப்போல் இருப்பாள்;
உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும்
ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள்.
இதோ கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன்
இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான்.



கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்;
நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய்.
நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும்,
இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய்''.

### *ஒவ்வொருவரும் ஆசீர்வதிக்கப்பட்டவரா?*

இந்த சங்கீதத்தில் முதல் வசனத்தை *''அவன் பாக்கியவான்''* என்பதோடு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்று அநேக மக்கள் விரும்புகின்றனர். ஏனெனில் ஒவ்வொருவரும் ஆசீர்வதிக்கப்பட்டவர் என்று அவர்கள் நம்புகின்றனர். எனினும் வேதவசனங்கள் ஆசீர்வதிக் கப்பட்ட மனிதனின் ஆசீர்வாதங்கள் நிபந்தனைக்குட்பட்டது என்று சொல்லுகிறது. *''கர்த்தருக்குப் பயந்து அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ அவன்* (ஒவ்வொருவரும்) *பாக்கியவான்''* (1). நாம் கற்றுக் கொண்டது போல், ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன் ஆசீர்வதிக்கப் படுகிறான். இதற்குக் காரணம் அவனுடைய நம்பிக்கையும், திட விசு வாசமும், நிதானமாய் யோசித்து முடிவுசெய்த தேர்வுகளுமாகும்.

இந்தச் சங்கீதமும் கர்த்தருக்குப் பயப்படுகிற ஒவ்வொருவரும் ஆசீர்வதிக்கப்பட்டவர் என்று போதிக்கிறது. ஆனால் இது இன்னொரு கேள்வியை எழுப்புகிறது: யோபுவின் புத்தகம் நல்ல மனிதர்கள் <u>எப்பொழுதும்</u> ஆசீர்வதிக்கப்படவில்லை என்று போதிக்கவில்லையா? யோபுவினுடைய நண்பர்கள் யோபுவினிடம் பாவம் செய்கிறவர் களைத் தேவன் தண்டிக்கிறார் என்றும், பாவம் செய்யாதவர்களை ஆசீர்வதிக்கிறார் என்றும் சொன்னபொழுது, தேவன் அவர்களின் கூற்று தவறு என்று அவர்களிடம் சொன்னார் எனினும், ஆசீர்வதிக்கப்பட்ட மனிதனின் சங்கீதங்களிலிருந்து, <u>பொதுவாக</u> ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன் தான் விதைத்ததைத் தான் அறுப்பான் என்றும், யோபுவைப் போன்ற தெய்வபக்தியுள்ள மக்கள் துன்பப்படும்போது, அது ஒரு விதிவிலக்கேயன்றி எப்போதும் நடப்பதல்ல என்று கற்றுக்கொள்ளு கிறோம்.

### தேவனுடைய கையாளுமுறை

சங்கீதம் 128 ஆசீர்வதிக்கப்பட்ட மனிதனும் அவனுடைய ஆசீர்வாதங்களும், உலகத்தில் ஒரு தாக்கம் ஏற்படுத்த தேவனுடைய ஏற்பாடு என போதிக்கிறது. யோபுவின் புத்தகத்தில் நாம் கற்றுக் கொண்டபடி, நாம் ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளுவதற்குச் சரியான பதில், ''கர்த்தாவே, நீர் எனக்கு என்ன கொடுக்கப் போகிறீர்?'' என்பத தல்ல, ''கர்த்தரே, நான் ஆசீர்வதிக்கப்பட்ட மனிதனாயிருப்பதால் என்னால் உமக்குப்பயன் என்ன?'' என்பதாயிருக்க வேண்டும்.

தேவன் கையாளும் முறை ஒரு மாதிரியைப் பின்பற்றுகிறது. அவர் தம்மை விசுவாசித்துத் தமக்குக் கீழ்ப்படியும் ஒரு மனிதனை கண்டுபிடித்து, அவனை ஆசீர்வதிப்பதைத் தெரிந்துகொள்ளுகிறார் (1-2). தேவனுடைய ஆசீர்வாதம் இந்த மனிதன் மூலமாக அவனுடைய மனைவிக்குக் கடந்து சென்று, அவள் அவனுடைய வீட்டில் கனிதரும் திராட்சக்கொடியைப்போல் ஆகிறாள் (3). இதற்குப்பின் இந்த ஆசீர்வாதம், அவன் மூலமாகவும் அவனுடைய கனிதரும் மனைவியின் மூலமாகவும் அவனுடையப் பிள்ளைகளுக்குச் செல்லுகிறது. அவர்கள், அவனுடைய *''பந்தியைச் சுற்றிலும் ஒலிவ மரக்கன்றுகளைப் போல் இருப்பார்கள்''* (3). ஒலிவ மரம் கனிகொடுப்பதற்கு ஒரு அடையாளமாயிருக்கிறது.

தேவனுடைய ஆசீர்வாதம் குடும்ப அமைப்பிலிருந்து, சீயோனை ஆசிர்வதிக்கச் செல்லுகிறது. அது பழைய ஏற்பாட்டின் ஆவிக்குரிய சமூகத்திலிருந்து (சீயோன்) குடும்பத்தின் தேவனுடைய ஆசீர்வாத நகரத்தில் (எருசேலம்) தாக்கம் ஏற்படுத்தி, ஜாதியிலும் (இஸ்ரவேல்) கடைசியாக உலகத்திலும் தாக்கம் ஏற்படுத்துகிறது. இந்தச் சங்கீதம், தேவன் உலகத்துக்குத் தம்மைப்பற்றி கூற குடும்ப அமைப்பைப் பயன்படுத்துகிறார் என்ற முக்கியமான கருத்தைப் போதிக்கிறது. ஒரு நகரத்தில், ஒரு தேசத்தில் உலகத்தில் அவர் தாக்கமளிக்க நினைக்கும்போது முதலாவதாக அவர் ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட மனிதனோடும், ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு குடும்பத்தோடும் அதைத் துவங்குகிறார்.

### தேவனுடைய முன்னுரிமைகள் - *சங்கீதம் 127*

கர்த்தர் வீட்டைக் கட்டாராகில்,

அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா;

கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா.

நீங்கள் அதிகாலையில் எழுந்து,

நேரப்பட வேலையில் தரித்து,

வருத்தத்தின் அப்பத்தைச் சாப்பிகிறதும் விருதா;

அவரே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார்.

இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்திரம்,

கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்.

வாலிப வயதின் குமாரர். பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

அவைகளால் தன் அம்பறாத்தூணியை நிரப்பின புருஷன் பாக்கியவான்;



அவர்கள் நாணமடையாமல் ஒலிமுக வாசலில் சத்துருக்களோடே பேசுவார்கள்.

சங்கீதம் 128-டோடு துணையாய் கருதப்பட்ட இந்த சிறிய சங்கீதம், சாலொமோனால் எழுதப்பட்ட ஒரே சங்கீதம். அவன் ஒரு கட்டிட வல்லுனனாயிருந்ததால், இந்தச் சங்கீதத்தில் அவன் கட்டிடத்தை உவமையாகப் பயன்படுத்துவதை நாம் காண்கிறோம். அவன் பெயர் வைக்கப்பட்ட தேவாலயத்தையும், முழு நகரங்களையும், பூங்காக்களையும், லாயங்களையும் கப்பல்களையும் அவன் கட்டினான். எனினும், அவைகளைக் கட்டுவது விருதாவாகவும் இருக்கக் கூடும் என்று சாலொமோன் நமக்குச் சொல்லுகிறார்: *''கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா''* (1). வருத்தப்பட்டு, உழைத்துக் கட்டுகிறது விருதாவான காரியமாயிருக்கக் கூடும். ஏனெனில் வருத்தப்பட்டு, உழைத்து, தவறானவைகளையும் கட்டலாம்.

இந்தச் சங்கீதம், பிரசங்கியில் சாலொமோன் தன்னுடைய வாழ்க்கையில் செய்த பெரும்பான்மையான காரியங்கள் விருதா என்று பிரசங்கித்த கடைசி பாவ அறிக்கையை ஒத்திருக்கிறது. அவன் பிள்ளைகளைப் பற்றிய அழகிய உருவக அணிக்குச் செல்லும்போது, பிள்ளைகளுடைய வாழ்க்கைகளை சிறப்பாகக் கட்டும்போது தான் பெற்றோர் மிகவும் முக்கியமான காரியத்தைச் செய்கின்றனர் என்று சொல்லுகிறான். அவன் தான் கட்டிய மற்ற எல்லாக் காரியங்களையும் விட தன்னுடைய பிள்ளைகளின் வாழ்க்கைகளை சிறப்பாக அமைக்க அதிக நேரம் செலவிட்டிருக்க வேண்டும் என்று சாலொமோன் விரும்பியதை வெளிப்படுத்துவதாயிருக்கலாம்.

சாலொமோன், *''வாலவயதின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்,''* (5) என்று நம்மிடம் சொல்லுகிறார். இந்த உருவக அணியில் அம்புகள் உங்கள் பிள்ளைகளாகவும், நீங்கள் வில்லாகவுமிருக்கிறீர்கள். உங்கள் பிள்ளைகள் இந்த உலகத்தில் செல்லவேண்டிய விசையும் திசையும் வில்லினால் நிர்ணயிக்கப்படுகிறது. அந்த வில், உங்கள் வீடு.

இந்த சங்கீதத்தின் முக்கியச் செய்தி, ஆரம்ப வசனத்தில் காணப்படுகிறது, *''கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா''*. தேவனால் மட்டுமே செய்யக் கூடிய அநேகக் காரியங்கள் இருக்கின்றன. உங்கள் பிள்ளைகளில் புதிய

வாழ்க்கையை உருவாக்க தேவனால் மட்டுமே முடியும். அவரால் மட்டுமே விசுவாச வரத்தைக் கொடுக்க முடியும். சில வழிகளில் நீங்கள் உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையைக் கட்ட அனுமதிக்கும் வரையில் தேவனால் அதைக் கட்ட முடியாது. இந்த உண்மை ஒரு அழகிய உருவக அணியில் அடக்கப்பட்டிருக்கிறது. சாலொமோன், *''அவரே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரை அளிக்கிறார்,''* என்று சொல்லு கிறார். நாம் விழித்திருக்கும் நேரம் வரை, நம்முடைய சரீரங்களில் தேவனால் புதிய சக்தியளிக்க முடியாது. எனினும் நாம் தளர்ந்து தூங்கும் போது, தேவன் சுறுசுறுப்புடன் நம்முடைய சரீரங்களில் புதிய ஜீவனை அளிக்கிறார். ஒரு பெற்றோராக இருப்பதன் பொறுப்புக் களுக்கும் சவால்களுக்கும் அந்த உருவக அணியைச் செயல்படுத் துங்கள்.

### இதன் அர்த்தம் என்ன?

வருத்தப்பட்டு, வேலை செய்து கட்டுவது பயனற்றுப் போக வாய்ப்பு இருக்கிறது. ஏனென்றால், நம்முடைய முன்னுரிமைகள் தவறானவை. இந்த உலகத்தில் தேவன் குடும்ப அமைப்பு மூலமாக உலகில் தாக்கம் விளைவிக்க முற்படுவதால் சங்கீதம் நம்முடைய பிள்ளைகளை நாம் நன்கு வளர்ப்பதற்கு என்று சவாலிடுகிறது. இந்த முன்னுரிமைகளுக்காக நாம் நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் உலகத்தில் தாக்கம் விளைவிக்கத் தேவன் குடும்ப அமைப்பைப் பயன்படுத்துகிறார் என்று சாத்தானுக்குத் தெரியும். இன்று திருமண உறவு மற்றும் குடும்பங்களில் பிளவுகள் தொற்றுநோய் போல் பரவுவதிலிருந்து தேவன் கட்டியுள்ள குடும்ப அமைப்பை சாத்தான் நாசம் செய்யத் தீர்மானித்திருக்கிறான் என்ற துக்ககரமான உண்மை நமக்குத் தெரிகிறது.

ஒவ்வொருவரும் ஆசீர்வதிக்கப்பட்டவரா? ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன் பற்றிய சங்கீதங்களிலிருந்து அது அப்படியல்ல என்று காண் கிறோம். விசுவாசமும் கீழ்ப்படிதலுமுள்ள ஆண் அல்லது பெண் மட்டுமே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். அவர்களுடைய ஆசீர்வாதங்கள் அவர்களின் பிள்ளைகள் மூலமாக இந்த உலகத்தில் தாக்கம் உண்டாக் குகிறது. நீ அந்த ஆணா அல்லது பெண்ணா? ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன், அவனுடைய ஆசீர்வாதங்களுக்குரிய நிபந்தனைகளைக் கருத்திற்கொண்டு இந்தக் கேள்விக்குப் பதிலளியுங்கள்: ''கோவிலில் முன் பெஞ்சில் இரு மனிதர்கள்: நீ இவர்களில் யார்?''



**அத்தியாயம் 8**

## மன அழுத்தத்துக்குத் தீர்வுகள்-சங்கீதம் நான்கு

ஆசீர்வதிக்கப்பட்ட மனிதனைப் பற்றிய சங்கீதங்கள் பலவற்றை ஆழ்ந்து ஆராய்ந்து விட்டு, இப்போது நாம் உணர்வுகளைக் கிளரும் சங்கீதங்களை ஆழ்ந்து நோக்கப் போகிறோம். இந்தச் சங்கீதங்கள் பெரும்பாலும் ஜெப கீதங்கள்-இவை சங்கீதக்காரன் தேவனிடம் மனிதனைப் பற்றிப் பேசுகிறவை-வழக்கமாக தன்னைப்பற்றிப் பேசுகிறவை. அப்படிப்பட்டச் சங்கீதங்களில் ஒன்று நான்காம் சங்கீதம் :

> ''என் நீதியின் தேவனே, நான் கூப்பிடுகையில் எனக்குச் செவிகொடும்.
>
> நெருக்கத்தில் இருந்த எனக்கு விசாலமுண்டாக்கினீர்;
>
> எனக்கு இரங்கி, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.
>
> மனுபுத்திரரே, எதுவரைக்கும் என் மகிமையை அவமானப் படுத்தி,
>
> வீணானதை விரும்பி, பொய்யை நாடுவீர்கள்.
>
> பக்தியுள்ளவர்களைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்து கொண்டா ரென்று அறியுங்கள்;
>
> நான் கர்த்தரை நோக்கி கூப்பிடுகையில் அவர் கேட்பார்.
>
> நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்;
>
> உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள்.
>
> நீதியின் பலிகளைச் செலுத்தி,
>
> கர்த்தர்மேல் நம்பிக்கையாயிருங்கள்.
>
> எங்களுக்கு நன்மை காண்பிப்பவன் யார் என்று சொல்லுகிற வர்கள் அநேகர்;
>
> கர்த்தாவே, உம்முடைய முகத்தின் ஒளியை எங்கள்மேல் பிரகா சிக்கப்பண்ணும்.
>
> அவர்களுக்குத் தானியமும் திராட்சரசமும் பெருகியிருக்கிற காலத்தின் சந்தோஷத்தைப் பார்க்கிலும்,

அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர்.

சமாதானத்தோடே படுத்துக்கொண்டு நித்திரை செய்வேன்;

கர்த்தாவே நீர் ஒருவரே என்னை சுகமாய்த் தங்கப்பண்ணுகிறீர்.

## மன அழுத்தத்தை எப்படி எதிர்கொள்ள வேண்டும்

சங்கீதம் நான்கில், அதை எழுதியவரின் உணர்வு நெருக்கப்படுதல் என அறிகிறோம். இதில் நெருக்கம் என்று சொல்வது இதை எழுதியவர் மன அழுத்தத்தைக் குறிப்பிடுகிறார் என்று நீங்கள் கண்டுகொள்ளுவீர்கள். இன்று நாம் வசிக்கும் மன அழுத்தமிக்க உலகம் ''மனவிசாரத்தின் காலம்'' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் நாம் சந்திக்கும் மன அழுத்தத்தை எப்படி சமாளிப்பது என்று இந்த சங்கீதம் நமக்குக் காட்டுகிறது.

## ஜெபம்

சங்கீதம் 4-இல் தாவீது அவனுடைய தீவிர உணர்வுகளின் மன அழுத்தங்களுக்கு ஜெபத்தின் மூலம் பதிலளித்தான். அவன், *''என் நீதியின் தேவனே, நான் கூப்பிடுகையில் எனக்குச் செவிகொடும்''* (1) என்று ஜெபித்தான். ஜெபம் என்பது தேவனோடு உரையாடுவது உரையாடலுக்கு இரண்டு பரிமாணங்கள் உள்ளன - பேசுவது, கேட்பது, நீங்கள் அவருடன் பேச வேண்டும் என்று தேவன் விரும்புகிறார், எனினும் அவரும் உங்களோடு பேச விரும்புகிறார். பெரும்பான்மையான ஜெபசங்கீதங்களில், முதலாவது சங்கீதக்காரன் தேவனிடம் பேசுவதைக் காண்கிறோம், அதன்பின் தேவனுடைய பதிலைக் கேட்கிறோம். சங்கீதக்காரன் தேவனிடம் முறையிடுகிறான், பின்னர் தேவனுடைய பதிலைக் கேட்கிறோம். சங்கீதக்காரன் தேவனிடம் முறையிடுகிறான். பின்னர் தேவன் அவனுக்குக் கொடுக்கும் ஜெபத்தைக் கேட்டார் என்ற உத்தரவாதத்தைப் பெறுகிறான். ஏனெனில் அவர் அவனுடைய ஜெபத்துக்குப் பதிலளிக்கிறார்.

தன்னுடைய நெருக்கம் எதனால் ஏற்பட்டது என்று தேவனிடம் கூறி தன் ஜெபத்தைத் தாவீது துவங்கினான் (2). ஒரு வெளிப்படுதலைக் கொடுத்துத் தேவன் பதிலளித்தார்: *''பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்துகொண்டாரென்று அறியுங்கள்; நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில் அவர் கேட்பார். நீங்கள் கோபங்கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள்''* (3,4). தேவன் நம்முடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்கும் போது நாம் திரும்பவும் அதே மக்களாயிருக்கக் கூடாது. பதிலளிக்கப்பட்ட ஜெபம் என்பதின் அர்த்தம் என்ன என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். அதன் அர்த்தம் சர்வலோகத்து தேவன் நம்மேல் அக்கறைகொண்டு, அவரோடு நாம் உரையாடுவதைக் கேட்கிறார், பதிலளிக்கிறார் என்பதே. நமக்காக ஒரு தரம் பதிலளிக்கப்பட்ட ஒரு ஜெப அனுபவத்தை நாம் பெறும்பொழுது, வாழ்க்கைத் திரும்பவும் அதே மாதிரியாக இருக்கக் கூடாது.



## உங்கள் இருதயத்தை சோதித்தறியுங்கள்

தாவீதோடு தேவன் பேசியபொழுது, ஒரு காரியத்தைச் செய்யும்படி அவனிடம் சொன்னார். *''உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தில் பேசிக்கொண்டு அமர்ந்திருங்கள்''* (4). தேவன் தாவீதினிடம் அமர்ந்திருக்கும்படிக் கூறி, தமக்குச் செவிகொடுக்கும்படி அவனிடம் சொல்லுகிறார். தேவன் தாவீதினிடம் *''உங்கள் படுக்கையிலே உங்கள் இருதயத்தோடு பேசிக்கொண்டு....''* என்று சொல்லும் போது அதற்கு ஒரு அர்த்தம் இருக்கிறது. அவர் தாவீதை தனக்குள்ளே பேசும்படிச் சொல்லுகிறார். அவர் தாவீதை தனது இருதயத்தைச் சோதித்தறியும்படிச் சொல்லுகிறார்.

## நேர்மையான காரியத்தைச் செய்யுங்கள்

தாவீது தன்னுடைய இருதயத்தைச் சோதித்த பொழுது, அவனுடைய மன அழுத்தத்தைப் பற்றி என்ன செய்யவேண்டும் என்று அவனுக்குக் காட்டினார். தாவீது, *'நீதியின் பலிகளைச் செலுத்தி, கர்த்தர் மேல்''* (5) நம்பிக்கையாயிருக்க வேண்டுமென்று தேவன் அவனை அறிந்து கொள்ளச் செய்தார். இதை அவர் செய்ய வேண்டிய அவசியம் என்ன? ஏனெனில் அநேகர் கவனித்துக் கொண்டே, ''எங்களுக்கு நன்மை காண்பிப்பவன் யார்'' (6) என்று கேட்கிறார்கள். மக்கள் தாவீதைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். தாவீதின் எடுத்துக்காட்டிலிருந்து தேவனைப் பற்றி அவர்கள் கற்றுக்கொள்ளுவார்கள்.

தாவீது ஒரு தீர்மானத்தைத் தெரிந்தெடுக்கும் நிலையைச் சந்திக்கிறான் என்று நாம் யூகிக்கலாம். அவன் தகுந்த காரியத்தைச் செய்துத் தப்பிப் பிழைக்கலாம். அல்லது நேர்மையான காரியத்தைச் செய்ய முடியும். நேர்மையான காரியத்தை அவன் செய்தால், அவனால் ஆபத்திலிருந்துத் தப்பிப் பிழைக்க முடியாது. அவன் மேன்மையான மனிதனாயிருந்ததால், தகுதியான காரியத்தைச் செய்து குற்றத்தோடு அவனால் வாழமுடியாது. தேவனோடு அவன் உரையாடியபோது, சரியான காரியத்தைச் செய்வதற்கு, எந்தத் தியாகங்களையும் செய்ய முடிவெடுத்தான். மக்கள் தன்னிடமிருந்து நன்மையை நோக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று அவனுக்குத் தெரியும். அதாவது, மிகப்பெரிய தியாகங்களைச் செய்ய வேண்டியிருந்தாலுங்கூட, நேர்மையானதையே செய்யும் ஒருவனாக அவன் இருந்தான்.

நீதியின் பலிகளை அளிக்கப்போவதாக தாவீது முடிவெடுத்த பொழுது அவன் அதிகமாக தன் உணர்வுகளிலே மாற்றத்தை அனு பவித்தான். அவன், *''அதிக சந்தோஷத்தை என் இருதயத்தில் தந்தீர். சமாதானத்தோடே படுத்துக்கொண்டு நித்திரை செய்வேன்; கர்த்தாவே, நீர் ஒருவரே என்னை சுகமாய்த் தங்கப்பண்ணிகிறீர்''* (7,8) என்றான்.

தாவீதினுடைய நெருக்கத்தைப்போன்ற சூழ்நிலையில் நீங்கள் இருந்தால் உங்கள் இருதயதத்திலே பேசி தேவனோடு உரையாடுங்கள். உங்கள் கவலையில் எது தகுதியுள்ளது, எது நேர்மையானது எது ஆவிக்குரிய ஒரு போராட்டமாயிருக்கிறது என்று கண்டு கொண்டால், உங்கள் இருதயத்தில் நீதியின் பலிகளைச் செலுத்தத் தீர்மானித்து தேவன் மீது நம்பிக்கை வையுங்கள். தாவீதின் மன அழுத்தத்துக்கான தீர்வு உங்களுடைய சன்மார்க்க அழுத்தம், ஓய்வின்மை, பயம் ஆகியவற்றிலிருந்து ஓய்வு, சமாதானம், நல்ல இரவு நித்திரை ஆகிய தீவிர உணர்வு நிலையாக மாற்ற முடியும் என்று நிரூபியுங்கள்.

### அத்தியாயம் 9

## *சர்வ வல்லமையுள்ள ஆலோசனை கர்த்தா*

## *சங்கீதம் 139*

''தேவனே, என்னை ஆராய்ந்து,
என் இருதயத்தை அறிந்து கொள்ளும்;
என்னை சோதித்து என் சிந்தனைகளை அறிந்து கொள்ளும்.
வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து,
நித்திய வழியில் என்னை நடத்தும்''.
(சங்கீதம் 139:23,24).

ஏவப்பட்ட பாடல் ஆசிரியர் தேவனிடம் மனிதனைப்பற்றி பேசுவது தாவீதின் மிகப்பெரிய சங்கீதமான நூற்று முப்பத்து ஒன்பதாம் சங்கீதம், ஜெபத்தைப்பற்றிய சங்கீதத்துக்கு மற்றொரு எடுத்துக்காட்டு. இந்தச் சங்கீதத்தில், தேவன் தாவீதின் மிகப்பெரிய ஆலோசகராயிருப் பதைக் காண்கிறோம். தேவன், இஸ்ரவேலின் முதல் இராஜாவான சவுலுக்குப் பதிலாக ஒருவனைக் கண்டுபிடித்துவிட்டதாக சாமுவேலின் மூலம் சவுலுக்குச் சொன்னபொழுது, அவர் தாவீது தன் இருதயத்தைப் பின்பற்றிய மனிதன் என்றும், அவன் தேவனுடைய சித்தப்படி எல்லாக் காரியங்களையும் செய்பவனென்றும் விவரித்தார். தாவீது தன்



வாழ்க்கையை தேவனுடைய சித்தத்தின்படி வாழ விரும்பியதால் அவன் இந்த அழகிய ஜெபத்தை ஏறெடுத்தான். இந்த ஜெபத்தின் சாராம்சம் கடைசி இரண்டு வசனங்களில் தான் அடங்கியுள்ளது. இந்த சங்கீதத்தின் மற்றவசனங்களைப் பத்திகளாகப் பிரிப்போமானால், ஒவ் வொரு பத்தியும், இந்த தேவன் யார், இந்த ஜெபத்தை தாவீது யாருக் காக ஜெபிக்கிறான், ஏன் தாவீது தனது ஜெபத்தை இந்தத் தேவனிடம் ஜெபிக்கிறான் என்றும் காட்டக்கூடும். தாவீது இந்த ஜெபத்தை ஜெபித்த போது, அநேக தேவர்களும் விக்கிரகங்களும் இருந்தன; அவைகளுக்கு நேராக ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டன.

முதலாவது பத்தியில் (1-5) தாவீது தனக்குத் தெரிந்த தேவனிடம் ஜெபிப்பதாகச் சொல்லுகிறான். *''கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர்''* (1) என்று தாவீது ஜெபித்தான். உங்களுக்கு பெயர் பெற்ற ஒருவரை, ஒருவேளை உங்கள் தேசத்தின் அரசியல் தலை வரைத் தெரியும் என்று நீங்கள் சொல்லலாம். எனினும், அந்தப் பெயர் பெற்ற மனிதர் வெளிப்படையாக உங்களைத் தெரியும் என்று சொல்லுவது உங்களுக்கு மகிழ்ச்சி தரும் ஒரு காரியம் அல்லவா? சர்வலோகத்துக்கும் தேவனாயிருப்பவருக்குத் தாவீதைத் தெரியும் என்ற மகிமையான உண்மை தாவீது மனதில் அழுத்தமாகப் பதிந்தது!

நீங்கள் மனித ஆலோசனையை நாடும்போது, அவர்கள் உங்கள் நிலைமையைப் புரிந்து கொள்ளுவது, உங்களைப்பற்றி நீங்கள் எவ் வளவு சொல்லுகிறீர்கள் என்பதைப் பொறுத்தது. அவர்கள் எவ்வளவு தான் கல்வித்தகுதி பெற்றவர்களாக இருந்தாலும், உங்களுக்கு உதவி செய்யும் அவர்களுடைய திறமை, உங்கள் வாழ்க்கை வரலாறு பற்றி யும் தற்போதைய உங்கள் ஆபத்து நிலையைப் பற்றியும் எவ்வளவு நீங்கள் அவர்களிடம் சொல்லுகிறீர்கள் என்ற வரம்புக்குட்பட்டது. ஆனால் தேவனுக்கு உங்களைப்பற்றி முழுமையாகத் தெரியும். நீங்கள் நினைக்கு முன்பே உங்களுடைய எண்ணம் என்ன என்று அவருக்குத் தெரியும். உங்கள், *''வழிகளெல்லாம் அவருக்குத் தெரியும்''* (3).

இரண்டாவது பத்தியில் (6-12), தாவீது தன்னுடைய ஜெபத்தை, ஜீவனுள்ள மெய்யான தேவனிடம் ஜெபிக்கிறான்: *''உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்?''.* தேவனுடைய சமுகத்திலிருந்து விலகியோட எவ்வளவு வேகமாய் நீங்கள் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கும்? எவ்வளவு தூரம் நீங்கள் போகவேண்டியிருக்கும்? தேவனிடமிருந்து தப்புவிக்க, அவரைத் தவிர்க்க அல்லது புறக்கணிக்க எவ்வளவு உயர மாய் அல்லது எவ்வளவு தாழ்வாய் நீங்கள் பயணம் செய்ய வேண்டும்? எங்கும் வியாபித்திருக்கிறவரும், அவரிடமிருந்துத் தப்பிச் செல்லமுடியாதவருமான தேவனிடம் தாவீது ஜெபிக்கிறான்.

மூன்றாவது பத்தி (13-16), தாவீது தன்னை உண்டாக்கிய தேவனிடம் ஜெபிப்பதைக் காட்டுகிறது. தாவீது தேவனை நோக்கி, *''நீர் என் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர்.... என் அவயவங்கள் ஒன்றும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது''* (13-16) என்று சொல்கிறான். நாம் உருவாகுமுன்பே நம்முடைய நாட்கள் எல்லாவற்றிற்கும் ஒரு திட்டத்தை ஒரு புத்தகத்தில் எழுதி வைத்திருக்கிறார். உங்கள் காலண்டரில் ஒரு வருடத்திற்கு திட்டம் உருவாக்கும்போது இதைப் பற்றி சிந்தித்துப்பாருங்கள் இந்த பூமியில் நமது பிறப்பு எதிர்பாராத ஒரு நிகழ்ச்சியல்ல என்ற அர்த்தத்தையும் உடையதாயிருக்கிறது. நாம் உயிரோடிருப்பது தெய்வீகத் திட்டமே. ஒரு கருச்சிதைவு செய்வதைப் பற்றி நீங்கள் யோசிக்கும் போது இதைப் பற்றிச் சிந்தியுங்கள்.

நான்காவது பத்தி (17,18) தன்னைப்பற்றி நினைக்கும் ஒரு தேவனிடம் தாவீது தன்னுடைய ஜெபத்தை ஏறெடுக்கிறான் என்று காட்டுகிறது. தாவீதினிடமிருந்து நாம் தேவனுடைய நினைவுகள் விலைமதிப்பற்றவை என்றும் அவைகள் எண்ண முடியாதவை அல்லது எல்லையற்றவை (17) என்றும் கற்றுக்கொள்ளுகிறோம். நெருங்கிய உறவினரிடம் அல்லது உங்களுக்கு அன்பானவர்களிடம் அவர்களைப் பற்றி அடிக்கடி நினைக்கிறேன் என்று சொல்லுவது அவர்கள் மனதைத் தொடுவதாயிருக்கிறது. நம்மைப்பற்றி நாம் சிந்திப்பதைவிட அதிகமாக தேவன் நம்மைப் பற்றி சிந்திக்கிறார்.

கடைசியாக தாவீது, தன்னுடைய ஜெபத்தை அவனைப் பாதுகாக்கும் தேவனை நோக்கி ஜெபிக்கிறான் (19-22). இந்த சந்தர்ப்பத்தில் தான் அவனுடைய எதிரிகளை அழிக்கும்படி தேவனை கேட்கிறான். தேவன் அவனுடைய பகைவர்களை அழித்துப்போடுவார் என்ற மிகப்பெரிய நம்பிக்கையோடு இந்தப் பாதுகாப்புக் கான ஜெபத்தை அவன் ஜெபிக்கிறான்.

தேவனிடம் ஜெபிக்கும் இந்தத் தோற்றத்தை நிலைநாட்டிய பின், தாவீது தேவனிடம் வேதனை உண்டாக்கும் வழி அவனிடத்தில் இருக்கிறதா என்று அவனை *''ஆராய்ந்து,'' ''அறிந்து கொள்ளும்''* என்று கேட்பதே அவன் ஜெபித்த ஜெபத்தின் சாராம்சம் (23,24). அவரை விட்டுத் தப்பியோட முடியாதவரும், அவனைபற்றி தெரிந்தவரும், அவனை உருவாக்கியவரும், அவனைப்பற்றி சிந்திப்பவரும், அவனைப் பாதுகாப்பவருமான தேவனிடம் அவன் வேண்டுதல் செய்கின்றான்.

நம்முடைய எல்லா ஜெபங்களையும் இந்த தேவனிடத்தில் ஏறெடுக்கிறோம். உங்கள் இருதயத்தின் நோக்கங்களைப்பற்றி நிச்சயமில்லாதவராயிருந்து, உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தின்படி நடக்க விருப்பமுடையவராயிருந்தால், தாவீது ஜெபித்த மிகப் பெரிய ஆலோசகரின் சிங்காசனத்தண்டை வாருங்கள். உங்கள் இருதயத்தின் கதவைத் <u>திறந்து,</u> உங்கள் இருதயத்தில் இருக்கக் கூடாத நோக்கங்களைக்காட்டும்படி <u>அவரிடம்</u> கேளுங்கள். உங்கள் மனதின் மூடியைத் திறந்து அங்கே இருக்கக் கூடாத எண்ணங்களை உங்களுக்குக் காட்டும்படி <u>அவரிடம்</u> கேளுங்கள். ஏனென்றால் இப்போது நீங்கள் உங்கள் வாழ்க்கையில் அவரது பரிபூரண சித்தத்தின் நித்தியமான வழியில் நடக்க விரும்புகிறீர்கள்.



**அத்தியாயம் 10**

## ***சங்கீதம் 100***

''பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்.

மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்து,

ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள்.

கர்த்தரே தேவனென்று அறியுங்கள்;

நாமல்ல அவரே நம்மை உண்டாக்கினார்;

நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்.

அவர் வாசலில் துதியோடும்

அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து,

அவரைத் துதித்து அவர் நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.

கர்த்தர் நல்லவர்,

அவருடைய கிருபை என்றென்றைக்கும் அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது.

நூறாம் சங்கீதம், தெளிவான ஸ்தோத்திர சங்கீதம் ஆராதிப்பதைப் பற்றி நமக்குச் சொல்லுகிறது. ஆராதனை செய்வது தேவனுடைய தெய்வீகப் பிரசன்னத்துக்கு முன்னாக வருகிறது. தேவனுடைய தெய்வீகப் பிரசன்னம் என்று ஒரு காரியம் இருக்கிறது. அந்த தெய்வீகப் பிரசன்னத்துக்கு முன்பாக வருதலே ஆராதித்தலின் சாராம்சமாகும். தாவீதின் இந்தச் சங்கீதத்தில், ஆராதிப்பது என்றால் என்ன என்று வரையறை செய்வதோடு, ஒரு உருவக அணியின் மூலமாக, எப்படி ஆராதிக்க வேண்டும் என்றும் காண்போம்.

பழைய ஏற்பாட்டுக் காலங்களில், ஒரு மனிதனுக்கு ஒரு அரசனை சந்திக்க வேண்டியதிருந்தால், அவன் பின்பற்ற வேண்டிய சில முக்கிய விதிமுறைகள் இருந்தன. அவர்கள் முதலாவதாக ராஜாவின் அரண் மனையின் விரிவான வாசல் வழியாக உள்ளே செல்ல வேண்டும். அந்த ராஜா மிகப்பெரிய ராஜாவாயிருந்தால், பார்க்க வந்தவர் ராஜாவின் முன்னிலைக்கு வருவதற்கு முன்பாக, இருபுறமும் போர்ச்சேவகர்கள் வரிசையாய் நிற்கும் அநேக பிரகாரங்களைக் கடந்து, பின்பு பழுவான இரண்டு கதவுகள் வழியாகச் செல்ல வேண்டும்.

ஒரு ராஜாவாக தாவீது, இவைகளைப் பற்றி நன்கு தெரிந்தவனாயிருந்தான். ஸ்தோத்திரம் என்றால் என்னவென்றும் எப்படி ஸ்தோத்திரம் செய்வதென்றும் விளக்கிக்கூற ஒரு உருவக அணியாக இந்த அம்சங்களைத் தாவீது தெரிந்து கொண்டான். தாவீதின் கருத்துப் படி, தேவனுடைய பிரசன்னத்துக்கு முன்பாக ஸ்தோத்திரம் செய்வது வருகிறது.

தேவனுடைய பிரசன்னத்துக்கு முன்பாக வருவது, ''வாசல்களில் துதியோடு'' (4) ஆரம்பிக்க வேண்டும். ஆராதிக்கும் முன்பாக நாம் தேவனுடைய எல்லா ஆசீர்வாதங்களுக்கும் துதி செலுத்த வேண்டும். துதி செலுத்தவது ஆராதிக்க வழிவகுக்கிறது. தேவனுடைய பிரசன்னத் துக்கு நம்மை வழிநடத்தும் ''வாசல்'' ஒரு நன்றியுள்ள இருதயம்.

துதி செலுத்தும் வாசல்கள் தேவனைப் போற்றுவதற்கு வழிநடத் துகிறது என்று தாவீது கூறுகிறார். துதியுடன் கூட ஆராதனை செய்யத் துவங்கும் போது, சீக்கிரமாக நாம் தேவனைப் போற்றிப் புகழ அறிந்து கொள்ளுகிறோம். நம்முடைய அநேக ஆசீர்வாதங்களுக்காகத் துதி செலுத்துவதிலிருந்து, தேவனைப் போற்றி அவர் யார் என்பதற்காக அவரைப் புகழுகிறோம். ''அவர் வாசல்களில் துதியோடும்'' கடந்து செல்லும் போது, நாம் அதிகமாகப் பெற்றுக் கொண்ட தேவனுடைய கையின்மீது நம் கவனம் திரும்புகிறது. எனினும் நாம் போற்றுதலின் பிரகாரங்களுக்குள் நுழையும்போது நம்முடைய கவனம் தேவனுடைய முகத்துக்கு நேரே செல்கிறது.

நூற்றாண்டுகளாக, மிகப்பெரிய பழமையான ஆத்துமாக்கள், தேவனுடைய பிரசன்னத்துக்குள் நம்மை வழிநடத்துவது போற்றுதலின் கதவு என்று கூறியிருக்கின்றனர். தாவீதின் உருவக அணியில், தேவனு டைய தெய்வீகப் பிரசன்னத்துக்குள் வழிநடத்துவது பாடல். தாவீது, *''ஆனந்தசத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள்''* என்று எழுது கிறார் (2). தாவீது இசையையும் ஆராதனையையும் மணம் செய்து கொண்டார். தாவீது தானே செய்த கீதவாத்தியங்களால் கர்த்தரைத் துதிப்பதற்கு மட்டுமே நாலாயிரம் லேவியர்களை அமர்த்தியிருந்தார் (1 நாளாகமம் 23:5).



இந்த வாழ்க்கையில் வெளிப்படுத்த முடியாத காரியத்தை சில சமயங்களில் வெளிப்படுத்த வேண்டிய அவசியம் வரலாம். அவரு டைய தெய்வீகப் பிரசன்னத்தில் நம்மால் வெளிப்படுத்த முடியாததை வெளிப்படுத்த தேவன் இசையின் அற்புதத்தை நமக்குக் கொடுத்திருக் கிறார். தாவீதின் கருத்துப்படி தேவனுடைய பிரசன்னத்துக்குள் செல்ல இசை அதன் கதவைத் திறக்கிறது.

தேவனுடைய பிரசன்னத்துக்குள் நாம் வரும்பொழுது, புத்திக்கூர் மையினால் மட்டுமே நாம் தெரிந்துகொண்ட காரியங்களை, அனுபவத் தினால் தெரிந்து கொள்ள முடியும். முதலாவதாக, அவர் தேவன் என்பது நமக்கு நிச்சயமாகத் தெரியும். நாம் அவர் மேய்ச்சலின் ஆடு களாக மட்டுமே இருக்கிறோம் என்றும் ஒத்துக்கொள்கிறோம் (3). அப் போஸ்தலர் பவுல், *''பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்த ரென்று ஒருவனும் சொல்லக்கூடாதென்றும்''* எழுதியதன் அர்த்தம் இது வாக இருக்கலாம் (1 கொரிந்தியர் 12-3).

இதன் பின் அனுபவப்பூர்வமாக, ''கர்த்தர் நல்லவர்'' என்பது நமக்குத் தெரியும். நாம் அடிக்கடி ''அவர் நல்லவர்'' என்று அறிக்கை யிடுவதற்குப் பதிலாக, நம்முடைய நடவடிக்கைகளால் அவர், ''பயங்கர மானவர்'' என்று சொல்கிறோம். இந்த சங்கீதம், தேவனுடைய சந்நிதியில் கர்த்தரே தேவனென்பது மட்டுமல்ல, ''தேவன் நல்லவர்'' (5) என்றும் நமக்குத் தெரியும் என்று சொல்லுகிறது.

எல்லாத் தலைமுறையிலும் பூமியின் எல்லா தேசங்களிலுமுள்ள மக்கள் அவர் முன்னிலையில் வந்து, இப்போது நமக்குத் தெரிந்த எல்லாம் அவர்களுக்கும் தெரிய வேண்டுமென்று அவர் விரும்பு கிறார். இந்தச் சங்கீதத்தின் முதல் வசனம், ''பூமியின் குடிகளே,'' அல்லது ''பூமியனைத்தும்'' என்ற வார்த்தைகளோடு துவங்குகிறது. கடைசி வசனம் ''தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது'' என்ற மூன்று வார்த் தைகளோடு முடிவடைகிறது. தேவனுடைய பிரசன்னத்தில் அவரை ஆராதிக்கிற மக்களுக்கு மக்கள் தம்மைத் தெரிந்து கொள்ள அவர் ஆவலுள்ளவராய் இருக்கிறார் என்பது தெரியும். வேதாகம மற்றும் சபை வரலாறு, தேவனிடம் வந்து தேவனுக்காக கனிதரும் வாழ்க்கை யினுள் வழிநடத்தப்பட்ட அர்த்தமுள்ள அனுபவத்தைப் பெற்ற மக்களின் கதைகளால் நிரம்பியிருக்கிறது.

ஆராதனையின் இந்த அனுபவத்தின் மாதிரி இந்த சங்கீதத்தின் இரண்டாவது வாக்கியத்தில், *''மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்து''* என்ற வாக்கியத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

உண்மையோடு அவரை நாம் ஆராதிக்கும் போது, மகிழ்ச்சியோடு அவருக்கு ஊழியஞ்செய்கிறோம். அப்படி செய்வது நம்முடைய கடமை என்பதால் அல்ல. இந்த ஆராதனை சங்கீதத்தில், ஆராதனை என்றால் என்ன என்றும், எப்படி ஆராதிக்க வேண்டுமென்றும், ஆராதனை செய்யும் போது நமக்கு என்ன நடக்கிறது என்றும், நேர்மையான ஆராதனையின் விளைவுகள் என்ன என்றும் கற்றுக்கொண்டோம்.

அத்தியாயம் 11

## தோல்விகளுக்கு ஒரு குறிப்புச்சீட்டு

## *சங்கீதம் 34*

சங்கீதம் 34, ஆராதனைக்கும் பிரசங்கிப்பதற்குமுள்ள ஒரு சங்கீதமாக இருந்தாலுங்கூட உணர்ச்சியூட்டும் அல்லது ஜெபம் செய்யும் சங்கீதங்களில் ஒன்றாயிருக்கிறது. சங்கீதம் 34-இன் ஆரம் பத்தில் எழுதப்பட்டவை இந்த சங்கீதத்தின் பின்னணியைக்காட்டுகிறது. இந்தச் சங்கீதம், தாவீது சவுலினிடமிருந்து தப்பித்து ஒடி ஒளிந்து வாழ்ந்து திரிந்த இருண்ட அத்தியாயத்தைக் குறிப்பிடுகிறது. தாவீதின் வாழ்க்கையின் அந்த இருண்ட காலம் 1 சாமுவேல் 21, 22-ஆம் அதிகாரங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது. தாவீது சவுலினிடமிருந்து தப்பியோடி, பகைவானபோது, தன் சொந்தப் பாதுகாப்புக்காகவும், உயிர்பிழைத்திருக்கும்படியும், ஒரு பெலிஸ்திய ராஜாவோடு கூட்டுச்சேர கருத்துக் கொண்டிருந்தான். அது தோல்வியடைந்ததும், அவன் பயந்து ஓடி குகைளிலும் வனாந்திரத்திலும் வாழ்ந்தான். இதன் பின் வனாந்திரத்தில் ஒடுக்கப்பட்டவர்களும், கடன்பட்டவர்களும், முறுமுறுக்கிறவர்களும் தாவீதோடு சேர்ந்தார்கள் என்று வாசிக்கிறோம் (1 சாமுவேல் 22:2). பழங்கால வழக்கப்படி கடன்பட் டிருப்பது கடனாளியின் சிறையில் எந்த நேரமும் போடப்படும் அபாயத்தில் இருப்பதாகும். இவர்கள் பிற்காலத்தில், ‘‘தாவீதின் வலிமை மிக்க மனிதர்’’ என்றழைக்கப்பட்டனர்.

சங்கீதம் 34, வலிமைமிக்க மனிதர்களாக மாறிய அந்த பயந்து ஓடி ஒளிந்தவர்களுக்கும் தோல்வியடைந்தவர்களுக்கும் தாவீது செய்த பிர சங்கத்தின் சுருக்கமாகும். ஏனெனில் தாவீது அவர்களுக்கு பிரசங்கித் ததின் சாராம்சத்தை அவர்கள் விளங்கிக் கொண்டு நம்பினார்கள்.



### நம்பிக்கையுள்ள மனிதன் *(4-7)*

நம்பிக்கையுள்ள மனிதன் தன் வாழ்க்கையில் நன்மையான ஒரு காரியம் நடைபெறும், அதைத்தான் கண்டுபிடிக்க முடியும் என்று விசுவாசிக்கிறான். ஒவ்வொரு மனித இருதயத்திலும் தேவன் நம்பிக் கையை நடுகிறார். தேவன் நம்முடைய இருதயங்களில் நம்பிக்கையை நடுகிறார். ஏனென்றால் நம்பிக்கை விசுவாசத்துக்கு நம்மை வழி நடத் தும். இதனாலேயே வேதாகமத்தின் விசுவாச அதிகாரம் நாம் நம்பக் கூடிய காரியங்களுக்கு விசுவாசம் உறுதியளிக்கிறது என்று கூறித் துவங் குகிறது. தேவனிடத்தில் நம்மை வழிநடத்துவது விசுவாசம்.

அமெரிக்காவில் ஒவ்வொரு ஆண்டிலும் 25,000 முதல் 30,000 வரை தற்கொலைகள் நடைபெறுகின்றன. இந்தத் தற்கொலைகளுக்குக் காரணம் என்ன என்று விளக்கம் கேட்டதற்கு மனநோய் மருத்துவர் களும், மனோதத்துவ நிபுணர்களும் அவர்கள் தங்கள் வாழ்க்கையில் நம்பிக்கையிழந்ததே ஒரு காரணம் என்றனர். மக்கள் தங்களுக்கு நன்மை எதுவும் இனிமேல் நடக்காது என்று விசுவாசிக்கும் போது, அவர்கள் தற்கொலை செய்து கொள்ளுகிறார்கள்.

இருபத்தையாயிரம் முதல் முப்பதாயிரம் வரையிலான மக்கள் அமெரிக்காவில் ஒவ்வொரு வருடமும் நம்பிக்கையிழப்பது என்பது துக்கப்பட வேண்டிய ஒரு காரியமாயிருந்தாலும், 250 மில்லியன் மக்கள் நம்பிக்கையோடிருக்கிறார்கள் என்பது அற்புதமாயிருக்கிற தல்லவா? நமக்கு நம்பிக்கை இருக்கிறது. ஏனென்றால், நம்முடைய இருதயங்களுக்குள் நம்பிக்கையோடு நாம் பிறந்தோம். தேவன் நம் முடைய இருதயங்களில் நடும் நம்பிக்கை நம்மை விசுவாசத்துக்கு வழி நடத்த வேண்டுமென்பதையே விரும்புகிறார். நம்முடைய விசுவாசம் தேவனோடுள்ள உறவுக்கு நம்மை வழிநடத்த வேண்டுமென்பதே அவருடைய திட்டமாகும்.

அப்போஸ்தலர் பவுலின் கூற்றுப்படி, வாழ்க்கையில் நிலைத் திருக்கும் மூன்று முக்கிய குணநலன்கள், நம்பிக்கை, விசுவாசம், அன்பு, ஆகியவை (1 கொரிந்தியர் 13:13).

### நம்பிக்கையற்ற மனிதன் *(16,21)*

நம்பிக்கையற்ற மனிதன் என்று ஒருவன் இருப்பதையும் காண் கிறோம். தேவனுக்கு எதிராக நடக்க முயற்சி செய்யும் ஒரு மனிதன் நம்பிக்கையற்றவன். தேவன் உங்களுடைய பக்கத்திலிருந்தால், உங் களுக்கு எதிராயிருப்பவன் யார்? தேவன் உங்களுக்கு விரோ தமாயிருந்தால் உங்கள் பக்கமாய் இருப்பவன் யார்? அப்போஸ்தலர் பவுல், *‘‘தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயி*

*ருப்பவன் யார்?''* என்று எழுதியபொழுது, கமாலியேலைப் போன்ற வயதான ரபிக்களோடு ஒத்துப்போகிறார். இதற்கு எதிரானதும் உண்மையானது, *''தேவன் நமக்கு விரோதமாயிருந்தால் நமக்கு பட்சத்தில் இருப்பவன் யார்?''* (ரோமர் 8:31; அப்போஸ்தலர் 5:34-40). தேவனுக்கு எதிராக நடப்பவன் அவனுடைய வாழ்க்கையை நம்பிக்கையற்றதாக்கும் திசையில் நடக்கிறான். தாவீது, *''கர்த்தருடைய முகம் அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது.... தீமை துன்மார்க்கனைக் கொல்லும்''* (16,21) என்று எழுதும்போது இந்தச் சத்தியத்தைத் தெரிவிக்கிறார்.

### மகிழ்ச்சியாயிருக்கும் மனிதன் *(15, 17 - 20, 22)*

அனுபவமும், வாழ்க்கையை கவனித்துப்பார்ப்பதும் தெய்வபக்தியுள்ள மனிதனுக்கு நன்மையைக் கொண்டுவரும். தெய்வபக்தியற்றவருக்கு எதிர்மறையான விளைவுகளைக் கொண்டுவரும். நித்திய நிலையில், தாவீதின் கவனிப்பு எப்பொழுதும் சரியாக இருக்கிறது (சங்கீதம் 73).

நடந்தவை (3-8)

ஓடி ஒளிபவராகவும் தோல்விகளைச் சந்தித்தவருமாயிருந்த தாவீது எப்படி நம்பிக்கையற்ற நிலையிலிருந்து நம்பிக்கையுள்ள நிலைக்கு முன்னேறினான் என்றும், அதிலிருந்து மகிழ்ச்சியான ஆசீர்வதிக்கப்பட்ட மனிதனாக மாறினான் என்றும் சொல்லுகிறான். தாவீதின் தனிப்பட்ட வாக்குமூலங்களைக் கவனியுங்கள்: *''நான் கர்த்தரைத் தேடினேன், அவர் எனக்குச் செவிகொடுத்து, என்னுடைய எல்லாப் பயத்துக்கும் என்னை நீங்கலாக்கிவிட்டார்... இந்த ஏழை கூப்பிட்டான். கர்த்தர் கேட்டு, அவனை அவன் இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கி இரட்சித்தார்.''* அவன் மனந்திரும்பிய அனுபவத்தின் தனிப்பட்ட சாட்சி இது.

### தோல்விகளுக்கான தாவீதின் குறிப்புச்சீட்டு

*''கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப் பாருங்கள்'',* இதன்பின் தேவனை நம்பியிருக்கிற மனிதன் பாக்கியவான் என்று கண்டு கொள்ளுங்கள் (8). தனிப்பட்ட ''மனந்திரும்புதல்'' அனுபவத்தின் மூலம், இந்த வாழ்க்கையில் நீங்கள் அனுபவிக்க வேண்டும் என்று நம்பிய நன்மை கர்த்தரே என்று கண்டுகொள்ளுங்கள்.

### தாவீதின் ஒப்பந்தம்

*''என்னோடே கூடக் கர்த்தரை மகிமைப்படுத்துங்கள்; நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக''* (3). இந்த ஒப்பந்தம் ஆவிக்குரிய சமூகத்தினரின் ஒரு அழகிய விவரணம். இப்படிப்பட்ட தாவீதின் பிரசங்கமே அவர்களை வலிமைமிக்க மனிதர்களாக்கியது. தாவீது அவர்களைச் சந்தித்தபோது, அந்த மனிதர்கள் ஓடி ஒழிபவர்களாகவும் தோல்வியுற்றவர்களாகவும் இருந்தனர். கடன்பட்டவர்களாகவும் ஒடுக்கப்பட்டவர்களாகவும், திருப்தியற்றவர்களாகவும் இருந்தார்கள். பின்னர் வலிமை மிக்க மனிதர்களாக மாறினர்.



தாவீதின் வலிமைமிக்க மனிதர்களில், மோசே, நியாயாதிபதிகள் எல்லாரும், தாவீது ஆகியோரின் வாழ்க்கையில் எடுத்துக்காட்டப்பட்ட சத்தியத்தை மறுபடியும் நீங்கள் காண்கிறீர்கள். அந்த உண்மை, சாதாராண மக்களைக்கொண்டு அசாதாரண காரியங்களைச்செய்வதில் தேவன் களிகூறுகிறார் என்பதே. சங்கீதம் 34 போன்ற ஒரு சங்கீதமும் தாவீதின் ''வல்லமையுள்ள மனிதர்களும்'' நான்கு ஆவிக்குரிய இரகசியங்களைக் காட்டியுள்ளனர். அந்த இரகசியங்கள்:

நானல்ல, தேவனே, அவர் என்னோடிருக்கிறார்.

என்னால் முடியாது, எனினும் தேவனால் முடியும், அவர் என்னோடிருக்கிறார்.

எனக்கு விருப்பமல்ல, எனினும் தேவனுக்கு விருப்பமாயிருக்கிறது, அவர் என்னோடிருக்கிறார்.

நான் அல்ல, தேவனே அதைச் செய்தார். ஏனெனில் அவர் என்னோடிருந்தார்.

### சங்கீதம் நாற்பது ஆறு

*''தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர். ஆகையால் பூமி நிலை மாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும், அதின் ஜனங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம். ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும், உன்னதமானவர் வாசம்பண்ணும் பரிசுத்த ஸ்தலத்தையும் சந்தோஷிப்பிக்கும். தேவன் அதின் நடுவில் இருக்கிறார். அது அசையாது; அதிகாலையிலே தேவன் அதற்குச் சகாயம் பண்ணுவார். நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள்; ஜாதிகளுக்குள்ளே உயர்ந்திருப்பேன், பூமியிலே உயர்ந்திருப்பேன். சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார். யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர்'' (சங்கீதம் 46:1 - 5,10,11).*

இந்தச் சங்கீதத்தை எழுதிய பழங்காலத்துச் சங்கீதக்காரர்களான கோராகின் புத்திரர்களுக்கு மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போவது என்ற கருத்து அதிர்ச்சியூட்டும் ஒரு உருவக அணியாகவும் நினைக்கக்கூடாததாகவும் இருந்தது. இந்த லேவிய சகோதரர்களின் தியான செய்தியின் முக்கியபகுதி, நம்முடைய உண்மையான உலகம் துண்டுகளாக விழுந்து சிதறிப்போனாலும், தேவன் இருக்கிறார். தேவனுடைய சித்தம் என்ன என்று தெரிந்துகொள்ள போதிய நேரம் எடுத்துக்கொண்டு அமைதியாய் இருக்க வேண்டும் என்பதாயிருக் கிறது (10). உலகம் முழுவதிலுமுள்ள மக்கள் அமெரிக்காவின் உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரங்கள் உள்நோக்கி வெடித்ததைப் பார்த்தார்கள். நினைத்துப் பார்க்க முடியாத உருவக அணியின் ஒரு நவீன எடுத்துக்காட்டு இது. அது நம்முடைய மலை நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போவது போலானது.

இந்த உலகத்தில் இம்மைக்குரிய நித்திய மதிப்புகளும் இருக் கின்றன என்ற உண்மையின் மேல் நாம் கவனம் செலுத்த வேண்டும். வயதுமுதிர்ந்த அப்போஸ்தலர் யோவான் தன்னுடைய மக்களை இவ் விதமாக விவரிக்கிறார்: *''தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்''* (1 யோவான் 2:17).

இந்தச் சங்கீதக்காரர்கள் நம்முடைய உலகம் நிச்சயமாகவே துண்டு துண்டாக வீழ்ந்தாலும், தேவன் இருக்கிறார். தேவனோடு சம்பந்தப் பட்ட எதுவும் நித்தியத்திற்குமானது என்ற உண்மையை அமர்ந்திருந்து யோசிப்பது நல்லது.

புதிய ஏற்பாட்டில், தேவன் இருக்கிறார் என்று நாம் விசுவாசிக்கும் வரையில் தேவனைப் பிரியப்படுத்த முடியாது என்று சொல்லப் பட்டிருக்கிறது (எபிரெயர் 11:6). இந்த சங்கீதத்தின்படி, தேவன் இருக்கிறார் என்ற பெரிய உண்மையை உறுதி செய்த பின்னரும் நம் முடைய உலகம் துண்டுத் துண்டாக வீழ்ந்தாலும், தேவனுடைய சித்தம் என்ன என்று தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். தேவன் ஜாதி களுக்குள்ளே உயர்ந்திருக்கவும், பூமியில் உயர்ந்திருக்கவும் விரும் புகிறார். ஒரு பேராபத்துக் காலத்தில், நாம் அமர்ந்திருந்து, இந்த உலகத் தைப்பற்றியும் நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கைகளைப் பற்றியும் தேவனுடைய சித்தத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதை 46 - ஆம் சங்கீதம் கூறுகிறது.

நம்முடைய உலகம் தன்னைத்தானே அழித்துக் கொள்ளும்போது, நமக்கு ஆறுதலையும் ஆவிக்குரிய தோற்றத்தையும் கொடுக்கக்கூடிய அநேக வார்த்தைகள் இந்தச் சங்கீதத்தில் இருக்கின்றன. நம்முடைய தேவன், ''நெருக்கங்களில் நமக்கு அபரிமிதமாக உதவி செய்யக்



காத்திருக்கிறார்''. நாம் அமர்ந்திருந்து தேவன் இருக்கிறார் என்றும், தேவனுடைய சித்தம் என்னதென்றும் தெரிந்துகொள்ள வேண்டும் என்று அவர்கள் நமக்குக் கூறியதின் உண்மையான பொருள் : ''இளைப் பாறு, கடினமாக உழைப்பதை விட்டுவிடு (let go) போகவிடு என்பதே. அனுபவத்தினாலும் உறவுமுறையினாலும், தெரிந்து கொள்ள, வேத வசனங்கள் சொல்லுவது போல நான் இருக்கிறவராகவே இருக்கிறேன். மேலும் ஆபத்துக் காலத்தில் நான் உன்னோடிருக்கிறேன் என்றும் உங்கள் குழப்பமான சூழ்நிலைகளை எவ்வாறு சந்திக்க வேண்டும் என்பதைப் பற்றியும் எனக்கு ஒரு சித்தமிருக்கிறது'' என்பதே.

தேவனுடைய மக்கள் தம் உடமைகளை இழந்து, பூமியதிர்ச்சி, ஒரு வெள்ளப்பெருக்கு, தீ விபத்துப் போன்ற இயற்கையின் பேராபத்து களால் அல்லது போர் இவற்றால் துன்பப்பட்டாலும், அதனால் எந்த நன்மையுமில்லாவிட்டாலும், சில வேளைகளில் தேவன் அவற்றை அனுமதிக்கிறார். ஏனெனில் பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பதற்கும், பூமியில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பதற்கு முள்ள வித்தியாசத்தை இவற்றின் மூலம் நம்முடைய மக்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார். இயேசு, பரலோகத்தில் பொக் கிஷங்களைச் சேர்த்து வைக்கும் போது அவற்றைத் திருடர்கள் நம்மிட மிருந்துத்திருட முடியாது என்றும் போதித்தார் (மத்தேயு 6:19-21).

இது ஒரு தீர்கதரிசன சங்கீதம் என்றும் கருதப்படுகிறது. ஏனெனில் இது உருவகஅணியாகத் தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் ''கர்த் தருடைய நாள்'' என்றழைக்கப்படும் நாளைக் கொடுக்கிறது. தீர்க்க தரிசிகள் ஒரு நிகழ்ச்சியை முன்னறிவிக்கும்போது, சில வேளைகளில் ஏற்கனவே நடந்துவிட்டதாக அறிமுகப்படுத்துகின்றனர். இது, செய்து முடிக்கப்பட்ட ''தீர்க்கதரிசனம்'' என்றழைக்கப்படுகிறது. இந்த சங்கீதத் தை எழுதியவர்கள் கர்த்தருடைய நாள் ஏற்கெனவே முடித்துவிட்டது போலக் குறிப்பிடுகின்றனர். ஒரு ஆளுநர் அல்லது நாட்டின் முக்கிய மந்திரி இயற்கையின் பேராபத்தால் ஏற்பட்ட நஷ்டங்களை அனு மானிக்க அதன் மேலாக விமானத்தில் பறந்து செல்வதைப் போல, அவர்கள் பேரழிவைப் பார்வையிட ஒரு சுற்றுப்பயணத்துக்கு நம்மைக் கூட்டிச் செல்லுகின்றனர். இந்த சந்தர்ப்பத்தில், துவக்க வசனமும் கடைசி வசனமும் திரும்பவும் சொல்லப்பட்டிருப்பதோடு, அமர்ந்திருந்து தேவன் இருக்கிறார் என்றும் அவருடைய சித்தம் என்ன என்றும் தெரிந்துகொள்ள நமக்குச் சவாலிடப்பட்டிருக்கிறது (1,10,11). வேத வசனங்கள் முழுவதும் கர்த்தருடைய நாளைப் பற்றிச் சொல்லி அதை செயல்முறைப்படுத்துவதைப் பற்றி அழுத்தமாகக் கூறுகிறது. *''இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள்*

*எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும் ! ''* (2 பேதுரு 3:10,11).

அமெரிக்காவில் உலக வர்த்தக மையத்தின் இரண்டு கோபுரங் களும் உள்ளாக வெடித்தபோது, ஆயிரக்கணக்கான உயிர்களை நாம் இழந்துபோனதோடு கூட, உலகத்தின் லட்சக்கணக்கான மக்களின் உலகப்பிரகாரமான செல்வத்தைக் குறிப்பிடும் ஒரு முக்கிய அடையா ளம் இடிந்து அழிந்து போனது. தேவனுக்குத் தீவிரவாதத்தோடு எதுவு மில்லை. தீய மனிதர்களின் கைகளில் நாம் துன்பப்படும் துக்ககரமான சம்பவங்களில் எந்த நன்மையுமில்லை. எனினும், தம்முடைய மக்களை அதிர்ச்சியோடு விழித்தெழச்செய்து ஆவிக்குரிய நித்திய மதிப்பு அமைப்புக்குள் கொண்டுவரும்படி சில வேளைகளில் பேரழி வுகளைப் பயன்படுத்துகிறார். கோராகின் புத்திரர்களால் எழுதப்பட்ட இந்த சிறப்பான சங்கீதத்தில் கொடுக்கப் பட்டச் செய்தியின் சாராம்சம் இதுதான்.

**அத்தியாயம் 12**

## நீதிமொழிகள் புத்தகம்

ஒரு வியாபாரத்தைப்பற்றி பேச்சு வார்த்தை நடத்தும்போது இரண்டு காரியங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் - பணம் மற்றும் அனுபவம். தெய்வபக்தியுள்ள மக்கள் இந்த உலகத்தில் வியாபாரம் செய்யும் போது, உலகப்பிரகாரமான மக்கள் பெரும்பாலும் பணத்தை அடைகின்றனர். தேவனுடைய மக்கள் அனுபவத்தைப் பெற்றுக்கொள் ளுகின்றனர். தேவன், நாம் வாழ்க்கையில் எல்லாக்காரியங்களையும் அனுபவத்தின் மூலமாக கடினப்பட்டுக் கற்றுக்கொள்ளாமல் படித்தே கற்றுக்கொள்ளும்படி நமக்கு நீதிமொழிகள் புத்தகத்தை கொடுத்தார்.

வேதாகமத்தில் மிகச்சிறந்த அனுபவத்தைக் கொடுக்கும் புத்தகம் நீதிமொழிகள் புத்தகம். சாலொமோன் மூவாயிரம் நீதிமொழிகளை எழுதினார் (1 இராஜாக்கள் 4:29-34). வேதாகமத்தில் ஏவப்பட்டு எழுதப்பட்ட இந்தப் புத்தகத்தில் அவர் ஏறக்குறைய ஆயிரம் நீதிமொழிகளைப் பகிர்ந்து கொள்ளுகிறார். இவ்வுலகில் வாழ்ந்த எல்லா மனிதர்களையும் விட மிகச்சிறந்த ஞானவானாக அவர் கருதப்பட்டார். நீதிமொழிகள் புத்தகத்தில் அவரும் அவருடைய காலத்தில் இருந்த சிறந்த ஞானமுடைய மக்களும், நம்முடைய வாழ்க்கையின் எல்லா அனுபவ எல்லைகளிலும் எப்படி வாழ்வது என்று நமக்குக் காட்டுகின்றனர்.



இன்னும் சாலொமோன் ஆயிரம் பாட்டுகளுக்கு மேலாக எழுதியிருக்கிறார். நீதிமொழிகள் புத்தகத்தில், ஆயிரத்துக்கும் குறை வான நீதிமொழிகள் அடங்கியுள்ளன. பாடல்களில் உன்னதப்பாட்டு என்ற ஒரு பாட்டு மட்டுமே வேதாகமத்தில் இருப்பதைக் காண் கிறோம். நீதிமொழிகள் புத்தகத்தில் காணப்படும் எல்லா நீதிமொழி களையும் சாலொமோன் எழுதவில்லை. இந்தப்புத்தகத்தில் மற்ற ஞான முள்ள மனிதர்களால் எழுதப்பட்ட ஞானப் பழமொழிகளை அவர் தொகுத்துள்ளார். மற்ற ஞானவான்களும் சாலாமோனின் நீதிமொழி களைத் தொகுத்து வேதாகமத்தில் கொடுத்துள்ளனர்.

இந்தப்புத்தகத்தின் நோக்கத்தை முதல் ஒன்பது அதிகாரங்களும் தெளிவாகத் தெரிவிக்கின்றன. அது ஞானத்தைப் போதிப்பது. சாலொமோனின் நீதிமொழிகள் அதிகாரம் 10:1 முதல் அதிகாரம் 22:16 வரை காணப்படுகின்றன. ஞானவான்களின் நீதிமொழிகள் 22:17-24:34 வசனங்களிலும், எசேக்கியாவின் ஞானமுள்ள மக்கள் தொகுத்த சாலொமோனின் நீதிமொழிகள் 25-29 அதிகாரங்களிலும் காணப்படுகின்றன. அதிகாரம் 30, ஆகூரின் நீதிமொழிகளைக் கொண்டது. அதிகாரம் 31 தன் தாயாரிடமிருந்து லெமுவேல் ராஜா பெற்றுக்கொண்ட நீதிமொழிகளை அடக்கியது. அதிகாரங்கள் 1-10 வாலிபர்களுக்காகவும், 11-20 எல்லா மனிதர்களுக்காவும் 21-31 மனிதர்களை ஆட்சிசெய்பவர்களுக்காகவும் எழுதப்பட்டன.

சாலொமோன் மற்ற எல்லா மனிதரிலும் ஞானவான் என்ற போதிலும், அநேக வழிகளில், வாழ்ந்த எல்லா மனிதர்களையும் விடப் பெருந்தோல்வியடைந்தவனாகவும் இருந்தான். வரலாற்றுப் புத்தகங் களை நான் கவனித்துப் பார்த்தபொழுது, பிளவுபட்ட ராஜ்யமும் சிறை யிருப்பும் சாலொமோனின் பாவத்தின் ஒரு விளைவேயன்றி, அவனு டைய தகப்பன் தாவீதின் பாவத்தினாலல்ல. இப்படிப்பட்ட தோல்வி யடைந்த ஒரு மனிதன் தேவனுடைய மக்களுக்கு அவர்கள் எப்படி வாழவேண்டும் என்று போதிக்க முடியும்?

இந்தக் கேள்விக்கு அநேக பதில்கள் இருக்கின்றன. இந்த நீதிமொழிகளின் ஞானம் அவைகளை எழுதியவர் தன் சொந்த வாழ்க் கையில் கடைபிடித்தாரா, இல்லையா என்பதைச் சார்ந்திருக்கவில்லை; அவை தேவனால் ஏவப்பட்ட ஞானத்தைக் கொடுக்கிறது. மேலும், இந்த நீதிமொழிகள், சங்கீதம் 127, பிரசங்கியின் புத்தகம் ஆகியவை தான் செய்தவற்றை வாலிபர்கள் தங்கள் வாழ்க்கையில் கடைப் பிடிக்கக்கூடாது என்று அவர்களுக்குப் போதிக்க சாலொமோனால் எழுதப்பட்டவை. தன்னுடைய தவறுகளிலிருந்து அவர் அநேக காரி யங்களைக் கற்றுக்கொண்டார். கடினமான வழிகளில் கற்றுக் கொண்ட ஞானத்தை மற்றவர்களுக்கு, குறிப்பாக வாலிபர்களுக்கு எடுத்துச்

சொல்ல அவர் விரும்பினார்.

இந்த நீதிமொழிகளில் சாலொமோனின் நோக்கத்தை, *''ஞானமார்க்கத்தை நான் உனக்குப் போதித்தேன்; செவ்வையான பாதைகளிலே உன்னை நடத்தினேன்... ஆகையால், அவர்கள் தங்கள் வழியின் பலனைப் புசிப்பார்கள்; தங்கள் யோசனைகளினால் திருப்தி யடைவார்கள்.... கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்''* (நீதிமொழிகள் 4:11; 1:31; 9:10) என்று கூறுகிறார்.

சில வழிகளில், சாலொமோனின் இந்தக் குறிக்கோள், அவருடைய சொந்த வாழ்க்கையின் அனுபவத்தின் சுருக்கமாயிருக்கிறது. தான் தோல்வியடைந்து விட்டார் என்பது அவருக்குத் தெரியும். எனினும் தோல்வியிலிருந்தும் அதன் விளைவுகளிலிருந்தும் ஞானத்தைக் கற்றுக்கொள்ள முடியும் என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினார். கற்றுக்கொள்ளுவதற்கு மிகச் சிறந்த வழிகளில் ஒன்று, நம்முடைய புத்தியீனமான தெரிந்தெடுத்தலால் ஏற்பட்ட விளை வுகளுக்கு நம்முடைய எதிர்வினை எப்படியிருந்தது என்பதிலிருந்து கற்றுக்கொள்ளுதல். நாம் தெரிந்துகொண்ட பாதைகளின் பயங்கரத்தை முழுவதுமாக நாம் அனுபவிக்கும் போது, விலை மதிப்புள்ள ஞானத்தைப் பெற்றுக்கொள்ள மிகப்பெரிய கிரயத்தை நாம் செலுத்தி, ''சரியான காரியத்தைச் செய்யும் வாழ்க்கையே மிகுந்த ஞானமுள்ள வாழ்க்கையாயிருக்கிறது'' என்று அனுபவத்தின் மூலம் நிரூபிக் கிறோம்.

ஒரு காரியம் நேர்மையான காரியம் என்று தேவன் நம்மிடம் சொல்லும்பொழுது, அவர் நம்மீது அன்பாயிருப்பதால் அப்படிச் சொல்லுகிறார். நாம் நேர்மையான காரியங்களையே செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஏனெனில் நேர்மையான காரியத்தைச் செய்வதின் விளைவுகள் நன்மையைக் கொடுக்கிறது என்று அவருக்குத் தெரியும். ஒரு காரியம் தவறு என்று தேவன் வெளிப்படுத்தும்போது இவை நமக்கு நன்மையளிக்காது என்பதினாலேயே அவர் அதை வெளிப்படுத்துகிறார்.

### வசீகரிக்கும் பெண்களைப்பற்றிய எச்சரிக்கை

நீதிமொழிகள் 5:15-19 வசனங்கள் வாலிபர்களுக்காகக் கொடுக் கப்பட்டுள்ளன. அவைகள் வசீகரிக்கும் பெண்களின் தூண்டுதல்க ளைப்பற்றி எச்சரிக்கிறது. நெறிதவறி நடப்பதற்கு எதிரான பாதுகாப்பு வலிமைமிக்க ஒரு எதிர்ப்பாகும் - ஒரு நல்ல திருமண உறவு என்பது



எல்லா நேரங்களிலும் வாலிபர்கள் தங்கள் மனைவியின் அன்பில் பரவசப்படுவதே. சாலொமோன் வாலிபர்களுக்கு, *''உன் இளவயதின் மனைவியோடே மகிழ்ந்திரு''* (18) என்று சொல்லுகிறார். இதனால் அவர்கள் உலகத்தினுள் செல்லும் போது, கவர்ச்சிப் பெண்களின் சாகசத்துக்கு இடங்கொடுக்க மாட்டார்கள். ஏனென்றால் அவர்களு டைய பாலுறவின் தேவைகள் திருமணத்தினால் சந்திக்கப்பட்டு விட்டன. நெறிதவறுவதற்குத் தன்னை ஒப்புக்கொடுக்கும் மனிதனுக்கு சாலொமோனின் எச்சரிப்பு, *''தன் பாவக்கயிறுகளால் கட்டப்படுவான். அவன் புத்தியைக் கேளாததினால் மடிந்து, தன் மதிகேட்டின் மிகுதியினால் மயங்கிப்போவான்''* (22,23) என்பதே.

### சுயக்கட்டுப்பாடு

சுயக்கட்டுப்பாட்டைப்பற்றி போதிக்க சாலொமோன், *''சோம்பே றியே, நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள். அதற்குப் பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும், கோடைக்காலத்தில் தனக்கு ஆகாரத் தைச் சம்பாதித்து, அறுப்புக்காலத்தில் தனக்கு தானியத்தை சேர்த்து வைக்கும்'' (6:6-8) என்றார்.* நாம் இளைஞராயிருக்கும் போது, நம்முடைய பெற்றோர் களும், ஆசிரியர்களும் நாம் செய்பவற்றைக் கவனித்து, நாம் என்ன செய்ய வேண்டும், நாம் எதற்கு கணக்கொப்பு விக்கவேண்டும் என்று காட்டுகிறார்கள். எனினும் நாம் முதிர்ச்சியடையும் போது, நம்மை நாமே மேற்பார்வையிட்டு சுயக்கட்டுப்பாடு டையவர்களாய் இருக்க வேண்டும். சாலொமோன் சொல்லியபடி, நாம் எறும்பினிடத்திலிருந்து, அவைகள் மேற்பார்வையில்லாமலே கோடை காலத்தில் ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக் காலத்துக்கும் தானி யத்தை வருட முழுவதுக்கும் சேர்த்துவைக்கும் சுயக்கட்டுப்பாட்டைக் கற்றுக்கொள்ள முடியும்.

### கொடுப்பதும் பெற்றுக் கொள்வதும்

இயேசு கிறிஸ்துவின் போதனைகளுக்கு இணையான போதனை ஒன்று நீதிபதிகள் புத்தகத்தில் இருக்கிறது (11:24,25). *''வாரி யிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு; அதிகமாய்ப் பிசினித்தனம் பண்ணியும் வறுமையடைவாரும் உண்டு. உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்''* என்று வாசிக்கிறோம். இந்த நீதிமொழி நீங்கள் தாராளமாய்க் கொடுப்பவராயிருந்தால் உங்கள் ஆத்துமா செழிக்கும் என்றும் நீங்கள் சுயநலவாதிகளாக இருக்கும்போது சரியான போஷாக்

கைப் பெறாது என்றும் போதிக்கிறது. நமக்குள்ள எல்லாவற்றையும் நாம் பற்றிப் பிடுத்துக் கொண்டிருப்போமானால், எல்லாவற்றையும் இழந்துவிடலாம். எனினும் நாம் தாராள மனப்பான்மையுடன் அவை களைக் கொடுத்துவிட்டால் நாம் செல்வந்தராக முடியும். தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை நித்தியத்துக்கும் கண்டடைவான் என்று இயேசு போதித்தபொழுது இதே தத்துவத்தை அளித்தார் (மத்தேயு 16:24-27; அப்போஸ்தலர் 20:35). இயேசு சொன்னபடி உங்கள் ஜீவனைக் கண்டடைய வேண்டுமானால், வேண்டுமென்றே அதை நீங்கள் இழந்து, வெளியே கொட்டி அல்லது உங்கள் வாழ்க்கையை தேவனுக்காகவும் மற்ற மக்களுக்காகவும் தியாகம் செய்யுங்கள்.

நீதிமொழிகள் புத்தகத்திலிருந்து ஞானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். சாலொமோன் இந்த நீதிமொழிகளைத் தொகுத்ததின் குறிக் கோள், ஞானமுள்ளவர் ஞானமுள்ளதலைவர்களாக மாறுவதற்கும், எளிய மனதுடையவர்கள் ஞானிகளாக மாறுவதற்கும், நேர்மையாக வாழ்வது எப்படி என்று மக்கள் பிரித்தறிவதற்காகவுமாகும் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள்.

ஒரு மாதத்தில் முப்பது அல்லது முப்பத்தொரு நாட்களிருப்பதால், வாலிபர்கள் இதை ஒரு நாள்காட்டியாகப் பயன்படுத்தி, நீதிமொழி களில் அந்தந்த நாளுக்கொத்த அதிகாரத்தை வாசிக்க வேண்டும். ஒரு தாளில் பண்ணிரெண்டு அல்லது அதிகமான செங்குத்தான கோடு களிட்டு ஒரு அட்டவணையை உண்டுபண்ண நான் உங்களுக்கு பரிந் துரைக்கிறேன். அட்டவணையின் குறுக்கே உள்ள கோடுகளின்மேல் கீழ்க்கண்டவை போன்ற பாடப்பொருட்களை எழுதுங்கள்: சுயக்கட்டுப் பாடு, பெண்கள், பிள்ளைகளைச் சீர்படுத்துதல் முதலியன. இந்தப் புத்தகத்தை வாசிக்கும்பொழுது, அந்தப் பாடப் பொருளுக்குக் கீழே நீதிமொழிக் குறிப்புகளை எழுதுங்கள். நீங்கள் எழுதிமுடித்த பின், இந்த ஞானப்புத்தகம் போதித்த முக்கிய கருத்துக்களைப் பற்றிய ஒரு பொருள் அட்டவணை உங்களிடமிருக்கும்.

இருதயம், ஆவி, ஆத்துமா என்ற சொற்கள் இந்த புத்தகத்தில் எழுபது முறை சொல்லப்பட்டிருக்கிறது. நாம் நேர்மையாக வாழ்வது எப்படி என்று அவர் போதிக்கும் பொழுது, தேவன் நம்முடைய இருதயத்தில், ஆவியில், ஆத்துமாவில் பேசுகிறார் என்பதை இது நமக்குக் காட்டுகிறது. இந்தப்புத்தகத்தை வாசிக்கும் அநேகருக்குப் பிரியமான ஒரு தெளிவான நீதிமொழி: *''உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்''* (நீதிமொழிகள் 3:5-6).



**அத்தியாயம் 13**

## பிரசங்கியின் புத்தகம்

தேவனுடைய மக்கள் வாழ்க்கையின் கலக்கமுறச் செய்யும் தடு மாற்றங்களுக்கு பதில்களைத் தேடும் பொழுது, பிரசங்கி அவர்களின் இருதயங்களினுள் பேசுகிறார். ''பிரசங்கி'' என்ற வார்த்தை ''பிரசங்கம் செய்பவர்'' என்ற அர்த்தமுடையது. இந்த பெயரையுடைய புத்தகம் உண்மையிலே சாலொமோன் தன்னுடைய வாழ்க்கையின் கடைசிப் பகுதியில் வாலிபர்களுக்காக பிரசங்கித்த பிரசங்கம் ஆகும். இந்தப் பிரசங்கத்தின் மூலம் அனுபவம் நமக்கு நன்கு போதிக்கும் ஒரு ஆசிரியராக இருந்தாலும், அது மட்டுமே நம்முடைய ஒரே ஆசிரியர் அல்ல என்று காட்டுகிறது. பிரசங்கி தன்னுடைய அனுபவத்திலிருந்து கற்றுக் கொள்ளும்படி இளைய தலைமுறையினருக்கு ஊக்கமளிக் கிறார். இந்தப்பிரசங்கத்தை, தேவனுடைய மக்கள் நாடும்போது, தேடும்போது, விசாரணை செய்யும் போது, கேள்வி கேட்கும் போது, சந்தேகப்படும் போது கூட அவர்களுடைய இருதயங்களில் பேசு வதற்குப் பயன்படுத்துகிறார்.

### பிரசங்கத்தின் சுருக்கமான ஒரு மேற்பார்வை

பிரசங்கி சாலொமோனின் இரண்டாவது பாடல் புத்தகம். சாலொ மோன் முதிர்வயதானவராயிருந்தபொழுது இஸ்ரவேலரின் வாலிபர் களுக்கு இந்தப் பிரசங்கத்தைப் பிரசங்கித்தார். சங்கீதம் 127-இல் நாம் கற்றுக்கொண்டபடி, சாலொமோன் முதிர்வயதின் கண்ணோட்டத்திலும் முதிர்ச்சியோடும், அநேக ஆண்டுகளாகக் கற்றுக்கொண்ட ஞானத் தோடும் தம்முடை.ய வாழ்க்கையை மறு பார்வையிட்ட பொழுது, அவர் கடுமையாக உழைத்தாரென்றும் மிகக் கவலையுடையவராகவும் தான் கட்டிய அநேக காரியங்கள் விருதாவென்றும் ஒப்புக்கொண்டார். இந்தப் பிரசங்கம் சங்கீதம் 127-இன் விரிவாக்கப்பட்டக் கருத்து. இந்தப் பிரசங்கத்தைக் கேட்ட வாலிபர்கள் அவருடைய துக்ககரமான அனுப வங்களிலிருந்து கற்றுக்கொள்ளுவார்கள் என்ற தீவிர நம்பிக்கையோடு இந்த பிரசங்கத்தைக் கொடுத்தார்.

### பொருளைக் கண்டுபிடித்தல்

பிரசங்கியின் புத்தகத்தில், சாலொமோன் இஸ்ரவேல் வாலிபர்

களிடம், மூன்று எல்லைகளில் வாழ்க்கையின் நோக்கம் என்ன, என்று கண்டுபிடிக்க முயற்சி செய்தாரென்றும், ஒவ்வொரு குறிக்கோளின் முடிவிலும் அது மாயையைத் தவிர வேறொன்று மில்லை என்றும் கண்டுகொண்டதாகச் சொன்னார். இது அவருக்குப் பிரியமான வார்த்தையை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. அவருடைய குறுகிய சங்கீதத்தில், *''கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுபவர்களின் பிரயாசம் விருதா... நீங்கள் அதிகாலையில் எழுந்து, நேரப்பட வேலையிலே தரித்து, வருத்தத்தின் அப்பத்தைச் சாப்பிடுகிறதும் விருதா''* என்று அவர் சொல்லியதைக் கேட்டோம். இந்த வார்த்தை அடிக்கடி விரிவாக்கப் பட்ட ''கடைசி புத்திமதியின் வார்த்தைகள்'' என்பதில் பயன்படுத்தப் பட்டிருக்கிறதை நாம் காண்போம்.

## செல்வம்

செல்வத்தைத் திரட்டுவதன் மூலமாக வாழ்க்கையின் அர்த்தத்தையும் நோக்கத்தையும் தேடியதாக சாலொமோன் பிரசங்கித்தார். உலகில் வாழ்ந்த எல்லா மனிதர்களையும் விட மிகப்பெரிய செல் வந்தராக அவர் மாறினார். எனினும், தன்னுடைய செல்வத்தை மரணம் என்னும் கம்பிவலை வழியாகப் பார்த்தபொழுது, அவர் *''சூரியனுக் குக்கிழே நான் பட்ட பிரயாசத்தையெல்லாம் வெறுத்தேன்; எனக்குப் பின் வரப்போகிறவனுக்கு அதை நான் வைத்துப்போக வேண்டியதாகுமே''* (2:18) என்று சொன்னார்.

சாலொமோன் சந்தைவெளியில் ஒரு மூடனை சந்தித்தார். தனது செல்வமனைத்தையும் சுதந்தரித்துக்கொள்பவன் அந்த மூடனைப் போன்ற ஒரு மனிதனாகவும் இருக்க முடி.யும் என்று தெரிந்து கொண்டார். அது மெய்யாகவே சாத்தியமாகலாம் என்ற மறுக்க முடியாத உண்மை, செல்வத்தை அடையும் வெற்றிகரமான குறிக்கோளின் குறுக்கே ''மாயை'' என்று சாலொமோனை எழுதச் செய்தது.

## ஞானம்

வாழ்க்கையின் நோக்கமும் அர்த்தமும் திரண்ட செல்வமல்ல என்று தெரிந்துகொண்ட பின் சாலொமோன் ஞானத்தைக் தொடர்ந்தார். உலகில் வாழ்ந்த எந்த மனிதரையும் விட அதிக ஞானவான் ஆனார். எனினும் இந்த முயற்சியிலும் அவர் எந்த நோக்கத்தையும் காணவில்லை. தம்முடைய செல்வங்களெல்லாம் மாயை என்று எழுதினார். ஏனெனில் அவற்றை கல்லறைக்கு அப்பால் அவரால் எடுத்துச் செல்ல முடியாது. சிறிது காலத்திலேயே அவர் ஞானத்தினால் வாழ்க்கையின் அர்த்தத்தையும் நோக்கத்தையும் தேடுவது மாயை என்று கண்டார். இதற்குக் காரணம், அவரால் ஞானத்தை மகிழ்ச்சியாக மாற்ற முடியாது என்று அவர் கண்டதே: *''அதிக ஞானத்திலே அதிக சலிப்புண்டு; அறிவு பெறுத்தவன் நோவு பெருத்தவன்''* (1:18).



''சிந்தனையாளர்'' என்று பெயரிடப்பட்ட சிலை மகிழ்ச்சியாயிருக்கும் ஒரு மனிதனின் உருவமல்ல. அறிவைத் தீவிரமாகத் தேடுதல் மகிழ்ச்சியை அதிகரிக்கச் செய்யவில்லை என்பதால், சாலொமோன் வாழ்க்கையின் நோக்கத்துக்கும் அர்த்தத்துக்கும் ஞானத்தைத் தேடுவதை மாயை என்று பெயரிட்டார்.

## சந்தோஷம்

வாழ்க்கையின் அர்த்தத்துக்காவும் நோக்கத்துக்காகவும் அடுத்து சாலொமோன் தேடியபோது அது அவரை அறிவீனம், உல்லாசம், வேடிக்கை ஆகியவைகளைப் பின் தொடர வழிநடத்தியது. உலகம் கொடுக்கிற எல்லா சந்தோஷங்களிலும் அவர் பங்குபெற்றார்: *''என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான் அவைகளுக்குத் தடை பண்ணவில்லை. என் இருதயத்தின் ஒரு சந்தோஷத்தையும் நான் வேண்டாமென்று விலக்கவில்லை''* (2:10). விருந்து உபச்சாரத்தில் யாரும் சாலொமோனை மிஞ்சவில்லை. எனினும், அவர் அடைந்த மகிழ்ச்சிக்குப்பின், சாலொமோன் மூன்று கேள்விகளுக்குப் பதில் தேடினார்: அது என்ன நன்மை செய்தது? அதன் பயன் என்ன? இதனால் நான் நிறைவேற்றுவது என்ன? சாலொமோன் தன் இருதயத்தின் ஆழத்திலே, தன்னுடைய வாழ்க்கைக்கு ஒரு நோக்கமிருக்கிறது என்றும் அந்த நோக்கம் இரவும் பகலும் விருந்து வைப்பதல்ல என்றும் கண்டுகொண்டார்.

## தீர்ப்பு

தம்முடைய பிரசங்கத்தின் முடிவில், சாலொமோன், தம்முடைய வாழ்நாளில் தான் ஒரு அடிப்படை சத்தியத்தைக் கற்றுக்கொண்டதாக வாலிபர்களுக்குச் சொல்லி தம்முடைய செய்தியில் ஒரு தீர்ப்பைக் கொண்டு வந்தார்: *''காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப்பயந்து, அவர் கற்பனைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும் அந்தரங் கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும், தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்''* 12:13-14). மூல எபிரெய மொழியில், தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளுதல் உங்களைப் பூரண மனிதனாக்கும் என்று குறிப்பாக உணர்த்தப்பட்டிருக்கிறது. தேவனுக்குப் பயப்படுதல் ஞானத்தின் ஆரம்பம் ஏனென்றால் ஒரு மனிதன் எப்படி இருக்க வேண்டுமென்று கருதுகிறானோ அப்படியே அவனை ஆக்குகிறது. சாலொமோன் தன் வாழ்நாள் முழுவதும் தேடிய நோக்கம் அதுவே.

சாலொமோன், வாழ்க்கை அநீதியினால் நிறைந்திருக்கிறது என்று இந்தப் பிரசங்கம் முழுவதிலும் கருத்துத் தெரிவித்தார். மனிதர்கள் தாங்கள் சம்பாதிக்காதச் சொத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுகின்றனர். ஒடுக்கப்பட்டவர்கள் ஆறுதல் பெறவில்லை. பணம் படைத்தவர்கள் பெரும்பாலும் திருப்தியற்றவர்களாக இருந்தனர். பயமில்லாமல் தீயவர்கள் இளைக்கும் அநீதிகள், பாகுபாடுகள் ஏமாற்றுதல் இன்னும் அநேகத் தீமைகளையும் கண்டபொழுது, ஒரு பரிபூரண நியாயத்தீர்ப்பு இருக்க வேண்டுமென்று சாலொமோன் கூறினார்.

### *பிரசங்கியில் ஏவப்பட்ட சத்தியங்கள்*

பிரசங்கியின் புத்தகத்தை வாசிக்கும் போது இரண்டு தட அமைப் பிலான சத்தியத்தை நீங்கள் கண்டுகொள்ளுவீர்கள். அவ்வப்போது, சாலொமோன் தேவனிடத்திலிருந்து எந்த வெளிப்படுத்தலுமில்லாத தேவ நம்பிக்கையற்ற, சந்தேகமுள்ள மனிதரின் பாத்திரத்தை ஏற்று, ஆவிக்குரிய மனிதனாக இல்லாமல் முற்றிலும் லௌகீக மனிதன் போல் தோன்றுகிறார். மற்ற நேரங்களில், ஒரு ஆவிக்குரிய மனிதராக தேவனி டத்திலிருந்து வெளிப்படுத்தலைப் பெற்றுக்கொண்ட மனிதரைப் போல சிந்தித்துப் பேசுகிறார். முதலில் சொல்லியது போன்ற மனநிலை இருந்த போது சாலொமோன் அநேக சந்தேகங்களை எழுப்பினாலும், அடுத்து வரும் மனிதரைப் போலிருந்த போது அவர் வெளிப்படுத்திய சத்தி யங்கள் ஆழ்ந்து சிந்திக்கப்பட வேண்டியதாயும் வாழ்க்கையின் நோக் கத்தைப்பற்றியும் அதன் அர்த்தத்தைப்பற்றியும் நாம் புரிந்து கொள்ள உதவியளிப்பதாகவும் உள்ளன.

மூன்றாவது அதிகாரத்தில் ஒரு வசனப்பகுதி: ''ஒவ்வொன்றிற்கும் *ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத் துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு. பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு, நட ஒரு காலமுண்டு, நட்டதைப் பிடுங்க ஒரு காலமுண்டு''* (1,2). இந்த வசனப்பகுதி சங்கீதம் ஒன்றில் ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன், *''தன் காலத்தில் தன் கனியைத்''* தரும் (3) மரத்தைப் போலிருப்பான் என்று சொல்லும் வசனப்பகுதியை ஒத்திருக்கிறது.

சாலொமோன் திருமண உறவைப்பற்றியும் ஒரு நல்ல ஆழ்ந்த சிந்தனையைக் கூறியுள்ளார். *''ஒண்டியிருப்பதிலும் இருவர் கூடியிருப் பது நலம்; அவர்களுடைய பிரயாசனத்தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும். ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிடுவான்... முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது''* (4:9-12).

தேவன் திருமண உறவை அமைத்த பொழுது, கணவனும் மனைவியும் ஒரே சிந்தையும், சீரமும் ஆவியுமுடையவர்களாயிருக்க



வேண்டுமென்று சித்தங்கொண்டார். ஆவி, சிந்தை ஆகியவைகளின் ஆழ்ந்த பரிமாணங்கள் சீரம் மற்றும் பாலுறவு மூலம் ஆனந்தத்தோடு வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதே அவருடைய திட்டமாகும். முப்புரிநூல் சீக்கிரமாக அறுந்துபோகாது என்று சாலொமோன் நமக்குக் கூறிய பொழுது இது அவருடைய மனதில் இருந்திருக்கக் கூடும். திருமண உறவை இந்தக் கோணத்தில் பார்க்கும் பொழுது, பாலியல் கணவன் மனைவிக்குள் ஒரு ஆழ்ந்த தொடர்பாகும். ஒரு திருமண உறவில் சீர உறவு, சிந்தை மற்றும் ஆவியின் ஆழ்ந்த மட்டத்தின் ஒரு வெளிப்பாடாக இல்லாவிட்டால் அந்தத் திருமண உறவிலுள்ள பாலியல் ஒரு மிருக மட்டத்திலுள்ள தொடர்பாயிருக்கும்.

ஒன்பதாம் அதிகாரத்தில், ஞானமுள்ள ஒரு மனிதனின் புத்திமதியின் மூலம் ஒரு பட்டணம் இரட்சிக்கப்பட்டதை சாலொமோன் விவரித்தார்: *''ஒரு சிறு பட்டணம் இருந்தது. அதிலே இருந்த குடிகள் கொஞ்ச மனிதர்; அதற்கு விரோதமாக ஒரு பெரிய ராஜா வந்து, அதை வளைந்துக் கொண்டு, அதற்கு எதிராகப் பெரிய கொத்தளங்களைக் கட்டினான். அதிலே ஞானமுள்ள ஒரு ஏழை மனிதன் இருந்தான்; அவன் தன் ஞானத்தினாலே அந்த பட்டணத்தை விடுவித்தான்; ஆனாலும் அந்த ஏழை மனிதனை ஒருவரும் நினைக்கவில்லை''* (14,15). அந்த மனி தனை அந்தப் பட்டணத்தார் மறந்தது ஒரு அநீதி என்று சாலொமோன் விவரித்தார். ஞானமுள்ள மனிதனின் முயற்சிகளுக்கு பரிசளிக்கபடா விட்டாலும், *''மூடரை ஆளும் அதிபதியின் கூக்குரலைப்பார்க்கிலும் ஞானிகளுடைய அமரிக்கையான வார்த்தைகளே கேட்கப்படத்தக் கவைகள்''* (17) என்று அவர் முடித்தார். அவருடைய கருத்தின்படி, ஒரு வேலையை செய்து முடிப்பதற்கு கிடைக்கும் நன்மதிப்பை விட அதைச் செய்து முடிப்பதே முக்கியம்.

சாலொமோன் தம்முடைய பிரசங்கத்தை முடித்தபொழுது, வாலிபர்களுக்கு அவர், *''நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை''* (12:1) என்று புத்திமதியளித்தார். வாலிபப் பருவம் ஆசீர்வாதத்தின் மற்றும் கனிகொடுப்பின் நேரம், எனினும் தவிர்க்க முடியாதபடி முதிர்வயது நெருங்கி வருகிறது என்பதும் அவருக்குத் தெரியும். *''வெள்ளிக்கயிறு கட்டுவிட்டு, பொற்கிண்ணி நசுங்கி... இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாத தற்குமுன்னும் அவரை உன் வாலிபப்பிராயத்திலே நினை''* (6,7) என்று சாலொமோன் ஊக்கமளித்தார். வாலிபப் பிராயத்தில் இருப்பவர்கள் தேவனை எண்ணி தங்கள் வாழ்க்கையை நன்றாக வாழ்வது நல்லது .ஏனெனில் கடைசியில் அவர்கள் அவரை சந்திப்பார்கள்.

எப்படியிருந்தாலும் வாழ்க்கையின் அர்த்தம் அதன் கடைசியிலே காணப்பட்டது என்று சாலொமோன் கண்டு கொண்டார். *''தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர்மேலும் விழுந்த கடமை இதுவே''* (3).

அத்தியாயம் 14

## சாலொமோனின் உன்னதப்பாட்டு

கவிதைப் புத்தகங்களின் கடைசி புத்தகம் சாலொமோனின் உன்னதப்பாட்டு. சாலொமோன் 1005 பாடல்களை எழுதினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது, எனினும் வேத வசனங்களில் நமக்காகப் பாதுகாக்கப்பட்ட ஒரே புத்தகம் இதில் இந்த அன்புப் பாடலாகும். இரண்டு அன்பர்களின் காதலையும் அவர்களது அன்பு உரையாடலை யும் பற்றி எழுதியிருக்கிறது. எபிரெய வாலிபர்கள் தங்களுக்கு முப்பது வயது ஆகும் வரையில் பழைய ஏற்பாட்டில் இந்தப் புத்தகத்தை வாசிக்கக் கூடாது என்று தடை செய்யப் பட்டிருந்தனர்.

ஏவப்பட்டு எழுதப்பட்ட வேதவசனங்களாக இந்தப்புத்தகம் எப்படி அங்கீகரிக்கப்பட்டது என்று நீங்கள் வியப்படையக் கூடும். அந்தக் கேள்விக்கு அநேக பதில்கள் உள்ளன. இதைப்போன்ற ஒரு புத்தகம் மண வாழ்க்கையின் தூய்மையைப் போதிக்கிறது. ஆதியாகமத்தில் மனிதன் தனியாயிருப்பது நல்லதல்ல என்று பார்த்தோம். எனவே அவனை முழுமையாக்க தேவன் பெண்ணைப் படைத்தார். தேவன் அவர்களை ஆணும் பெண்ணுமாகப் படைத்தபொழுது, அவர்களை பாலுறவில் ஒன்று சேர்த்தார். படைப்பின் செய்திப் பிரகாரம், படைத்த பின்பு, தேவன் தாம் படைத்தது நல்லது என்று கண்டார். தேவன் பாலுணர்வை படைத்த போது, பாலுறவு ''மிகவும் நல்லது'' என்று எடுத்துக் கூறினார்.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு பாலுணர்வு மிகவும் நல்லது என்று போதிப்பது மிகவும் முக்கியமானது. நம்முடைய பிள்ளைகளிடம், பாலுணர்வு ஒரு பாவம் என்று மனதில் பதிய வைக்காமல், திருமண உறவுக்காக பாலுணர்வைப் பாதுகாப்பதைப் பற்றிப் போதிப்பது ஒரு சவாலாயிருக்கிறது. பாலுணர்வு தவறு என்று நம்முடைய பிள்ளைகளின் மனதில் நாம் பதிய வைத்தால், அவர்கள் திருமண உறவில் பாலுறவு காரியங்களில் இணக்கமாயிருப்பதை நாம் கேவலப்படுத்துகிறோம். அவர்கள் திருமணம் செய்யும் போது தங்கள்



தனிப்பட்ட ஆசைகளையும், தங்கள் துணையின் ஆசைகளையும் நிறைவேற்றாமல் போகலாம்.

இந்த அன்புப்பாடல், திருமண படுக்கையையும் ''திருமண பேரானந்தத்தையும்'' தேவன் ஆசீர்வதித்து அனுமதித்து. அபிஷேகிக் கிறார் என்று போதிக்கிறது. சாலொமோனின் அன்பின் உன்னதப் பாட்டை வாசிக்கும்போது, திருமண உறவு என்ற அமைப்பில், ஒரு ஆணுக்கும் பெண்ணுக்குமிடையேயுள்ள நெருங்கிய பாலுணர்வு அன்பு, மகிழ்ச்சிகரமாக வெளிப்படுவதற்கான உள்நோக்கம் தேவனால் உறுதிசெய்யப்பட்டிருக்கிறது என்று நீங்கள் கண்டுகொள்வீர்கள்.

பக்தியுள்ள ஆத்துமாக்கள் இந்த சாலொமோனின் அன்புப் பாடலில் ஒரு ஆழ்ந்த அர்த்தத்தைக் கண்டார்கள். அவர்கள் இந்த இரண்டு அன்பர்களின் உறவுக்கும் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கு மிடையேயுள்ள உறவுக்குமிடையே ஒரு திருமண உறவு இருப்பதைக் காண்கிறார்கள். வேதாகமத்தில் உன்னதப்பாட்டு இஸ்ரவேலரின் தேவனாகிய யெகோவாவின் அன்புக்கு கதை ரூபமாக ஒரு உண்மை வரலாற்றைக் கூறுகிறது என்பதற்காக வைக்கப்பட்டிருக்கிறது என்று அவர்கள் நம்புகிறார்கள். புதிய ஏற்பாட்டை நீங்கள் வாசிக்கும் பொழுது, கிறிஸ்துவுக்கும் அவருடைய சபைக்கும் இந்த அன்பின் உறவு கதை ரூபத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று காண்பீர்கள். கிறிஸ்து மணவாளனாகவும் சபை மணவாட்டியாகவும் உருவகப்படுத்தப் பட்டிருக்கிறது (மத்தேயு 25:1-13; வெளி 21:2-17).

### சாலொமோனின் உன்னதப்பாட்டின் தியானப் பிரயோகம்

இந்த அன்புப்பாடலின் கடைசி உருவகம், ஜீவனுள்ள கிறிஸ்து வோடு நமக்கிருக்கும் தனிப்பட்ட உறவுக்குப் பிரயோகப் படுத்தப் படுகிறது. பழைய ஏற்பாட்டில், இஸ்ரவேலர் தங்கள் முழு இருதயத் தோடும் தேவன்மேல் அன்பு செலுத்த வேண்டும் என்று கட்டளையிடப் பட்டிருக்கிறது. கற்பனைகளில் எந்தக் கற்பனை பிரதானமானது என்று இயேசுவினிடம் கேட்டபொழுது, அவர் இந்தப் போதனையை உறுதிப்படுத்தினார் (மத்தேயு 22:35-40). தேவனோடும் கிறிஸ்து வோடும் நமக்குள்ள தனிப்பட்ட நம் சொந்த அன்பு உறவை இந்த இரண்டு அன்பர்களோடுள்ள உறவு, உருவகமாக அழகாக குறிப்பிடுகிறது. சாலொமோனின் உன்னதப்பாட்டைப் பற்றிய இந்த வியாக்கியானமும், பிரயோகமும் இந்தப் புத்தகத்தை வேதாகமத்தின் மிகப்பெரிய தியான நூல்களில் ஒன்றாக ஆக்க முடியும் - அதாவது உயிர்த்தெழுந்த ஜீவனுள்ள கிறிஸ்துவோடுள்ள நெருங்கிய உறவைப் பற்றி அதிகமாக நமக்குப் போதிக்கும் ஒன்றாயிருக்கும்.

## அன்புப்பாடலின் தியான மற்றும் உறவு சம்பந்தப்பட்ட காரியங்கள்

சாலொமோனின் உன்னதப்பாட்டில் மணவாளன் மணவாட்டியை முதலாவது தன் அறைக்குள் கொண்டுவருகிறான் (1:4). அதன்பின் விருந்து மேசைக்கு அழைத்துச் செல்லுகிறான் (2:4). இயேசுவோடு நமக்குள்ள உறவு, வெளிப்படையாகத் தெரியுமுன் நெருங்கிய உறவாயிருக்க வேண்டும் என்று இது அறிவுறுத்துகிறது. இயேசு மலைப்பிரசங்கத்தில் இதை மிகைப்படுத்தினார். பொதுவான இடங்களில் ஜெபத்தை ஏறெடுத்தவர்களையும், வெளிப்படையாக தான தர்மம் கொடுப்பவர்களையும் அவர் குறைகூறினார். ஏனெனில் அவர்கள் ஜெபங்களும், கொடுப்பதும் மனிதனுடைய நன்மைக்கேயன்றி தேவனுடைய நன்மைக்காக ஜெபிக்கப்பட்டு செயல்படுத்தப்படவில்லை (மத்தேயு 6:5-7).

நம்முடைய ஜெபங்கள் தேவனுக்கு நேராக தனிமையில் ஜெபிக்கப்பட வேண்டுமென்றும், நாம் தேவனுக்காகக் கொடுப்பது யாருக்கும் தெரியாதபடிக் கொடுக்கப்படவேண்டும் என்று எழுதினார்.

சாலொமோனின் உன்னதப்பாட்டில் அந்த இரண்டு நேசர்களுக்குமிடையிலுள்ளத் தொடர்பு முறிக்கப்படும் போது எந்த வேளையிலும் அது மணவாளனால்) ஒருபொழுதும் முறிக்கப்படவில்லை. இந்தச் சித்தரிப்பு கிறிஸ்துவோடு நமக்குள்ளத் தொடர்பையும் சுட்டிக் காட்டுகிறது. அவரோடு நம்முடைய தொடர்பு தொடர்ச்சியானது. எனினும் அது உடைக்கப்படும் போது, நாமே அதை உடைக்கிறோம். கிறிஸ்து அதை உடைப்பதில்லை. கிறிஸ்துவோடு நம்முடைய உடைந்த ஐக்கியம் ஏன் உடைந்தது? அது அவரால் ஏற்பட்ட தோல்வியல்ல. நாம் அவருக்கு உண்மையுள்ளவர்களாய் இல்லாத காரணத்தினால் விளைந்ததாகும்.

சாலொமோனின் உன்னதப்பாட்டில் மணவாளன் மணவாட்டியின் அறைக்குப் போகும்போது, அவன் வெளியே நிறுத்தப்படுகிறான். ஏனெனில் அவளுக்கு வாசனை திரவியங்களை பூசி, இன்னும் இதர அழகு சிங்காரங்களின் மீது அவளுடைய கவனம் திருப்பப்படுகிறது. கடைசியாக அவள் கதவைத் திறக்கும் போது, அவர் போய்விட்டார் (5:1-6). நாம் அடிக்கடி நம்முடைய அபிஷேகத்தோடு அல்லது ஆவியின் வரங்களோடு தரித்திருந்து, அந்த ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் கொடுத்தவரோடுள்ள உறவில் கவனம் செலுத்தாமல் இருந்துவிடுகிறோம். பரிசுத்த ஆவியானவரின் இந்த ஆவிக்குரிய கிருபையின் அற்புத வெளிப்பாடுகளில் முழுக்கவனம் செலுத்தி, நம்மோடு ஒரு நெருங்கிய உறவை ஏற்படுத்த வேண்டும் என்ற ஆவலுள்ள மணவாளனை கதவுக்கு வெளியே நிற்க வைக்கிறோம்.



சாலொமோனின் உன்னதப்பாட்டில், மணவாட்டி தன்னுடைய மணவாளனின் வேலையை புரிந்து கொள்ளுகிறாள்: *''அதிகாலையிலே திராட்சத்தோட்டங்களுக்குப் போவோம்; திராட்சக்கொடி துளிர்த்து அதின் பூ மலர்ந்ததோ என்றும், மாதளஞ்செடிகள் பூப்பூத்ததோ என்றும் பார்ப்போம்'''* (7:12). யோவான் சுவிசேஷத்தில் இயேசு பேதுருவுக்குச் சொல்லியபடி, இயேசுவுக்கு நமது அன்பை அவருடைய மந்தைமேல் அக்கறை காட்டுவதாலும், அவருடைய ஆடுகளை மேய்த்து, அவர் அதிகமாக அன்பு காட்டும் ஆடுகளுக்கு அன்பு காட்டுவதாலும் நாம் வெளிப்படுத்த முடியும் (யோவான் 21:15-17).

இந்த அழகிய கவிதையின் அடிப்படைக் கோரிக்கை என்ன? சாலொமோனின் அன்புப்பாடல், மிகவும் முக்கியமான உணர்வான அன்பைப்பற்றி இருதயத்தின் மொழியைப் பேசுகிறது. நமக்கு எப்பொழுதும் இருக்கும் மிகவும் முக்கிய அன்பு உறவையும் - கிறிஸ்துவோடுள்ள நம்முடைய உறவையும் நம்மீதான அவருடைய அன்பையும், அவருடைய அன்புக்கு நம்முடைய பதிலை உருவகமாகக் காட்டுவதையும் இது விவரிக்கிறது.

## செயல்படுத்துதல்

அன்பின் தனிப்பட்டக்குணத்தை புரிந்துகொள்ள, நாம் தேவனுடைய அன்போடு துவங்க வேண்டும். புதிய ஏற்பாட்டில் தேவனுடைய அன்பை வெவ்வேறு பகுதிகளாகப் பிரித்து வெளிக் காட்டப்பட்டிருப்பதைக் காண்கிறோம். அப்போஸ்தலர் பவுல், அப்போஸ்தலர் யோவான் ஆகியவர்களின் அன்பு அதிகாரத்தில், தேவனுடைய அன்பை அழகாக எடுத்துக்கூறுகின்றனர் (1 கொரிந்தியர் 13; 1யோவான் 4:7-21). யோவானும் பவுலும் தேவனுடைய அன்பைப் பற்றி நமக்குக் கூறுகிறார்கள்: விவரிக்க முடியாதவர், ஈடுசெய்ய முடியாதவர், இணையற்றவர், அழிக்க முடியாதவர், நிபந்தனையற்றவர், எதிர்க்கக்கூடாதவர், உள்ளுணர்வுள்ளவர், ஆவிக்குரியவர், நித்தியமானவர் மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்டவர்.

இந்த அன்பின் விசேஷ குணத்தோடு நாம் அன்புகூரும் போது, நம்முடைய துணைகள், நம்முடைய பிள்ளைகள், நம்முடைய பெற்றோர்கள், நம்முடைய பகைவர் போன்றவரிடம் அதிகமாக அன்பு செலுத்தும் திறன் வெளிப்படும். சாலொமோனின் உன்னதப்பாட்டு, கிறிஸ்துவோடு நாம் பகிர்ந்து கொள்ளும் அன்பு தனிப்பட்டதும், நெருக்கமானதும், பிரத்தியேகமானதும், தீவிரமானதும், சுயநலமற்றதும், ஒருவருக்கொருவருக்கானதும், திருப்தியளிப்பதாகவும், பக்தி விருத்தி உண்டுபண்ணுவதும், அச்சமுறுத்தாததும், கனிதருவதும், தணியச் செய்யாததுமாயிருக்கிறது எனக் கூறுகிறது.

**Job through Song of Solomon**
Booklet - 5
Tamil

**India Bible Literature**
67, Beracah Road, Kilpauk
Chennai - 600 010.

*(For Private Circulation Only)*

ICM/Tam-5/2003